ஆவணி
2024



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆவணி - 2024

படைப்புக்கள் அனுப்ப :


mullaiamuthan1954@gmail.com
mahendran1954@hotmail.com


படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 10 பவுண்ட்

- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

காற்றுவெளி மின்னிதழின்(2024) ஆவணி இதழுடன் சந்திக்கிறோம்.இதுவரை எம்முடன் பயணித்த அத்தனை படைப்பாளர்களுக்கும்,வடிவமைப்பாளர்களுக்கும் எமது நன்றி.

காற்றுவெளியின் வாசகர் பரப்பை இன்னும் விரிவுபடுத்தும் நோக்குடன் அவ்வப்போது அச்சிதழாகவும் கொண்டுவர உத்தேசித்துள்ளோம்.சந்தா விபரம் பற்றிக் கேட்பவர்களுக்காக இதழினுள்ளே விபரங்களைத் தந்கொண்டிருக்கிறோம்.

காற்றுவெளி இதுவரை விளம்பரங்களை நம்பியிருக்கவில்லை.ஓரிரு விளம்பரங்களுக்கான பணம்கூட பலவருடங்களாகியும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.அதனால் அது பற்றிச் சிந்திப்பதில்லை.இலக்கிய இதழை விளம்பர இதழாக ஆக்கிவிடும் மனநிலையிலும் இல்லை.படைப்பாளர்களும்,வாசகர்களும் புரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.ஆரம்ப இதழ்களில் தொடர்ச்சியாக இலவச விளம்பரங்களையும் இணைத்தும் வந்துள்ளோம். எமக்கேற்பட்ட அசௌகரியங்களால் அவற்றையும் தவிர்த்துவிட்டோம்.

காற்றுவெளியின் சிறப்பிதழ் வரிசையில் இங்கிலாந்து சிறப்பிதழ் ஒன்றைக் கொண்டுவரவுள்ளோம். அதற்கான படைப்புக்களின் சேர்க்கை நிறைவடைந்ததும் வெளியீட்டிற்கான ஆவன செய்யப்படும்.முடிந்தவரை முகநூல்,இணையம்,மின்னஞ்சல் மூலம் சிறப்பிதழ்கள் பற்றிய தகவல்களை வெளியிட்டும்,தெரிவித்தும் வருகிறோம்.

உலகின் பல பாகங்களுக்கிடையே யுத்தம்,நோய்,இடப்பெயர்வுகள் நிகழ்ந்தாலும்,தேர்தல்களும் நடந்து ஆட்சி மாற்றங்களும் நிகழ்ந்துகொண்டே வருகின்றன. எனினும் உலக வல்லாதிக்க சக்திகளின் போக்கில் ஏதும் மாற்றங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.முதலில் அவர்களில் ஏற்படும் மாற்றங்கள்(வெளிவிவகாரக் கொள்கை..எனப் பல) விடுதலைக்காக ஏங்கும் சிறிய நாடுகள்,இனக்குழுமங்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய விடுதலையை,வாழ்க்கையை பெற்றுக்கொள்ளமுடியும்.

ஈழத்துக்கும் பொருந்தும்.

நம்பிக்கையுடன்,

சோபா

*01/08/2024*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

1. கோ. கோகுலநாதன்(மட்டக்களப்பு)
2. தங்கேஸ்
3. ஏ. எம். கஸ்புள்ளா
4. கோ. தனுசன்
5. மெய்யன் நடராஜ்
6. சாந்தாதேவி (சென்னை)
7. இளையவன் சிவா
8. சுடர்நிலா
9. நேசன் மகதி
10. இரா. மதிராஜ்
11. ஞா. முனிராஜ்
12. கவிஞர் சாய்சக்தி சர்வி
13. அ.சீனிவாசன்
14. கி.கவியரசன்
15. கலித்தேவன்
16. பெ.விஜயலட்சுமி
17. டீன் கபூர்
18. பா.சிவகுமார்
19. பெரணமல்லூர் சேகரன்
20. வில்வரசன்
21. தங்கராஜா.சிவபாலு

**சிறுகதைகள்**

1. மழைக்குருவி ~
2. ரகுநாத் வ (மதுரை)
3. கமலினி கதிர் (சுவிற்சலாந்து)
4. நௌஷாத் கான் (அபுதாபி)
5. கவிஜி
6. சுந்தரிமணியன், புதூர்
7. பா. குரு
8. கவிஞர் இரஜகை நிலவன்
9. உமா சௌந்தர்யா
10. பழனி குமார்
11. திருமலை சுந்தா

**கட்டுரைகள்**

1. திரு.சமயக்கண்ணு (மதுரை)
2. இரா.சீ.பாலகுமார். M A

**மொழி பெயர்ப்பு**

1. தமிழில்: க.நா.சுப்ரமணியம் (க.நா.சு) ஆங்கிலத்தில்: அனாமிகா ரிஷி

# உயிருள்ள படிக்கட்டுகள்

மழைக்குருவி



பத்து வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஊருக்கு வந்திருக்கிறேன். அப்பா இறந்த பிறகு அம்மாவை அழைத்துக்கொண்டு மனைவி மக்களோடு சென்னையிலேயே இருந்தாகிவிட்டது. இப்போது நான் மட்டும் அத்தை வீட்டிற்கு வந்திருக்கிறேன்.

வெள்ளை சட்டையும் வெள்ளை வேட்டியும் அணிந்து நான் வெளியே வருவதைப் பார்த்த அத்தை சற்றே திடுக்கிட்டு சுதாரித்தாள்.

கண்களில் நீர் பனிக்க, "அப்பா மாரியே இருக்கல.." என்றாள்.

அப்பா எப்பவும் ஒயிட் அண்ட் ஒயிட்தான். கலர் சட்டைகள், பேண்ட்கள் அணிந்து ஊரார் கண்டதில்லை. அத்தனை கருப்பான மனிதர் வெள்ளை உடை அணியும் போது, உடைகள் கூடுதல் வெள்ளை காட்டும். அவரும் கூடுதல் கருப்பாக தெரிவார். வண்ண உடைகள் அணிய நான் வற்புறுத்தும் பொழுதெல்லாம், "நெறத்துல நெறத்தத் தவுத்துட்டு வேற என்னடா இருக்கு..?" என்பார். அவரை மடக்குவதற்காக நான், "நெறத்துல என்னா இருக்கா.. ந்தா பாருப்பா வானம்.. பகல்ல ஊதாவாயிருக்கும்.. ராத்திரி கருப்பாயிரும்.. காலைல மஞ்சளாயிருக்கும்.. சாய்ங்காலம் செவப்பாயிரும்.. வானம் ஒரே கலர்ல இருந்தா பாக்க நல்லாருக்குமா.. " எனும்போது..

"வெறும் வானத்த வச்சு நாக்கு வளிக்கவால.. வெள்ளயா மேகம் வேண்டாமா உசுரு சீவிக்க.." என்பார். மேலும், "கலர் கலரா இருக்க நாம என்ன வண்ணத்துபூச்சியால.." என்று வேறு விதமாய் என்னை மடக்குவார்.

வீட்டுச் சுவருக்கு கூட வெள்ளையத் தவிர வேறு வண்ணம் பூசியதில்லை.

கேட்டால், "அந்தக் காலத்துல பேரே வெள்ளயடிக்கதுதாம்ல.. வெள்ளயடிக்கதுன்னு சொல்லிட்டு கலரடிக்கறதுலாம் என்னா மாரி மடத்தனம்.." என்பார்.

ஊரில் இருந்து டவுனுக்கு நடந்தே வந்தேன். நிறைய பேர் அண்ணாச்சியைப் பார்த்த மாதிரியே இருக்குதே என்று ஆனந்தம் கொண்டனர். டவுனில் தேநீர் கடை வைத்திருக்கும் தமிழ் அண்ணன், என்னைப் பார்த்ததும் மிரண்ட விழிகளோடு தேநீர் ஆத்திக் கொண்டிருப்பதை நிறுத்தினார். அவரும் என்னைப் போலவே வெள்ளை சட்டை வெள்ளை வேட்டியில் இருந்தார்.

" தம்பி நீங்க.. காளியண்ண..." என்று இழுத்தார்.

" நான் அவ்வோ மகன்தான்.." என்ற போது வாயெல்லாம் பல்லாக கண்கள் கலங்கினார். கடையை விட்டு வெளியே வந்து என் இரு தோள்களையும் பாந்தமாய் பிடித்து உலுக்கினார்.

"எதாச்சும் சாப்புடுங்க.." என்று இரண்டு வடைகளை ஒரு தாளில் சுருட்டி என் கைகளில் திணித்தார். வேண்டாம் என்று தடுத்துப் பார்த்தேன்.

"அப்புடிச் சொல்லலாமாய்யா.. அண்ணாச்சி எங்கடைக்கு வந்தாவோன்னா ரெண்டு வட.. ஒரு கடுங்காப்பி.. பதிவுல்லா.. " என்றார். ஒரு தேனீர் கடையில் தேனீர் தயாரிப்பவர் பளீரென்ற வெள்ளை உடையில் இருப்பது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது.

ஒரு வடையை பல்லால் கடித்து பிய்த்த நேரம் பெருஞ்சத்தமாய் அய்யோ என ஒரு அவலக் குரல் கேட்டது. திரும்பிப் பார்ப்பதற்குள் அந்த மெடிக்கல் கடை வாசலில் ஒரு பெரிய மனிதர் கீழே நிலை குலைந்து விழுந்து கிடந்தார். பக்கத்து கடைக்காரர்கள் அவரைத் தூக்கி நிறுத்தினார்கள். கையையும் காலையும் நன்றாக உதறி விடுங்கள் என்றார்கள்.

கையையும் காலையும் உதறினால் கையும் காலும் உதிர்ந்து விழுந்து விடுமோ எனும்படியான அச்சத்தில் உறைந்து போய் இருந்தார் கீழே விழுந்ததவர். ஆட்டோ பிடித்து அவரை அனுப்பி வைத்தார்கள்.

சந்திப் பிள்ளையார் கோவில் வாசலுக்கு சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த ஒரு கிழட்டுப் பைத்தியக்காரி, ஆட்டோவில் அய்யோ அம்மா என முனகியபடியே சென்று கொண்டிருந்தவரைப் பார்த்துச் சிரிசிரியென சிரித்துக் கொண்டிருந்தாள். அந்தக் கிழட்டுப் பைத்தியக்காரியைக் கண்டதும் நான் பெரிதாய் அதிர்ந்தேன். நான் பள்ளிக் காலங்களில் இருந்த போதே அந்தப் பைத்தியக்காரி கிழடாக இருந்தாள். இன்னமும் அவள் சாகவில்லை. மேலும் அதே கிழடாகவே இருந்தாள். இந்த உலகத்தில் கிழட்டுக்குப் பிறகு வேறு முதுமை கிடையாது போலும்.

"அண்ணே.. இந்த ஆச்சி இன்னமும்

இருக்காவளா..'' என்று ஆச்சரியமாய் தமிழண்ணனை கேட்டேன்.

“ பைத்தியக்காரவுளுக்கு சாவு கெடயாதுல்லா.. “ என்றார்.

மேலும் அவரே, “ இங்ஙென ஒரு வெறி நாய் கெடக்கு.. யாரக் கண்டாலும் வள்ளுன்னு கொலச்சு நம்மளக் கொல நடுங்க வச்சுரும் பாத்துக்கிடுங்க.. வெரட்டுனம்னா மேல பாஞ்சுரும்.. அந்தப் பைத்தியக்காரி சும்மா சிரிச்ச மேனியா கையாட்டுனா போதும்.. வாலாட்டிட்டே போய் அவ மடிலேயே போய் படுத்துக்கிடும் பாத்துக்கிடுங்க.. இதெல்லா என்னான்னு சொல்தது..'' என்றார்.

நல்ல மனநிலையில் இருப்பதுதான் இந்த மனித குலத்தின் மிகப்பெரிய சாபக்கேடு போலும் என்று நினைத்துக்கொண்டேன். ஒரு வெறி பிடித்த முரட்டு நாயை பலம் கொண்டு அடக்காமல் சிரித்த முகம் கொண்டு அடக்குவதற்கு அப்பட்டமான கடவுளின் சாயல் அல்லவா வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் போதே தமிழண்ணன் சொன்னார்,

“பைத்தியக்காரவுளும் கடவுளும் ஒண்ணு தம்பி..''.

ஒரு நொடி எனக்கு உடம்பெல்லாம் அதிர்ந்து புல்லரித்துப் போனது.

“ அது ஏண்ணே.. கீழ உழுந்தாளுவளப் பாத்து அந்த ஆச்சி அப்புடிச் சிரிக்காவோ...?'' என்றேன்.

“ எனக்கும் அது ரொம்ப நாள் சந்தேகந்தான் தம்பி.. அதாவது கீழ உழுந்தாளுவளப் பாத்து அந்தப் பைத்தியம் இப்புடி சிரிக்காளா.. இல்ல அவ சிரிக்கதுனால ஆளுவ கீழ உழுதாவளான்னு..'' என்றபோது நான் புருவம் அகல விரித்தேன்.

“ உண்மதான் தம்பி.. அந்தக் கடையோட நடைல வழுக்கி வழுக்கி உழுந்தவனுவோ ஒரு முந்நூறு பேராச்சும் இருக்கும்லா.. யாராவது கீழ விழும்போது பைத்தியக்காரி சிரிப்பா.. இல்லன்னா பைத்தியக்காரி சிரிக்கப்போ பாருங்க.. அங்ஙென ஒருத்தன் உழுந்தடிச்சி கெடப்பான்..''

“ அது ஏன் அப்புடி சிரிக்கீயன்னு யாராச்சும் கேட்டீயளா..? “

“ நாய்க்கடி வாங்கதுக்கா.. அந்த நாயி எப்பயும் அவ கூடதான் இருக்கும்.. அவ கோவப்படுத மாரி என்னதா சொல்லிட்டோம்னா அவ்ளதான்..நமக்கு பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறதுனு அர்த்தம்.. ஒரு கொல கொலக்கும் பாருங்க.. நாடி நரம்புலாம் அந்துரும்..

*(கொஞ்சம் நேரம் அமைதிக்குப் பிறகு..)* அந்தப் பைத்தியம் எப்பயாச்சும் இங்க வருவா.. ஒரு பன்னும் டீயும் கேப்பா.. பன்னுல பாதிய காக்காக்கு போட்டுருவா.. கடைசி கொஞ்சம் டீய தரைல கொட்டீருவா.. ஒசில டீ குடுத்தா தரைலயா ஊத்துதனு ஒரு தடவ கோவமா கேட்டதுக்கு.. ஈ எறும்புக்குலா ஒங்கொப்பனா சோறு போடுவான்னு திருப்பிக் கேட்டுட்டா தம்பி.. அன்னிக்கு ராவல்லாம் கொடச்சலாயிட்டு.. ஈ எறும்புலா நெனச்சு பாக்க இந்த ஒலகத்துல ஒரு ஆள் இருக்கு நெனச்சம் பாருங்க.. ஒரே அழுவையா வந்துட்டு.. அன்னிலருந்து கட தொறந்து மொத டீய அங்ஙென கொட்டி விட்ருவன்.. ஈ எறும்புலா மொச்சுட்டு கெடக்கும்.. ஆனா அதுலயும் ஒரு மனக்கஷ்டம்.. ஈ எறும்புலா மொச்சுட்டுருக்கத பாத்துட்டு அவ டீ வேணாம்னுட்ருவா.. “ என்றார்.

ஈ எறும்பின் மீதெல்லாம் அக்கறை கொள்ள வேண்டும் என்றால் நன்றாக மனநலம் குன்றிப் போயிருக்க வேண்டும் என்று மனதில் குறிப்பெடுத்துக் கொண்டேன். அந்த நேரம் அந்த வெறி பிடித்த முரட்டு நாய் என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறே மெதுவாய் வந்து கொண்டிருந்தது.

“ தம்பி.. அந்த நாய கண்டுக்காதீய.. வேற எங்காச்சும் பாருங்க.. கண்டுக்காம போயிரும்.. “ என்றார். நான் வேண்டுமென்றே அதையே பார்த்தேன். கோரைப்பற்கள் தெரிய லேசாக உறுமியபடியே வந்த அது, என் அருகே வந்ததும் ஒரு மாதிரி ஒலி எழுப்பி வாலாட்டியது.

“தம்பி.. இது வாலாட்டுத ஸ்டைல பாத்தா நீங்க முழு பைத்தியம் மாரில்லா இருக்கு..'' என்றார்.

இருவரும் வெடித்துச் சிரித்தோம். அந்த நாய் அவசரமாக வேறு திசை நோக்கி ஓடியது. தமிழண்ணன் கடைக்குள் சென்று கடுங்காப்பி தயாரித்து வந்து என்னிடம் நீட்டினார்.

“என்ன.. கடுங்காப்பி தாரீய..'' என்று கேட்டபோது டக்கென்று லேசாக தன் நாக்கை கடித்துக் கொண்டார்.

“அப்பா எப்பவும் கடுங்காப்பிதான் குடிப்பாவோ.. அதே நெனப்புல.. ஒரு நிமிஷம் தம்பி.. பால் கலந்துர்றேன்..'' என்ற போது.. இருக்கட்டும் என்று காப்பியை வாங்கிக் கொண்டேன்.

புன்னகைத்தபடியே “அப்பா கலர்லேயே இருக்கு..'' என்றேன். தமிழண்ணன் சிரிக்காமல் என்னைப் பார்த்தார்.

“ஆனா.. அப்பா மனசு நேரத்துல ஒரு பால் போடவே முடியாது..'' என்றார். எனக்கு ஒரு மாதிரியாகிப் போனது.

“உங்கப்பா கருப்பாருக்கலாம்.. ஆனா காளியண்ணன் கருப்பு கெடயாது..'' என்றார்.

தமிழண்ணனுக்கும் அப்பாவிற்கும் ரொம்ப நாள்

நட்பு இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

“ஒரு டீக்கட இவ்ளோ சுத்தமா இருந்து நான் பாத்ததேல்லண்ணே..” என்றேன்.

“அப்பல்லாம் கட ஒரே அசிங்கமாதான் இருக்கும். எங்னெனப் பாத்தாலும் சீரட்டு துண்டு.. பாக்கு கற.. டீ காப்பி கற.. சொவரு பூரா பிசுபிசுப்பு.. வேல செய்யவே எரிச்சலாருக்குனு அப்பாட்ட ஒரு வாட்டி சொன்னேன்.. வெள்ள சட்ட வெள்ள வேட்டி உடுத்திக்கிடுங்கய்யா.. எல்லாஞ் சரியாயிரும்னாவோ.. அதுக்கிதுக்கும் என்ன சம்மந்தம்.. ஒண்ணும் புரியல.. போட்டுக்கிட்டேன்... ஒரு வாரம் கழிச்சுதான் ஒணர்வு வந்துது.. வெள்ள வேட்டி சட்ட அழுக்காயிரக் கூடாதுனுட்டு எல்லாத்தயும் தொடக்க ஆரம்பிச்சிருக்கன்.. இப்பலாம் வேலயிலயே ஒரு பக்குவம் வந்துட்டு பாத்துகிடுங்க.. “ என்றார். நான் புன்னகைத்தேன்.

“வெள்ள வேட்டி வெள்ள சட்டங்கிறது ஒரு துணி கெடயாது தம்பி.. அது ஒரு கொணாதிசயம்.. “ என்றார். மனது ஆர்ப்பரித்தது. கடந்த ஒன்றரை மணி நேரமாக நான் உணர்ந்து கொண்டிருந்த விஷயமும் அதுதான்.

எங்கோ ஓடிச் சென்றிருந்த அந்த வெறி நாய் அந்த கிழட்டுப் பைத்தியக்காரியை தமிழண்ணன் கடைக்கு அழைத்து வந்தது. அந்தக் கிழட்டுப் பைத்தியக்காரி உடுத்தியிருந்தது சேலையா தாவணியா பாவாடையா ஆண்கள் சட்டையா வடநாட்டு பெண்கள் உடையா என்று கண்டறிய முடியவில்லை. எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் உடுத்தியிருந்தாள். ஆயினும் அழுக்கைத்தான் அதிகமாய் உடுத்தி இருந்தாள். வந்தவள் என்னையே பார்த்தாள். அருகே வந்தாள். ஒரு குப்பை லாரியின் நாற்றத்தை தன்னிடம் கொண்டிருந்தாள். சிரித்தாள். அவ்வளவு வெள்ளைப் பற்கள் அவளுக்கு.

என்னை பார்த்து, “ரெகு விலாஸ்ல ஒரு பொங்கல் வாங்கித்தா..” என்றாள்.

“ஏன்.. ஆரிய பவன்ல வாங்கினா சாப்பிட மாட்டியோ.. “ என்றார் தமிழண்ணன் நக்கலாக.

தமிழண்ணனைப் பார்க்காமல் என்னையே பார்த்தபடி அவள்..

“அங்க முந்திரி கம்மியா போடுவான்..” என்ற போது கண்கள் அகல விரித்து அவளை மேலும் கீழும் பார்த்தார் தமிழண்ணன்.

மேலும் அவளே, “ரெகு விலாஸ் பொங்கல் மாரி வருமாடே.. ஆரிய பவனாம்..

பைத்தியக்காரி கூட சாப்ட மாட்டா..” என்றாள்.

இங்கே யாருக்குப் பைத்தியம் என்பது போல தமிழண்ணனும் நானும் ஒரு கணம் திகைத்துப் போனோம். அந்த நாய் அவள் உடுப்பைப் பிடித்து இழுத்தது. கீழே நாயைப் பார்த்தாள். அது ஒரு மாதிரி ஒலி எழுப்பியது. அவளிடம் அது ஏதோ கூறுகிறது என்பதை அறிந்த தமிழண்ணனும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். நாய் மொழியைக் கேட்டவள் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்துச் சொன்னாள்..

“அப்பா ஒங்கூட பேசணும்னாவோ.. நைட்டு ஒரு மணிக்கு வாரியா..” என்றாள்.

தமிழண்ணன் பெரிதாய் திடுக்கிட்டார். அப்பா இறந்து பத்து வருடங்கள் ஆகியிருந்தன. பதறியபடியே கடைக்குள் போய்விட்டார் அண்ணன்.

நான் அந்த கிழட்டுப் பைத்தியக்காரக் கிழவியிடம் கேட்டேன்.

“ஒங்களுக்கு அப்பாவத் தெரியுமா..?”

“செத்துப்போனவோ எல்லாரயும் தெரியும்..” என்றாள்.

“தம்பி.. பால்லாம் தெறஞ்சுரும் போலருக்கு.. தயவு செஞ்சு அவள அங்குட்டு கூட்டிட்டுப் போயிருங்க..” என்றார் அண்ணன் பதற்றமாய். அவரது பதற்றம் எனக்கு சிரிப்பைத் தந்தது.

“நான் போய் பொங்கல் வாங்கிட்டு வர்றன்..” என்றேன் அவளிடம்.

அவள் நாயைக் காண்பித்து, “இதயும் கூட்டிட்டு போ..” என்றாள்.

“இது எதுக்கு..” என்றேன்.

“இது மந்திரக்கோல் மாரி.. ரத வீதியில ஒனக்கு எல்லாத்தயும் இனாமா வாங்கித் தரும்..” என்றாள்.

பார்ப்பதற்குத்தான் அவள் ஒரு பைத்தியக்காரி போல் இருந்தாள். பைத்தியத்தின் ஒரு சொல்லையும் அவள் சொல்லவில்லை. தேர்ந்த சொல்லாட்சி அவளிடமிருந்தது. கடைந்தெடுத்த சொற்களை கைவசம் வைத்திருந்தாள். அனாவசியமான அவசியமற்ற ஒரு சொல்லையும் அவள் பயன்படுத்தவில்லை அல்லது பேசுவதில்லை என்று எனக்குப் பட்டது.

மேல ரத வீதியெங்கும் மிரண்டு போனார்கள் அந்த வெறி பிடித்த முரட்டு நாய் என்னுடன் சாதுவாய் வருவது கண்டு. வழியில் மேலும் இரண்டு பைத்தியங்களை வேறு பார்த்துவிட்டேன். ஒரு இளம்பெண் பைத்தியம் எங்களைப் பார்த்ததும் சாலையில் உட்கார்ந்திருந்தது

திடுமென எழுந்து ஒரு சல்யூட் வைத்தது. அது எனக்கானதா அல்லது நாயிற்கானதா என்பது தெரியவில்லை. இன்னொரு பைத்தியக்காரக் கிழவர் என்னை பார்த்து முகமலர்ச்சியோடு அருகே வந்து, "வா வா வா... இப்பதான் வாரியா..!!" என்றார். இந்த உலகத்தைக் காக்க வந்த ரட்சகனை வரவேற்பது போல என்னை வரவேற்கிறார்களே என்று எண்ணிக் கொண்டேன்

எனது ஊரே எனக்கு விசித்திரமாக பட்டது. ஒரே ஒரு உலகம்தான். ஆனால் பைத்தியங்களுக்கு வேறாகவும் நமக்கு வேறாகவும் எப்படி இருக்கின்றது என்பதை நினைத்துப் பார்க்க பார்க்க மிகவும் அச்சமாக இருந்தது. அந்த அச்சம் புதிதாக மூன்றாம் உலகம் ஒன்றினை வேறு சிருஷ்டித்தது. அது மேலும் அச்சமாக இருந்தது.

ரெகு விலாசில் பொங்கல் 82 ரூபாய் போட்டு இருப்பது கண்டு என் காதுக்குள் குலவைச் சத்தம் கேட்டது. பார்சல் வாங்குமிடத்தில் சர்வரிடம், "என்னங்க பொங்கல் 82 ரூவானு எழுதிருக்கு.." என்று சர்வரிடம் பொறுமலோடு கேட்டேன். "ஏன் அப்புடி எழுதிருக்குனா.." என்று வார்த்தைகளை இழுத்தவன் கொஞ்சம் இடைவெளி விட்டு, "பொங்கல் 82 ரூவா.. அதான்.. " என்றான். 'அட மலக்கொரங்கே..' என்று மனதிற்குள் திட்டினேன். அவன்தான் வந்து பில்லும் போட்டான். காசு கொடுத்த போது வேண்டாம் என்றான். ஏன் என்றேன்.

"அந்தப் பைத்தியந்தான் எப்பயும் இந்த நாயோட வரும். இப்ப நீங்க வந்ததுருக்கீய.." என்றான் ஒரு வெள்ளை வேட்டி சட்டை உடுத்திய மனிதன் என்றும் பாராமல். பார்சலுடன் ஹோட்டலை விட்டு சாலையில் இறங்கி நடக்கும் பொழுது ஓட்டல் வாசலில் இருந்து கத்தினான்.

"சும்மா தாரான்ட்டு நெதமும் நாயோட வந்துராதீய.." என்றான்.

நான் நாயை கீழே குனிந்து ஒரு முறை பார்த்துவிட்டு பின்னர் அவனிடம் கேட்டேன்.

"நாய்ட்டதான சொல்தீய.."

பட்டாசு போல படபடத்து சிரித்தான்.

பார்சல் வாங்கிவிட்டு சந்திப் பிள்ளையார் கோவிலை நெருங்கியபோது அந்த கிழட்டுப் பைத்தியக்கார ஆச்சியைக் காணவில்லை. கோவில் ஐயரிடம் விசாரித்தேன்.

"கலெக்டரேட்ல ஒரு சின்ன வேல.. சில பல பைல்கள்ல சைன் பண்ணனும்னுட்டு கூட்டிட்டுப் போயிருக்காவோ.." என்றபோது நான் ஜெர்க்கானேன்.

"ஓய்.. அதுவே ஒரு பைத்தியம்.. அதப்போய் தேடிக்கிட்டு.. எங்ஙெனயாச்சும் படுத்துக் கெடக்கும்.. போமய்யா போம்.." என்றவர் என் கையிலிருந்த பார்சலை பார்த்ததும், "ரெகு விலாஸ் பொங்கலா.." என்று கேட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டார்.

"எங்க அப்பா காலத்துலருந்தே கோவில்ல வேல பாக்கேன். நாங்கூட ரெகு விலாஸ் பொங்கல்லாம் இதுவர சாப்டது இல்ல.." என்று ஏங்கினார்.

"ஏன்..?" என்றேன்.

ஏக்கப் பெருமூச்சுவிட்டாலும் அவர், "நம்ம மகேசு கடைல 82 ரூவாய்க்கு 8 பொங்கல் சாப்ட்ருவனே.. பைத்தியக்காரந்தான் ரெகு விலாஸ்ல சாப்புடுவான்.."என்றார். நான் முகமெல்லாம் மலர்ந்தபடியே, "கரெக்ட்டுங்க.." என்றேன். அவரும்,"அட ஆமால்ல.." என்றபடியே தொந்தி வயிறு குலுங்க சிரித்தார்.

மறுபடியும் தமிழண்ணன் கடைக்கு போனேன். பொங்கல் பார்சலை அவரிடம் கொடுத்து, "அந்த ஆச்சி வந்தா கொடுத்துருதீயளா.." என்றேன். அவர் வடிவேலு குரலில், "யய்யாடி.. பயங்கரமான பொறுப்பாருக்கய்யா.." என்று சிரித்தபடியே வாங்கிக் கொண்டார். கல்லாவில் கைவிட்டு 17 ரூபாய் சில்லறை எடுத்து என் சட்டைப்பையில் திணித்தார்.

"என்னதுணே இது.." என்ற போது ஒரு குழந்தை போலச் சிரித்துச் சொன்னார்..

"பத்து வர்ச கடன்.. அப்பாக்கு நான் தரவேண்டிய சில்ற பாக்கி.." என்றார்.

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் என்று நினைத்தேன். 'டமாரெ'ன்று வானத்தில் பேரிடி ஒன்று முழங்கியது. சடசடவென தூறல் விழ ஆரம்பித்தது.

இடி கீழே யாரின் மேலோ விழுந்துவிட்டது போல ஆ..வென ஒரு அலறல் கேட்டது.

அதன்பின்னேயே 'தொம்..'மென ஒருவர் கீழே விழும் சத்தமும்.

தூரத்தில் எங்கோ ஒரு கிழவியின் அரக்கச் சிரிப்பொலி.

என்ன எழவுடா இது என்றபடியே பக்கத்து கடைக்காரர்கள் அந்த அம்மாளைத் தூக்கி நிறுத்தினார்கள். தமிழண்ணன் வேலையை அப்படியே நிறுத்திவிட்டு, "ஒரே நாள்ல ரெண்டு விக்கெட்டா.." என்று கேட்டபடியே எதிர்த்திசையில் கண்கொட்டாமல் பார்த்தார். அந்த அம்மாள் நிற்கமுடியாமல் சுழன்று சுழன்று தளர்ந்தாள். ஆட்டோ பிடித்து அனுப்பி வைத்தார்கள்.

அதிர்ச்சியும் ஆச்சரியமும் எனக்குத் தாள மாட்டாமல்

பொங்கியது. மாய மந்திரமாக அல்லவா இருக்கிறது. அந்தப் படிக்கட்டு என்ன அப்படியா வழுக்குகிறது என்று மிரட்சியோடு தமிழண்ணனைக் கேட்டேன். ஒரு நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டு பிறகு தமிழண்ணன் சொன்னார்.

“அந்த மெடிக்கல் கடயோட படிக்கட்டுல ஏதோ இருக்கு தம்பி..”

“ஏதோன்னா..”

“அந்தப் படிக்கட்டுக்கு உசுரு இருக்கு..”

“படிக்கட்டுக்கு உசுரா..”

“அதாந்தம்பி.. அதான்..” என்றார்.

நான் ஒன்றும் புரியாமல் விழிக்க, சாலையை பெருக்கிக் கொண்டு வந்த குப்பை அள்ளும் பெண்மணி ஒருவர், “அதாம்னா கூடத் தெரியாதா.. “ என்றபடியே மழைச்சாரலுக்கு கடைக்குள் ஒதுங்கினார். என்னை மிக அருகில் நெருங்கி வந்து கிசுகிசுக்கும் குரலில், “பேய்ங்க..பேய்..” என்றார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

“அந்தப் படிக்கட்டுக்குப் பேய் பிடிச்சிருக்கு..” என்றாள்.

“இல்லாட்டி.. வாரத்துக்கு ரெண்டு வேரு இப்புடி ஆவாவுளா..?” என்று கேட்டாள்.

“கீழ உழுந்த ஆளுவட்ட கேட்டுப் பாருங்க தம்பி.. யாரோ நெஞ்சுல ஓங்கி மிதிச்சிட்டாவோனு சொல்லுவாவோ..” என்றாள்.

“பகல்லயும் பேய் வருமா..?” என்றேன்.

“ஏங்க ராத்திரில மனுசன் ஒலாவும்போது பகல்ல பேய் ஒலவாதா..” என்றாள். அது கொஞ்சம் ‘எஸ் வி சேகர்’த்தனமான கிடுக்கிப்பிடி கேள்வியாக இருந்தது.

தமிழண்ணன் அவளைத் தொடர்ந்து பேசினார்.

“மெடிக்கல் கட ஓனரு ஒரு மொதலியாரு.. பரம்பர பணக்காரவ்வோ..

நாகர்கோய்ல்ல இருந்து ஒரு தொழிலாளிய வர வெச்சு என்ன ஏதுன்னு பார்த்தாவோ.. அந்தத் தொழிலாளிதாஞ் சொன்னான்.. இந்த நடையில ஒரு ஆத்மா இருக்குன்னு.. முதலியாரு வெரட்டி விட சொன்னாரு.. நாய வெரட்டுற மாரிலாம் அத வெரட்டி விட முடியுமாய்யா.. அது சரீரம் இல்லாத ஆத்மா.. நல்ல ஆத்மாக்கள நோண்டுறது கடவுள நோண்டுறதுக்கு சமம்னான் தொழிலாளி.. என்ன ஏது வேணும்னு கேட்டு அனுப்பிச்சாச்சு வைடேன்னு எரிச்சலாயி சொன்னாரு முதலியாரு.. ராத்திரிக்கே கேட்ருவோம்னான் தொழிலாளி..”

“அப்புறம் ராத்திரி கேட்டாங்களா.. என்னாச்சு..?” என்றபோது தமிழண்ணன் பேச்சை திசை மாற்றினார்.

“இந்தப் பைத்தியம் பொங்கல கேட்டுட்டு எங்கென போய் படுத்துருக்குன்னு தெரியலயே..” என்றார்.

“அதவுடுங்கண்ணே.. அன்னிக்கு ராத்திரி என்னாச்சு..?” என்றேன்.

தமிழண்ணன் சம்பந்தமில்லாமல், “ஒரு பால் காப்பி சாப்புடுதீயளா தம்பி..” என்றார்.

பல நிமிடங்களுக்கு மேலாக நான் அதே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்க தமிழண்ணனோ படிக்காத ஒரு மக்குப் பையன் போல வேறு வேறு பதில்களை சொல்லிக்கொண்டிருந்தார். அந்த நேரம் சந்திப் பிள்ளையார் கோவில் ஐயர் அந்தப் பைத்தியம் கோவிலுக்கு பின்னால் படுத்து கிடப்பதாகச் சொல்லியபடியே சைக்கிளில் சென்றார். நான் தமிழண்ணனிடம் சொல்லிவிட்டு பொங்கல் பார்சலோடு அவளை நோக்கி நடந்தேன். அந்த வெறி பிடித்த முரட்டு நாயும் அங்குதான் இருந்தது. பார்சலை பிரித்து அவளிடம் நீட்டினேன்.

“தண்ணி பாட்டில் வாங்கலயா..?” என்றாள்.

“தண்ணிதான.. பக்கத்து கடயிலயே ஃப்ரீயா கெடைக்குமே.. எதுக்கு பாட்டில் தண்ணீ..” என்றேன்.

அவள் திடுமென கோபமானாள்.

“பைத்தியக்காரங்கூட இப்பலாம் சும்மா தண்ணி குடுக்க மாட்டான்..எந்தூருல நீ..” என்று இரைந்தாள்.

“ஆங்.. இதே ஆசியக் கண்டந்தான்..” என்றபடியே நான் தண்ணீர் வாங்க எழுந்தபோது, “அடத் திமிரு புடிச்சத் தாயோலி..” என்று கிழவி கத்தினாள்.

மேலும் அவள்..

“அஞ்சு லிட்டர் கேனா வாங்கு.. ஓயாமலா அலய முடியாது..” என்றாள்.

நிச்சயம் இவளது மருமகளோ அல்லது இவளது கணவனோ இவளை விறகு கட்டையால் வெளுத்துதான் வீட்டைவிட்டு துரத்தி இருப்பார்கள் என்று தோன்றியது. ஐந்து லிட்டர் கேனை அவள் அருகே வைத்தேன்.

கிழவி ரெகு விலாஸ் பொங்கலைப் பிரித்து உண்ண ஆரம்பித்திருந்தாள். அவளிடமிருந்த அந்த ஒரு குப்பை லாரி நாற்றத்தை ரெகு விலாஸின் ஒரு பொங்கல் தற்காலிமாக அகற்றியிருந்தது எனக்கு பெரும் வியப்பாக

இருந்தது.

“ஒங்களுக்கு என்ன வயசாவுது ஆச்சி..” என்றேன்.

வாயில் போட்ட பொங்கலின் சுவையில் மெய்மறந்திருந்தவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

“காலம்..!” என்ற ஒற்றைச் சொல்லைச் சொல்லிவிட்டு எக்காளச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். இலக்கியக் கிழவியாகவும் இருப்பாளோ என்று ஐயுற்றேன். மீண்டும் அதே கேள்வியை அவளிடம் கேட்டேன்.

“இப்பலாம் பொறந்த கொழந்தயே சாவுது..” என்றாள்.

நான் கேட்ட கேள்விக்கு சரியான பதிலைத்தான் அவள் சொல்கிறாளா என்பதை இன்னொரு பைத்தியத்திடம்தான் கேட்டு தெரிந்து கொள்ள முடியும் போல என்றிருந்தது. மிகவும் தயக்கமாய் அதே கேள்வியை மீண்டும் கேட்டேன்.

“செத்துப் போனவுளெல்லாம் உசுரோட பாக்குத வயசு..” என்றாள்.

நான்காம் முறை அந்தக் கேள்வியைக் கேட்டால் நான் பைத்தியமாகி விடுவேன் போலிருந்தது. ஆனாலும் கேட்கலாம் என்று நான் கேட்க எத்தனித்த தருணம் அந்த முரட்டு நாய் என்னைப் பார்த்துக் கோபமாக லொள் என்று குரைத்தது. மின்சாரம் தாக்கியது போல ஒரு நொடி அதிர்ந்துவிட்டது உடம்பு. அந்த ஒரு லொள்ளிற்குள்.. 82 ரூவாய்க்கு ஒரு பொங்கல வாங்கி குடுத்துட்டு 82 கேள்வியா கேப்ப.. என்பன போன்ற சொற்கள் இருந்தன.

நான் கிழவியோடு அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை சாலையில் செல்பவர்கள் விசித்திரமாக பார்த்துச் சென்றார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவள் திடீரென ஓலமிட்டபடியே எழுந்தாள்.

“உழுந்துட்டான்.. உழுந்துட்டான்.. யாராச்சு தூக்குங்க.. தூக்குங்க..” என்றபடியே வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் அந்த சாலையை அனாயசமாக ஓடிக் கடந்தாள். யாருமற்ற சாக்கடையில் யாரோ விழுந்து கிடப்பவனைத் தூக்குவது போல மெனக்கெட்டு தூக்கினாள். அந்த மாய ஆசாமியை கைபிடித்து சாலையை இப்போது மிக மெதுவாய் கடந்து வந்தாள். இப்போதுதான் அவள் ஒரு பைத்தியம் போல எனக்குக் காட்சியளித்தாள். எனது அருகே ஒரு அடி பம்பு இருந்தது. “கை கால்லாம் ஒரே சாக்கட.. நல்லா கழுவு..” என்றவாறே அடி பம்பை அடித்தாள். தண்ணீர் வெறுமனே சிந்திக் கொண்டிருந்தது. அவள் ஒரு முழுமையான பைத்தியம் என்று நான் நம்பத் தொடங்கிய அந்தத் தருணத்தில்தான் அந்த மாயம் நிகழ்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் சாக்கடை நாற்றம் வர ஆரம்பித்தது. எனக்குப் பீதியாகி படக்கென்று எழுந்தேன்.

அந்த மாய ஆசாமியை “வெயில்ல போய் கொஞ்ச நேரம் ஒக்காரு..” என்றாள்.

ஒரு எறும்பையோ தூசியையோ தட்டிவிடுவதைப் போல, அவள் அங்கே ஒரு மாயாஜாலத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தாள். யாரும் இல்லாத இடத்திலும் யாரோ இருக்கிறார்கள் என்பதை நான் நம்ப ஆரம்பித்த தருணம் அது.

“செத்துப் போனப்புறங் கூட கண்ணு தெரியுதா பாரு.. எழவு.. குருட்டு நாயாட்டம் போய் சாக்கடயில உழுதான்..” என்றவாறே மெதுவாய் வந்து அமர்ந்து மீண்டும் பொங்கலில் ஒரு கவளம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். அந்த மெடிக்கல் கடையின் படிக்கட்டுகளின் மர்மம் பற்றி இந்தக் கிழட்டுப் பைத்தியக்கார ஆச்சியிடம் கேட்கலாம் போல் இருந்தது. அந்தக் கிழவி பொங்கலின் சுவையில் மெய்மறந்த நிலையில் கண்களைத் திறக்காமலேயே திடுக்கென்று சொன்னாள்.

“அந்தப் படிக்கட்டுல ஒன் அப்பாதான் இருக்காவோ..”

ஒரு பாழடைந்த மண்டபத்தில் தூசுகள் அடைந்திருக்கும் வீணையின் ஒரு தந்தியை இசை தெரிந்த ஒரு விரல் திடுமென்று மீட்டியது போல மிகப்பெரும் அதிர்வுகள் என்னுள். தடம் புரண்ட ரயில் போல தலையினுள் தடதடவென என்னென்னமோ சரிந்தன. கல் எறிந்ததும் பறவைக் கூட்டங்கள் சிதறி எட்டுத் திசைகளிலும் பறப்பதைப் போல என் தலைக்குள் நானே பல எண்ணங்களாகி எங்கெங்கோ ஓடினேன்.

ஆம்.. கிழவி சொல்வது சரிதான். மேலரத வீதியில் இருபது வருடங்களாக செயல்பட்டு வரும் அந்த மெடிக்கல் கடையில் விசாலமான பெரிய படிக்கட்டுகளில் எப்போதும் அவரைக் காணலாம். வேலையில்லாத அத்தனை தினங்களிலும் அப்பா அங்குதான் அமர்ந்திருப்பார். யாருமில்லை என்றாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தனியாகவே அமர்ந்திருப்பார். இறந்ததற்குப் பிறகும் கூட அங்கேயேதான் அமர்ந்திருக்கிறாரா..? ஆனால் எட்டி உதைப்பது போல் மனிதர்கள் விழுகிறார்களே .. அப்பா சாத்வீக குணமுடையவர்.. யாரையும் இப்படி எட்டி உதைக்கும் மனிதரல்ல அவர் என்று மனதில் தோன்றிக் கொண்டிருக்கும் போதே கிழவி என்னைப் பார்த்துக் கேட்டாள்..

“ஒரு ஆளு ஒக்காந்துருக்கது கூட தெரியாம அவரு மேலே ஏறுனா மனுசனுக்கு கோவம் வருமா வராதா..” என்றாள்.

ஒரு பரவச நிலையின் மிரண்ட விழிகளில் நான், ‘‘வரும் வரும்..’’ என்றேன்.

‘‘மனுசனுக்கே கோவம் வரும்னா பேய்னா ச்சும்மா உடுமா..?’’ என்றாள்.

வியர்த்து இருந்த முகத்தை முகத்தை குனிந்து வேட்டியில் துடைத்தபடியே, ‘‘வாஸ்தவம்தான்..’’ என்றேன்.

‘‘அன்னிக்கு ராத்திரி.. அந்தத் தொழிலாளி அப்பாவோட பேசிட்டு இருந்தத நா பாத்தேன்..’’ என்றாள்.

நான் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் எந்த ஒரு கேள்வியும் கேட்டு அவள் பதில் சொல்லும் நிலையில் அங்கே சூழல் இல்லை. எனது கொஸ்டின் பேப்பர் முன்னமே அவளிடம் லீக்காகி இருந்தது.

‘‘அந்த தொழிலாளி அப்பாட்ட கெஞ்சிக்கிட்டு இருந்தான். ராத்திரி பூரா இங்க ஒக்காந்துகிடுங்க.. பகல்ல வேணா.. ஆளுவ பாவமில்லையான்னான்.. அதுக்கு அப்பா.. யோவ், ராத்திரி பூரா தனியா நா இங்க ஒக்காந்து என்னய்யா பண்ணப் போறன்.. காத்து கருப்பு அடிச்சிருச்சின்னா என்ன ஆவுததுன்னாரு.. செத்த தள்ளி நின்னுட்டுருந்த மொதலியாரப் பாத்து தொழிலாளி கேட்டான்.. மெடிக்கலத் தெறந்து ஒரு அமிர்தாஞ்சன எடுக்க முடியுமா.. தலைவலிக்கின்னான்.. எனக்கு சிரிப்புன்னா தாங்க முடியல.. அப்பா சொன்னாரு.. பகல்லன்னா ஆளுவ வாரது போறது வண்டிச் சத்தம் கோயில் மணிச் சத்தம் பொக தூசு காத்து இதுல்லா பாக்க கேக்க நல்லாருக்குல்லாவேன்னாரு அப்பா.. எப்பதான் போவியன்னு தொழிலாளி எரிச்சலாயி கேக்க.. இந்த நடையில ஒக்காரும் போது எனக்கு ஒரு சந்தோசம் கெடைக்கு.. இங்க ஒக்காருத வேற யாருக்காச்சும் அந்த சந்தோசம் கெடச்சுதுன்னா போயிருதன்னாரு..’’

தான் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பேய் என்பதை அப்பா நிரூபித்துவிட்டார். ஆட்டைக் கொடு மாட்டைக் கொடு சாராயம் கொடு எனும் பேய்கள் தொழிலாளிகளின் வரும்படிக்கு உதவி செய்வன. ஆனால் அப்பா போன்ற பேய்கள் தொழிலாளிகளின் நலனுக்கு எப்போதும் இடையூறுதான் இல்லையா.

‘‘மொதலியாரு ரொம்ப ஆர்வமா தொழிலாளிட்ட கேட்டாரு..என்ன அது போயிருதன்ட்ருச்சான்னாரு.. நீரு பேயானாக் கூட அத வெரட்ட முடியாதுனுட்டான் தொழிலாளி.. அன்னிக்கு ஒடம்பு முடியாம போனவருதான் மொதலியாரு.. இன்னும் எந்திக்கல.. ‘‘ என்றாள் கிழவி.

முதலியார் என்ன பாவம் செய்தார் அவருக்கு ஏன் இப்படி நிகழ வேண்டும் என்றிருந்தது எனக்கு. அந்த ஒரு நொடி, பேயான அப்பாவின் மேல் பேய்க்கோபம் வந்துவிட்டது எனக்கு. கிழவியிடம் கேட்டேன்.

‘‘அப்பா எங்கூட என்ன பேசணும்னாவோ..?’’

‘‘ரெகு விலாஸ்ல ஒரு பிரியாணி வாங்கித் தாரியா..?’’ என்றாள்.

ரெகு விலாஸ் நோக்கி நடக்கும்போது தமிழண்ணன் கடை வந்தது. நின்றேன். அந்த மெடிக்கல் கடையின் படிக்கட்டில் அமர்ந்து இருப்பது அப்பாதான் என்று தமிழண்ணனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. அதுதான் அவர் பேச்சை திசை மாற்றியதற்கு காரணம் என்று ஆணித்தரமாக நம்பினேன்.

தமிழண்ணன் பாலை கலக்கிவிட்டபடியே, ‘‘என்ன தம்பி.. டவுன விட்டுப்போவ இன்னும் மனசு வல்லியோ..?’’ என்று சொல்லிச் சிரித்தார். நான் சிரிக்காமல் அவரைப் பார்த்து கேட்டேன்..

‘‘அந்த நடையில இருக்கது அப்பாதான..’’ என்றேன்.

தமிழண்ணன் திடுக்கிட்டார். கடையை விட்டு வெளியே வந்துவிட்டார். அவசரமாக ஒரு பீடியை எடுத்து பற்ற வைத்தார். என் கண்களை தீர்க்கமாக பார்த்தார். இரண்டு இழுப்பு இழுத்து விட்டு பீடியை கீழே போட்டு காலால் நசுக்கினார். அவர் உடம்பு கொஞ்சம் உதற ஆரம்பித்தது. நடுக்கமுற்ற கைகளுடனே கடையில் இருந்த முருகன் படத்தில் போய் தன் இரு கைகளையும் வைத்துக் கொண்டு தன் இரு கண்களையும் மூடிக் கொண்டார். சிறிது நேரம் அப்படியே இருந்தார். தலையை திருப்பி எதிரிலிருந்த மெடிக்கல் கடை வாசலின் அந்த அகன்ற படிக்கட்டைப் பார்த்தார். அனிச்சையாக அவர் கண்களில் நீர் எழும்பியது. தவறு செய்த ஒரு குழந்தை, செய்த தவறை ஒப்புக் கொள்ளும் போது, பாவம் போல ஆமாம் என்று தலையாட்டுமே, அதைப்போல அவர் என்னைப் பார்த்து நான் கேட்ட கேள்விக்கு ஆமாம் என்று தலையாட்டினார்.

‘‘அந்த நடைலதான் காளியண்ணண் எப்பவும் ஒக்காந்துருப்பாவோ.. அங்கருந்தே ரெண்டு வட ஒரு கடுங்காப்பிக்கு கை காட்டுவாவோ.. நான் கொண்டு போம்போது காளியண்ணன்டேர்ந்து ஜம்னு ஜவ்வாது வாட ஒரு தூக்கு தூக்கும் பாத்துகிடுங்க.. இப்ப பத்து வர்சமா அண்ணன் இல்ல.. ஆனாலும் செல நேரம் ஜவ்வாது வாட அங்னென ஆளப் பொரட்டும்.. அப்பயே எனக்கு ஒரு டவுட்டுதான்.. அந்த மெடிக்கல் கடைக்கு மொதலியாரு எப்பவும் நீலக்கலர்தான் சுண்ணாம்பு அடிப்பாவோ.. அந்தப் படிக்கட்டு மட்டும் எப்பவும் வெள்ளயிலதான்.. கலர் சுண்ணாம்பு அடிக்கப் போனவந்தான் மொதமொதல்ல அங்னென கீழ உழுந்தான்.. அப்பாக்கு ரொம்பப் பிடிச்சது வெள்ளல்லா..எனக்கு அப்பவே

முடிவாயிட்டு.. ரெண்டொரு தடவ நானே ஜவ்வாது வாட இல்லாதப்போ சும்மா காளியண்ணே-ன்னு கூப்டுப் பாத்தேன்.. சடீர்னு எங்கேர்ந்துதான் வருமோ அந்த வாட.. உச்சந்தல உள்ள பூந்து அப்புடியே ஒரு தடவு தடவிட்டுப் போவும் பாருங்க.. "

சொல்லி முடித்ததும் தமிழண்ணன் சிலையாகிப் போனார்.

"அந்த ஆச்சி பைத்தியமும் அப்புடிதான் சொல்லுது.." என்றேன்.

வேகமாக வந்து என் இரு தோள்களையும் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினார்.

"தம்பி நாஞ்சொன்னாக் கூட பைத்தியக்காரத்தனமா இருக்கும். ஆனா பைத்தியஞ் சொன்னா கரெக்டா இருக்கும் தம்பி.." என்றார்.

175 ரூபாய் பணம் கொடுத்தே ரெகு விலாஸில் பிரியாணி வாங்கி வந்தேன். அந்தக் கிழட்டுப் பைத்தியக்கார ஆச்சி, அந்த மெடிக்கல் கடையில் விசாலமான படிக்கட்டுகளில் அப்பாவுக்கு இடம் விட்டு அமர்ந்திருப்பது போல் அமர்ந்திருந்தாள். மனசு படபடவென்று அடித்துக்கொண்டது. நான் மெடிக்கல் கடையை நெருங்கினேன். அங்கே ஜவ்வாது வாடை சூறாவளியைப் போல சுழன்று கொண்டிருந்தது. மனசு முழுதும் அப்பா அப்பா அப்பா என்று இருந்தது.

மெடிக்கல் கடையின் படிக்கட்டுகளில் மத்தியின் மீதேறி நின்றேன். கீழே அந்தக் கிழவி வலப்பக்கம் திரும்பி திரும்பி சொற்களின்றி சைகை மொழியில் சிரித்தபடியே யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

மெடிக்கல் கடையில் இருந்த பெண் என்னைப் பார்த்து, " அந்த ஆச்சிக்கு கிறுக்கு பிடிச்சிருக்கு. இப்பிடித்தான் தன்னந்தனியா பேசிட்டுருக்கும். ஒங்களுக்கு என்னண்ணே வேணும்..?" என்றாள்.

"அப்பா.." என்றேன்.

அந்தப் பெண் என்னை ஒரு மாதிரி பார்த்தாள். நான் ஒரு மாதிரி சுதாரித்து.. "அப்பா.. அப்பா இல்லியா.. மொதலியார்..மொதலியார் ஐயா இல்லியாம்மா.." என்றேன்.

"அவ்வோ இப்ப கடைக்குலாம் வாரதில்ல.. எல்லா நாந்தான்.." என்றாள்.

அந்தப் பெண்ணிடம் நான் ஏன் அப்படிச் சொன்னேன் என்று எனக்கு தெரியவில்லை.

"அப்பாவ உட்றாத.. நல்லா கவனிச்சுக்கோ.." என்றேன்.

அந்த வார்த்தைகளை நான் நானாகச் சொல்லவில்லை. அவை என்னிடமிருந்து அந்தப் பெண்ணுக்காக வந்த ஒரு சிறிய இறைச்செய்தி அது. அவள் மீண்டும் என்னை ஒரு மாதிரிப் பார்த்தாள். நாற்காலியில் போய் அமர்ந்து தலையை தொங்கப்போட்டுக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

எல்லோரிடத்திலும் கைவிடப்பட்ட ஒரு முதிய அப்பா ஒருவர் இருக்கிறார். அவர் ஒன்று சாக கிடக்கிறார் அல்லது இறந்து போய் 'இருக்கிறார்'.

கிழவி திரும்பி என்னைப் பார்த்து எழுந்தாள். சிரித்தவாறு என்னை அழைத்தாள். எனது இரு கன்னங்களையும் கிள்ளி முத்தங்கொஞ்சி, "திமிரு புடிச்ச தாயோலி.." என்றாள்.

சைகை மொழியில் கையசைத்து அப்பா எப்போதும் அமர்ந்திருக்கும் அந்த இடத்தில் என்னை அமரச் சொன்னாள்.

நான் தயங்கினேன்.

"நீ ஒக்காந்தாதான் மொதலியாரு எந்திக்க முடியும்.." என்றாள். நாற்காலியில் அழுது கொண்டிருந்த மெடிக்கல் கடை பெண் அவசரமாக எழுந்து வந்து என்னையும் கிழவியையும் விசித்திரமாக பார்த்தாள்.


என் கையிலிருந்த பிரியாணி பார்சலை பிடிங்கிக்கொண்டு சாலையைக் கடந்து மறைந்தாள் கிழவி.நான் அப்பாவின் இடத்தில் மெதுவாய் அமர்ந்தேன். அது படி போல் இல்லை. அப்பாவின் மடி போல் இருந்தது. என் உடல் முழுதும் ஜவ்வாது வாசனை சுகந்தமாய் பரவிக்கொண்டிருந்தது. சரியாக அக்கணம் சந்திப் பிள்ளையார் கோவிலில் மணி ஆங்காரமாய் முழங்கியது. நான் தலையைத் திருப்பி இடது புறத்திலிருந்து வலது புறம் வரை முழுவதும் ஒரு சுற்று பார்த்தேன்.

ஆளுவ வாரது போறது வண்டிச்சத்தம் கோயில் மணிச்சத்தம் பொக தூசு காத்து..

நன்றாகத்தான் இருக்கிறது.

அந்த மெடிக்கல் கடையின் விசாலமான உயிருள்ள படிக்கட்டுகளில் அமர்ந்திருக்கிறேன். மேல ரத வீதியே மிரண்டு போய் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தது. எதிர்க்கடையிலிருந்து தமிழ் அண்ணன் வைத்த கண் வாங்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து சைகையில் சொன்னேன்..

"ரெண்டு வட.. ஒரு கடுங்காப்பி.."



# பார்சல்

**ரகுநாத் வ, மதுரை**

“ஹலோ, ராமன்மலை டிராவல்ஸா? “

“ஆமாங்க, நீங்க யாரு? என்ன வேணும்?”

“கோயம்புத்தூர்ல இருந்து நேத்து ஒரு பார்சல் வந்திருக்காங்க?”

“என்ன பேருல சார் புக் பண்ணிங்க?”

‘ப்ரான்சிஸ் டிஸோஸா’ ங்க…

“ஆமா சார் வந்திருக்கு வந்து வாங்கிக்கோ...”

இது மாணிக்கத்திற்கு முதல்முறை. கடைசியாக கேட்ட ‘ஆமா சார் வந்திருக்கு வந்து வாங்கிக்கோங்க’ என்ற வார்த்தைகள் அவனிற்குள் பதட்டத்தையும் பயத்தையும் ஒரு சேர வரவழைத்ததைப் போல அவன் வாழ்வில் இதுவரை நடந்தேறியதில்லை.

வீட்டிலிருந்து வில்லரசம்பட்டி செல்ல வேண்டும், வீடு வீரப்பன் சத்திரம். குறைந்தது 6 கி.மீ பயணம். இரு சக்கர வாகனத்தைக் கிளப்பியவர் முப்பது நிமிடங்களாக அந்தத் தொலைவைக் கடக்கிறார். அத்தனை சிந்தனை, அத்தனை பதட்டம். வழியில் மூன்று முறை நிறுத்தி வீட்டிற்குத் திரும்பிச்சென்று விடலாமா என்று கூட சிந்தித்தவர், தனது இக்கட்டான நிலையையெண்ணி வேறுவழியின்றி ராமன்மலை டிராவல்ஸ் அடைந்தார்..

'தம்பி, நான் ப்ரான்சிஸ் டிஸோஸா, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன்ல பேசுனேனே,'

'ஆமா சார், உட்காருங்க பார்சல் வந்துருக்கு...'சார் உங்க ஐடி ப்ரூப் கொடுங்க என்றதும், 'எதிர்பாராததை எதிர்பாருங்கள்' என்ற கூற்று மாணிக்கத்திற்குள் ஓடியது, ஆம், ஐடி ப்ரூப் குறித்து இதுவரை அவன் யோசிக்கவே இல்லை.

அந்தக் கேள்வியை எதிர்பாராத மாணிக்கம், சட்டைப்பையினைத் துழாவுவதாய் பாவனையிட...

சார் இந்தாங்க உங்க பார்சலென, 'சுருட்டப்பட்டு இறுக கட்டப்பெற்ற' சுமார் ஒரு கிலோ அளவிலான நெகிழிப் பொத்தலொன்றினை எதிரில் சிறுவன் நீட்ட மாணிக்கம் பெற முயற்சிக்கிறார், அப்போது அவரது இதயத்துடிப்பு வெளியில் கேட்டுக் கொண்டிருப்பதை அவராலேயே உணர முடிந்தது.

வெடுக்கென பார்சலை உள்ளிழுத்துக் கொண்ட அந்தச் சிறுவன், 'சார் ஐ.டி ப்ரூப் கேட்டேனே?' என வினவ தம்பி அதுவந்து, என மாணிக்கம் தயங்குகிறார்.

சார், நீங்கதான் இந்தப் பேரு, அது என்ன, ஆங், ப்ரான்சிஸ்ங்கிறதுக்கு என்ன சார் அடையாளம்? என்ன சார் உறுதி?

எப்படி சார் உங்ககிட்ட தர்றது, போயிட்டு கார்டு கொண்டு வாங்க என பார்சலை வெடுக்கென உள்ளிழுத்துக் கொள்கிறான்.

தம்பி, அவசரத்துல வீட்டுல வச்சுட்டு வந்துட்டேன்பா, நான்தான் அந்த ப்ரான்சிஸ், என்கிட்ட கொடுத்திரு என மாணிக்கம் கெஞ்சாத குறையாக கேட்டுக்கொண்டிருக்க,

இல்ல சார், 'நீங்க ஐடிய குடுத்துட்டு வாங்கிட்டு போங்க' என பிடிவாதமாய் சிறுவன்

என்ன செய்வதென அறியாத மாணிக்கம், திரும்பி மெதுவாக நடக்கத் தொடங்குகிறார்.

அவரது நெஞ்சம் அருகே அலைபேசி பாடுகிறது. 'எல்லா நேரத்திலும் இசை இசையாக இருப்பதில்லை போலும்' என்பதற்கேற்ப திரையில் தெரிந்த பெயர் நடுக்கத்தோடிருந்த மாணிக்கத்திற்கு மரண ஓலையாக தெரிந்தது கைப்பேசியினை ஆன் செய்து ஹலோ என்றதும்...

மறுமுனையிலிருந்து ஒரு பெண் குரல், என்ன வாங்கியாச்சா? என்றதும் 'இல்லை ஸ்வேதா' என்று பதிலளித்து நடந்ததை விவரிக்க...

'நான் சென்ஸ்.' ஒரு சின்ன வேலையக் கூட ஒழுங்கா செய்யத் தெரில 'யூ இடியட்'. 'கோ டு ஹெல்' என கணீர் குரலில் கூறி, சரி மாணிக்கம், சொல்றத கேளு, நீ போயி அந்தப் பையன்ட, தனியா அவனுக்கு ஒரு நூறு ரூபா டிப்ஸ் கொடு, அவன் பார்சல கொடுத்துருவான், வாங்கிட்டு கால் பண்ணு, இல்லனா,'என்ன நடக்கும்னு உனக்கே நல்லாத் தெரியும், பார்சல் மிஸ் ஆச்சுனா, உன் லைப்ப மறந்துடு என அச்சுறுத்தியவாறே இணைப்பைத் துண்டித்தாள்.

செய்வதறியாது திகைத்த மாணிக்கம் வில்லரசம்பட்டி நால்ரோட்டில் சாலையோரம் வண்டியை உருட்டிக் கொண்டு திரும்பி நடக்க, இப்போதெல்லாம் நாற்பதைக் கடந்தாலே வரக்கூடிய உடல் கோளாறினால் மயங்கி சாலையிலே சரிந்து விழ, அங்கிருந்த திண்டல் வேலன் ரெஸ்டாரண்ட் காவலாளி ஓடி வந்து மாணிக்கத்தினை தூக்கிப்பிடித்து முகத்தில் நீர் தெளிக்கிறார்.

விழித்த மாணிக்கத்திற்கு காவலாளியினை காக்கிச் சீருடையில் பார்த்ததும் 'நான் தப்பு பண்ணல, நான் ஒரு தப்பும் பண்ணல, எனக்கும் அந்த பார்சலுக்கும் எந்த தொடர்புமில்ல' என கத்தத் தொடங்குகிறார்., 'தம்பி தம்பி, இருங்க ரோட்ல நீங்க வந்துட்டிருந்தப்ப மயங்கி விழுந்துட்டிங்க, ஏன் தம்பி பயப்படறீங்க? நான் செக்யூரிட்டியா இங்க வேலை பார்க்கிறேன் என்னாச்சு உங்களுக்கு என வினவ, மாணிக்கம் ரொம்ப நன்றிங்க அய்யா, மயக்கத்துல ஏதோ உளறிட்டேன், காலையில ஒரு கெட்ட கனவு அப்பறம் சாப்டாமா வந்தனாலே ஒரு மயக்கமெனச் சமாளித்து அங்கிருந்து கிளம்ப எத்தனிக்கையில்,

பார்சல் சர்வீஸில் வேலை செய்த பையன், அந்த வழியாகக் கடந்து வருகிறான், 'என்ன சார் ஐடி ப்ரூப் எடுக்க போகும்போது விழுந்துட்டிங்களா?' எனக் கேட்கிறான். ஆமாம் என்பது போல தலையாட்டுகிறார் மாணிக்கம்.

சரி சரி விடுங்க சார், 'ஒரு நூறு ரூபா எக்ஸ்டிரா ஆகும் பரவாயில்லயா,' என தான் கேட்க நினைத்ததை சிறுவன் கேட்டதும், இன்னும் வேகமாக தலையாட்டி அவனுடன் செல்கிறார் மாணிக்கம்.

டிராவல்ஸ்ஸினை அடைந்ததும் அங்கிருந்த நாற்காலியில் மாணிக்கத்தினை அமரவைத்துவிட்டு பார்சலை எடுக்க

அந்தச் சிறுவன் உள்ளே செல்கிறான்.

“அங்கிருந்த மீன் தொட்டியில் ஒரு பெரிய சைஸ் வாஸ்து மீன் முன்னும் பின்னுமாக நகர்ந்து திரும்புகையில் அதன் கண்கள் மாணிக்கத்தினையே நோக்குவதாக இருந்தது. தொட்டியிலிருந்து வெளிவர முடியாத மீனாக மாணிக்கம் தன்னை கற்பனை செய்துகொள்ள அந்த கண நேரம் போதுமானதாயிருந்தது...”

சார்,இந்தாங்க பார்சல் என நீட்டிய கரங்களை மறுபடியும் மடக்க, சிறுவனின் ஆள்காட்டி விரலின் அடியில் கட்டை விரல் செய்கை செய்தது... புரிந்து கொண்ட மாணிக்கம் நூறு ரூபாய் தாளினை எடுப்பதற்கு பதிலாக ஐநூறு ரூபாயொன்றினை அவன் கையில் திணிக்க, சிறுவன் ரொம்ப தேங்ஸ் சார் என பார்சலை மாணிக்கத்தின் கையில் ஒப்படைத்துவிடவும் மாணிக்கம் திரும்பி நடக்கத் தொடங்குகையில்

சார் என விளிக்கிறான் அந்தச் சிறுவன், சடாரென மாணிக்கம் திரும்பியதும், இதுல ஒரு சைன் பண்ணிருங்க சார் இல்லனா ஓனர் பாத்த திட்டுவாப்புல, எனக் கூறியதும் பதட்டம் தணிந்து கையொப்பமிட்டுவிட்டு பார்சலுக்கு எவ்ளோப்பா என்றதும் ஐநூறுலயே பாத்துக்கிறேன் சார் என நகைக்கிறான்...

அங்கிருந்து பெருமூச்சு விட்டபடி நகரத்தொடங்குகையில் மீண்டும் கைப்பேசி சிணுங்குகிறது...

என்ன மாணிக்கம் என்ன ஆச்சு? என்ற குரலுக்கு ‘ம் வாங்கிட்டேன் ஸ்வே’ என மாணிக்கம் பதிலளிக்கிறார்.,

ஸ்வே, இதுக்கு ஒன்னும் குறைச்சலில்ல, சரி சரி உடனே அந்த பார்சல எடுத்துட்டுப்போயி பெருந்துறை பஸ் ஸ்டாண்ட்ல நில்லு, அங்க சாயங்காலம் 6.45 க்கு தாராபுரம் போற பஸ்ல இருந்து இறங்கி ஒருத்தன் வருவான் பேரு முத்தையா மஞ்ச கலர் கைலி கட்டியிருப்பான் அவன்ட அத கொடுத்திரு, அதோட உன்னோட வொர்க் ஓவர் இத சரியா செஞ்சிடு அப்போதான் நீ கேட்டது உனக்கு கிடைக்கும் இல்லனா ஒம்புள்ளய மறந்துடு என்றதும் ‘இல்ல ஸ்வேதா மணி இப்ப அஞ்சாகுது நான் இப்பவே போய்டுறேன் என்ற மாணிக்கத்தினை, முட்டாப்பயலே இப்போவே எதுக்கு போற 6.45 க்கு நீ அங்கயிருந்தா போதும் அதுக்கேத்த மாதிரி போ, என இணைப்பைத் துண்டித்தாள்.

தோட்டத்து விருந்து. அவளுடன் முதன் முதலாக வந்து உணவருந்திய இடம். கலைந்து கிடக்கும் நாற்காலிகளில் தனித்திருக்கும் நாற்காலியில் மாணிக்கம்.

மாணிக்கத்திற்கும் ஸ்வேதாவிற்கும் திருமணமாகி நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன. பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்தான். முதலில் ஸ்வேதாவின் நடவடிக்கைகளில் எந்த சந்தேகமும் தெரியவில்லை. அவளுக்குப் பூர்வீகம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதக்குடியெனும் கிராமம்.

திருமணமான புதிதில் அடிக்கடி கோயமுத்தூரிலுள்ள தனது அத்தை வீட்டுக்கு செல்வதாக கூறி மாதமொருமுறை கேரளாவிற்குச் சென்றிருக்கிறாள். அங்கு தகாத நபர்களுடன் ஏற்பட்ட பழக்கங்களால் போதை வஸ்துக்களை கடத்தி பணம் ஈட்டத் தொடங்கியிருக்கிறாள். இந்த கசப்பான உண்மைகள் திருமணமான இரண்டாண்டுகள் கழித்தே மாணிக்கத்திற்குத் தெரியவந்துள்ளது. எத்தனை முறை மாணிக்கம் எடுத்துக்கூறியும் ஸ்வேதா தனது போக்கினை மாற்றிக்கொள்ளலேயில்லை. நாற்பது வயது வரை திருமணமாகாத மாணிக்கத்திற்கும் முப்பத்தைந்து வயதான ஸ்வேதாவிற்கும் நடந்தேறியது வயது மூப்புத் திருமணம்.

தற்போது இவர்களுக்கு இரண்டறை வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவனைத் தனது பிடியில் வைத்திருக்கிற ஸ்வேதா அவ்வப்போது அவனைக் காட்டி மாணிக்கத்தினை மிரட்டியிருக்கிறாள். தனது தீய வேலைகளுக்கும் மாணிக்கத்தினைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறாள். இதற்கு முன்னர் மூன்றாம் நபர்களை பயன்படுத்தி வந்த நிலையில் கணவன் என்றால் விசுவாசமும் நம்பிக்கையுமாக இருக்குமென்ற கூட்டாளிகளின் அறிவுரைப்படி இம்முறை மாணிக்கத்தினை கஞ்சா பொட்டலங்களை கைமாற்றி விட பணித்திருக்கிறாள். முதலில் முடியாது என தீர்க்கமாக மறுத்த மாணிக்கத்திடம் தனது மகனை வேறு நபருக்கு விற்றுவிடுவதாய் மிரட்டியது அவனது நினைவில் கண்ணீராய் வழிந்துகொண்டிருக்கிறது...

என்ன சாப்பிடுறீங்க சார்? ‘எனிதிங் கூல் யூ நீடட்?’ என சர்வரொருவர் வினவ நினைவுகளிலிருந்து நிதானத்திற்கு வருகிறார் மாணிக்கம்.

அன்று வேலைநாள் என்பதால் கூட்டம் அதிகமின்றி இருந்தது தோட்டத்து விருந்து. எங்கும் அமைதி. கையில் அந்தப் பார்சலோடு மணியைப் பார்க்கிறார் 4.45, இன்னும் இரண்டு மணி நேரமிருக்கிறது

பார்சலை இறுகப்பிடித்துக் கொண்டு விறுவிறுவென நடக்கத் தொடங்கியவர் நேராக தனது வீட்டினை அடைந்தார். நேரம் சென்று கொண்டிருக்கிறது பெருந்துறை பேருந்து நிலையம் சென்றடைய வேண்டிய பார்சல் இன்னும் தனது கைகளில் இருப்பதையே பார்த்துக் கொண்டிருக்க நேரம் 6.15, கைப்பேசி ஒலிக்கத் தொடங்குகிறது.

ஆம் அவள்தான் ‘எஸ் டபிள்யூ இ’ எனும் மூன்றெழுத்து ‘அதை சேவ் செய்யும் பொழுது இப்படி ஓர் மிரட்டல் அழைப்பு வருமென மாணிக்கம் நினைத்துக்கூட பார்த்ததில்லை.’ எந்தத் தயக்கமுமின்றி

அழைப்பையேற்க, என்ன மாணிக்கம், பெருந்துறை போய்ட்டியா? பார்ட்டி வந்திட்டிருக்காங்க, எங்க இருக்க? என்ன செய்ற? என கேள்விகளை அடுக்க, நிதானமாக பதிலளித்த மாணிக்கம்,

'இல்ல, நான் போகல, வீட்டுலதான் இருக்கேன்'

'ஏய் என்னடா சொல்ற அது என்ன வேல்யூ தெரியுமா? என்றதும்

தெரியும் இத்தனை நாள் கஞ்சா பொட்டலம்தான் கடத்துறிங்கனு நெனச்சேன்...இப்பதான் ஓப்பன் பண்ணிப் பார்த்தேன் 'ஆல் ஆர் டைமண்ட்ஸ்' என்றதும்,

மாணிக்கம் நீ தப்பு பண்ற, 'உன் குழந்தை என் கையில'

'என்னது என் குழந்தையா, ஏன் உனக்கு அது குழந்தை இல்லயா? நீதானடி பெத்த, இங்க பாரு உனக்கு ஒரே சான்ஸ் தரேன்... ஒழுங்கா நம்ம பையன என்கிட்ட வந்து ஒப்படைச்சுட்டு என் வாழ்க்கையில இனி தலையிடமாட்டேனு எழுதிக் கொடுத்துரு இல்லனா உன் டைமண்ட்ஸ்ஸ எல்லாம் மறந்துடு அதே இப்பவே நொறுக்கி ஒண்ணுமில்லாம பண்ணிடுவேன், எனக்குத் தெரியும் உனக்கு மகனவிட டைமண்ட்ஸ்தான் பெருசு, சோ நீ தப்பான முடிவெடுக்க மாட்டேனு நம்புறேன் எனக்கூறியதும்,

இங்க பாரு மாணிக்கம் நீ சொல்ற மாதிரியே நான் உன் பையன, இல்ல நம்ம பையன உன்கிட்ட வந்து ஒப்படைக்கிறேன், தயவுசெஞ்சு டைமண்ட்ஸ எதுவும் பண்ணிடாத ப்ளீஸ் என்றதும், குட், இன்னைக்கு நைட் பத்து மணிக்குள்ள என் பையன் என்கிட்ட வரணும், நீ மட்டும் தனியா வரணும் வேற ஏதாவது பண்ணா 'யூவர் டைமண்ட்ஸ் மே கான்' எனத் தொடர்பைத் துண்டித்தார்.

அருகிலேயே அமர்ந்திருந்த கவிதா ஐபிஎஸ், 'வெல்டன் மாணிக்கம் இனி எந்த கவலையுமில்ல நான் பாத்துக்கறேன் என்று மாணிக்கத்தின் தோளைத் தட்டிக் கொடுக்க,' தோட்டத்து விருந்தில் தான் என்ன செய்வதென விழித்து அழுதுகொண்டிருக்கையில் தனது தோளை அழுத்திய கரங்களை ஏறிட்டுப் பார்க்கையில் அங்கே தனது தோழி கவிதா ஐபிஎஸ்ஸாக நின்று கொண்டிருக்க, அவளிடம் நடந்ததைக் கூறியதும்தான் ஸ்வேதாவை மிரட்டி வீட்டிற்கு வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

40 வயதுவரை திருமணமாகாமல் இருந்த மாணிக்கம் அதற்கு முன்புவரை ஐபிஎஸ் பயிற்சிக்காக படித்துக் கொண்டிருந்து அதில் தோல்வியடைய தனக்கு வேலை கிடைக்காத விரக்தியில் திருமணம் செய்து கொள்ளாமலிருந்து இறுதியில் ஸ்வேதாவை மணம் முடித்திருக்கிறார். அதற்கு முன்புவரை தேர்விற்கான பயிற்சியிலிருக்கும் போதே கவிதாவும் மாணிக்கமும் ஒருவருக்கொருவர் பழகியிருக்கிறார்கள். காலச்சூழ்நிலையால் இருவரும் பிரிந்து தற்போது இக்கட்டான சூழ்நிலையொன்றில் இருவரும் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கவிதாவிற்கு திருமணமான இரண்டே ஆண்டில் அவளது கணவன் விபத்தொன்றில் இறந்துவிட தனது மகளுடன் தனியாக வாழ்ந்து வருவது தெரிந்ததும் மாணிக்கத்திற்கு ஆறுதல் கூறுவதைத் தவிர வேறெதுவும் தோன்றவில்லை.


இரவு நெருங்கிக் கொண்டிருக்கிறது. நேரம் 9.30 மணி, கவிதா எதுவும் தப்பா நடந்துறாதில்ல, என் பையனுக்கு எதுவும், சே.. நான்சென்ஸ் கவலப்படாத அவ கண்டிப்பா வருவா அவளுக்கு டைமண்ட்ஸ் ரொம்ப முக்கியம் என கவிதா கூற வெளியில் கார் வந்து நிற்கும் சத்தம்.

உடனே கவிதா, மாணிக்கம் அவங்க வந்துட்டாங்க, தைரியமா இரு எது நடந்தாலும் நாங்க இருக்கிறோம் என பதுங்கிக் கொள்கிறாள்

வீட்டிற்குள் ஸ்வேதா ஆவேசமாக நுழைந்து, இந்தா உன் பையனென மகனை மாணிக்கத்தினை நோக்கி தள்ளிவிட மகனை தாங்குகிறார் மாணிக்கம், 'எங்கடா என் டைமண்ட்ஸ்?' ஒழுங்கா கொடு இல்லனா உன்னயும் ஒம்பிள்ளையையும் எனச் சொல்லி முடிப்பதற்குள், வடக்குதிசை மூலையிலிருந்த மேஜையினை மாணிக்கத்தின் ஆள்காட்டிவிரல் சுட்ட, ஸ்வேதா சடாரென நேராகச் சென்று மேஜையின் டிராயரைத் திறந்து பார்சலைத் தொடுகையில்,

'ஹேண்ட்ஸ் அப்' என கவிதா மற்றும் அவரது குழுவினர் வெளியே வர திகைத்துப் போய் மாணிக்கத்தினைப் பார்க்க, 'இனியாவது திருந்தி வாழு' என மாணிக்கம் கறியதும் மாணிக்கத்தினைப் பார்த்து 'ஏமாந்தது நானில்ல மாணிக்கம் நீதானென' கூற பெண் காவலர்கள் அவளை இழுத்துச் செல்கின்றனர். வெளியில் நின்றிருந்த ஸ்வேதாவின் ஆட்களை காவலர்கள் ஏற்கனவே சுற்றி வளைக்க ஸ்வேதாவையும் அவர்களையும் வண்டியிலேற்றி புறப்பட்டுச் செல்கிறது வாகனம்.

மாணிக்கத்திடமிருந்து இறங்கி ஓடிச்சென்ற அவரது மகன் கவிதாவின் கரங்களைப் பற்றி அம்மாவென அழைக்க இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர் அப்போது கவிதாவின் கைப்பேசியில் ப்ரான்சிஸ் என்ற பெயரோடு அழைப்பு ஒலிக்கிறது, 'வெல்டன் கவிதா நாம பேசுன மாதிரியே டைமண்ட்ஸ் எல்லாம் நம்மகிட்ட வந்துருச்சு என்றதும் கைப்பேசியினைக் காதுகளில் வைத்தவாறே மாணிக்கத்தினை நோக்கி புன்னகை செய்கிறாள்.




# தூரிகை வரையும் மின்மினிகள்-(ஹைக்கூ)

**ரீஸா ஹனி (ரிஸானா ஹனிபா)**

இன்றைய கால நவீன கவிதை இலக்கியப் போக்கில் ஹைக்கூ கவிதை வடிவம் ஒரு இன்றியமையாத இடத்தினைப் பிடித்திருக்கின்றது. எங்கும் எதிலும் தனித்துவமான வரையறையில் நின்று அது வேறுபடுகிறது. சிந்தனையைத் தூண்டில் போட்டு இழுக்கும் சுவை உடையது.

ஹைக்கூ என்பது முதன் முதலில் ஜப்பானிய மொழியிலேயே தோற்றம் பெற்று பின்னாட்களில் உலகம் பூராகவும் பரவிய ஒரு குறுங்கவிதை வடிவமாகும். ஜப்பானியக் கவிதையின் மொழிபெயர்ப்பைத் தவிர்த்து முதன் முதலாக தமிழில் ஹைக்கூவை அறிமுகம் செய்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான் ஆவார்.

அசைகளின் இசைவு கொண்டு ஹைக்கூ கவிதைகளை எழுதுவது என்பது கடினமானது. எல்லாக் கவிஞர்களாலும் அதன் இலக்கணம் பற்றி எழுதுவது என்பது இயலாததாகவே ஆகின்றது. ஆனால் ஹைக்கூ கவிதையின் வடிவம் உணர்ந்து எழுதும் ஒரு கவிஞனால் ஏனைய கவிதையின் வடிவங்களை எல்லாம் மிக இலகுவாக எழுதி விட முடிகின்றது. அந்தவகையில் இலக்கியத்தின் மீதான தனது இயலுமையை தனது இரண்டாவது நூலான தூரிகை வரையும் மின்மினிகள் ஹைக்கூ கவிதை நூல் மூலம் நிரூபித்திருக்கிறார் வைத்தியர் ஜலீலா முஸம்மில் அவர்கள்.

பரபரப்பும் மிகப் பொறுப்பும் வாய்ந்த வைத்தியத் துறையில் இருந்தாலும் இலக்கியத்தின் மீதான தனது ஈடுபாட்டில் எள்ளளவும் குன்றாமல் இரு துறையிலும் தனக்கென்று தனி முத்திரை பதித்திருப்பது கவிஞரின் அதியாற்றல் என்றால் அது மிகையாகாது.

தூரிகை வரையும் மின்மினிகள் என்பது 786 கவிதைகள் உள்ளடங்கிய ஒரு அழகிய தொகுப்பாகும். ஒவ்வொரு கவிதைகளும் படிக்கும் போது ஒவ்வொரு அனுபவங்களாய் மனக்கண் முன்னே படமாய் விரிகின்றன. கற்பனை கலக்காது ஒப்பனை தடவாது அன்றாடம் நிகழும் ஒரு நிகழ்வை, இயல்பாக நாம் கடந்து செல்லும் ஒரு சம்பவத்தை தன் கலைக் கண்களால் பார்த்து கவித்துவ அறிவை அதில் பாய்ச்சி படித்துச் சுவைக்க ஏதுவாய் படையலிட்டிருக்கிறார் கவிஞர்.

காதல், சமூகவியல், அரசியல், சிற்றுயிர்கள், இயற்கை, மரங்கள், பருவ காலங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களையும் தனது கவிதைக் கரத்தால் தடவி கருப்பொருளாக்கி இருக்கிறார்.

“பிடித்த துப்பரவுத் தொழில்
பிடிக்காமல் போனது
மகன் பார்த்த கணத்தில்”

சமூகத்தில் இன்றளவும் நடக்கும் ஒரு நிகழ்வை மிகத் தத்ரூபமாகச் சொல்லும் கவிதை இது. செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள்.

நியாயமான முறையில் செய்யும் தொழில் தான் என்றாலும் சமூக அந்தஸ்தைப் பெறுவதற்கும், மரியாதைக்குமான எடைக்கற்களாக செய்யும் தொழில்கள் இனங்காணப்படுவதனால் தன் அவமானங்களைச் சகித்துக் கொண்டு தன் பிள்ளை நலன் நாடும் ஒரு தந்தையின் மனநிலையைப் படம் போட்டுக் காட்டும் கவிதை இது. இதைப் படிக்கும் போது மனதில் ஏதோ ஒரு வலி வேரூன்றியது.

“மரத்தில் மோதி
விபத்துக்குள்ளாகவில்லை
வீசிய காற்று”

இந்த கவிதையைப் படிக்கும் போது புருவங்கள் உயர நம்மை அறியாமலேயே ஒரு பிரம்மிப்பு ஏற்படுகின்றது. ஈற்றடியில் புன்னகைத் ததும்புகிறது.

“விடுமுறைக் காலம்
கடற்கரையில் குவிந்த படி
கழிவுப் பொருட்கள்”

இது நம் சமூகத்தில் நாம் பார்த்துப் பார்த்து பழகிப் போன ஒரு விடயம். மனித நடமாட்டம் உள்ள பகுதி என்று பறைசாற்றி நிற்கும் அளவுக்கு குப்பைகள் நிறைந்து வழிகின்றன. பொதுமக்கள் கூடும் இடங்களில். நாகரிக வளர்ச்சியில் எவ்வளவு முன்னேறினாலும் இந்த நிலை மட்டும் சமூகத்தில் மாறுவதாக இல்லை. மனமாற்றமொன்றைத் தோற்றுவிக்க கவிஞர் முயன்றுள்ளமை பாராட்டுக்குரியது.

“பிழிந்த சலவைத்துணி
ஒழுகிக் கொண்டிருக்கிறது
மனைவியின் வியர்வை”

ஒரு இல்லத்தரசின் வேலைப்பளுவை இத்தனை அழகாக இதைவிட எப்படிச் சொல்வது? நாளாந்தம் ஒரு மனையாள் படும்பாட்டைத் தெளிவாக உரைக்கிறார்.

“வீட்டுப் பத்திரம்
பாதுகாப்பாக இருக்கிறது
அடகுக் கடையில்”

வறுமையின் வரைவிலக்கணம் கூறும் கவிதை. அடகுக் கடைக்கு சென்ற பத்திரம் பாதுகாப்பாகக் தானே இருக்கும்?

எத்தனை தோழிகள் இருந்தாலும் பெண்களுக்கு என்றுமே முதல் நிலைத் தோழி தாய் மட்டுமே. அந்த வகையில்...

“வீட்டுக்கு வந்த தாய்

மகள் பரிமாறுகிறாள்
பெருந்துக்கம்"

இந்தக் கவிதையில் தாய் மகளுக்கான ஒரு உன்னத உறவு வெளிப்படுகின்றது. மனக்கலக்கம் யாவும் கொட்டித்தீர்க்கும் இடம் தாய்மடி அல்லவா? அதையேதான் கவிஞரும் உணர்ந்து கவிதையாக வடித்திருக்கிறார்.

"எங்கும் திருட்டு
பயம் தருகிறது
முகநூல் பதிவு"

உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற கவிதை இது.

"ஆனது சுகப்பிரசவம்
ஆயினும் மகிழவில்லை
ஆண்வாரிசு வேண்டும் குடும்பம்"

இன்னும் சமூகத்தில் நிகழும் அவலம். பெண் குழந்தைகளை சுமையாக எண்ணும் பழக்கம் இன்று வரை காணப்படுவது மிகவும் வருந்தத்தக்கது.

"ஊஞ்சலாடியும்
சந்தோஷப்படவில்லை
அந்தக் கூண்டுக்கிளி"

ஊஞ்சலாடுவது மகிழ்ச்சி தருவது. ஆனால் ஊஞ்சலாடியும் சந்தோஷம் இல்லை என்கிறார் கவிஞர். உலகில் சுதந்திரம் தானே ஆகப்பெரும் சந்தோசம். அதை இத்தனை அழகாய் கவிஞர் கூறி இருக்கிறார்.

"மின்சாரமில்லா இரவு
இரசிக்கும்படியாக இருக்கிறது
மழைச்சத்தம்"

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் நாம் மறந்த இயற்கையின் அழகை இந்தக் கவிதை இயம்புகிறது. மின்சாரம் இல்லாத இரவு அமைதியில் மழை தூறும் ஓசை ரம்மியமான சூழலாக இருக்கும். அதை அனுபவித்துக் கவிஞர் பதிவு செய்திருக்கிறார்.

மலடி என்று பட்டம் பெற்ற ஒரு பெண், தான் ஒரு குழந்தை பெற்று அது இறந்த போதும் கவலைப் படவில்லை என்றால் மலடி என்ற பெயரால் அவள் எத்தனை மனக்குமுறலுக்கு ஆளாகி இருப்பாள் என்பதனை

கவிஞர் இவ்வாறு கூறுகிறார்.

"இறந்தது பிறந்த சிசு
கவலைப் படவில்லை
மலட்டுப்பட்டம் பெற்ற பெண்"

என்று கவிதையில் கவிஞர் அந்தப் பெண்ணின் மனநிலையைத் துழாவி வைத்திருக்கிறார்.

"எத்தனையோ தடவை
பிரிதலும் சேர்தலும்
கடிகாரத்தில் முட்கள்"

அடடா..! எத்தனை ஆழமான ஒரு கவிதை இது. நிதமும் நாம் அவதானித்துக் கடக்கும் ஒரு சம்பவத்தை கவிஞர் உற்று நோக்கி வாழ்வில் சுகதுக்கச் சுழற்சியை அதற்குள் அடக்கி இருக்கிறார். வாழ்வியலை மூன்று வரிகளுக்குள் சூட்சுமமாய் உரைத்திருப்பது கவிஞரின் திறமை இன்றி வேறில்லை.

"மரக்கலயத்தில்
இலைக்கஞ்சி அருந்தும்
களைப்புற்ற மரவெட்டி"

மிகவும் சிறப்பான விழிப்புணர்வூட்டும் ஒரு கவிதை இது. மரங்களை வெட்டும், காடுகளை அழிக்கும் மனிதன் அந்த மரம் தந்த கலயத்தில் தாவர உணவை அருந்துகிறான்.

மனிதனின் ஆகப் பெரும் மடத்தனமும், நன்றி கெட்ட தனமும் இதுதான். காடழிப்பின் மீதான கவிஞரின் பார்வை இது.

இப்படியாக வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொரு வகையிலும் நிகழும் சாதாரண சம்பவங்களையும் தனது கலைப் பார்வை கொண்டு பார்த்து கவித்துவமாக்கி வாசகர்களின் உள்ளுணர்வையும் சிந்தனையையும் தூண்டும் அழகிய துளிப்பாக்களாய்த் தொகுத்து தம் கைகளில் தவழ வைத்த நூலாசிரியர் வைத்தியர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இன்னும் இது போல பல நூல்களை நமக்கு வழங்கி இலக்கிய உலகில் ஒரு மின்னும் தாரகையாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எங்களது பேரவா.

ஏறாவூர்.
நூலாசிரியர் -
DR.ஜலீலா முஸம்மில்
நூல் வெளியீடு -
JMஈ பதிப்பகம் மூதூர் இலங்கை
முதற்பதிப்பு 2023
வடிமைப்பு - தமிழ் நெஞ்சம் அமின்
பிரான்ஸ்



# இழந்த காலங்கள்

கமலினி கதிர், சுவிற்சலாந்து

சித்திரை மாதத்து வெயில் கொழுத்திக் கொண்டிருந்தது.சூரியன் எப்போதும் கிழக்குத் திசையில்தான் உதிக்கும் என்று நம்பியிருந்த காலம் போய் அறிவியலின்படி சித்திரையில் மட்டுமே சரியாக கிழக் குத்திசையில் வரும் என்பதைத் தெரிந்திருக்கும் காலமிது. பம்பலப் பிட்டி பிரதான தரிப்பிடத்தில் பேருந்திற்காக காத்திருந்தாள் மாலினி. குறித்த நேரத்திற்கு பேருந்து வருமென்று எதிர்பார்க்க முடியாது. சுவி ற்சர்லாந்தில் வாழும் மகளிடம் சென்று திரும்பியதிலிருந்து அந்த வாழ்க்கையுடன் இலங்கை வாழ்க்கையை ஒப்பிடத் தொடங்கியிருந் தாள் மாலினி.எண்ணங்கள் விரிந்து கொண்டு போக பேருந்தும் வரவே வெயிலிலிருந்து இதுவரை காத்த குடையைச் சுருக்கியபடி பேருந்தில் ஏறிய மாலினி டிக்கெற் எடுத்து விட்டு காலியான இருக்கையில் அமர் ந்தாள். அப்போது முன்னிருக்கையில் தெரிந்த முகம் போலத் தெரிய மெதுவாக முதுகில் தட்டினாள்.அவள் நினைத்தது சரியாகவே இருந் தது.அவளுடன் யாழ்ப்பாணத்தில் கச்சேரியில் வேலை செய்த பத்மா தான்.'பத்மாக்கா!கன காலம் கண்டு உங்களை. நீங்க மகள் சூர்யாவி டம் நோர்வேக்குப் போனதாக அறிந்தன்.எப்ப வந்தனீங்க? நல்லாய் பழுதாய் போனீங்க.' மாலினி கேட்கவும்'ஓம்.நான் இப்ப ஒரு வருடமாய் எங்கடை வீட்டிலை சொய்சபுரவில் தான் இருக்கிறன்.ஒரு நாளைக்கு வாரும்'. இருவரும் ஒருவருக்கொருவர் தொலைபேசி எண்களைப் பரி மாறியதுடன் சாதாரண உரையாடலுடன் விடை பெற்றனர். பழக்க தோஷத்தில் பழுதாய் போனீங்க என்று சொன்னவுடனேயே லண்டனி லிருந்து வந்த தன் தங்கையின் மகள் கல்பனா'பெரியம்மா!சாப்பாட்டுச் சாமான்தானே பழுதாகும்.எப்படி ஆட்கள் பழுதாகலாம்? தமிழரெல்லாம் தெரிந்தவர்களைக் கண்டவுடன் என்ன மெலிஞ்சிட்டீங்க என்றோ பழு தாய் போய்ட்டீங்க என்றோ கேட்பினம். நீங்களும் ஏன் அப்பிடிச் சொல்றீ ங்க?அது டிஸ்கஸ்ரிங்காக இருக்காதா அவங்களுக்கு' கேட்டது நினைவுக்கு வந்து இப்போதெல்லாம் அந்த வார்த்தையைத் தவிர்க்க தான் முயற்சித்தும் ஓடிவந்து அந்த வார்த்தை வாயில் உட்காரும் பழக்க தோஷத்தை நினைத்துப் பார்த்தாள்.

மாலினிக்கு பத்மாவிடம் அடுத்த நாளே போக மனம் பரபரத்தது.முந் தையப்போல் நினைத்தவுடன் ஒருவரிடம் இப்போது போகமுடியாது. அவர்களுக்கு வசதியா நிற்பார்களா என்று கேட்டுவிட்டே போக வேண் டிய காலத்திற்கு கடத்தப்பட்டு விட்ட காலமிது. பத்மா அக்காவைப் பற் றிய நினைவுகள் மாலினியின் மனதில் ஓடிக் கொண்டிருந்தன.எல்லோரி டமும் கலகலப்பாகப் பேசி ஒட்டி உறவாடத் தெரியாதவர்தான் பத்மா க்கா.தானுண்டு தன் வேலையுண்டு என்று தானிருப்பா.கொஞ்சம் இடை வெளி விட்டே எல்லோரிமும் பழகுவா.அவவிடம் யாரும் இலகுவில் மனம் விட்டுப் பேசிவிட முடியாது.அவரது குடும்ப விடயங்கள் எதுவுமே யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவ சண்டிலிப்பாயைச் சேர்ந்தவ என்பதைத் தவிர வேறெதுவுமே தெரியாது.அவரது மகள்கள்; சூர்யா, நிகிலா சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் படித்ததால் பள்ளி முடிந்து தாயுடன் போவதற்காக அடிக்கடி கச்சேரிக்கு வருவதால் கச்சேரியில் வேலை பார்க்கும் பலருக்கும் அவர்களைத் தெரியும்.சூர்யா தாயைப் போல என்றால் நிகிலா அப்படியல்லாமல் கலகலவென எல்லோரிடமும் பேசுவாள்.ஒன்பது பத்து வயதிலிருந்தே நிகிலா வருவதால் எல்லோரு க்கும் அவளைப்பிடிக்கும்.மா நிறமானவளாக இருந்தாலும் அந்தக்கதை பேசும் கண்கள் யாவரையும் மயக்கித் தம்வசம் இழுத்துவிடும்.அவரு க்கு எத்தனை பிள்ளைகள் என்பதைக் கூட யாரும் தெரிந்திருக்கவி ல்லை.பேருந்தில் பார்த்த போது அவ கண்ணிலிருந்த சோகத்தில் பங்கு பற்ற வேண்டுமென்று மாலினியின் மனம் உந்தித் தள்ளியது.

வெகுவிரைவில் மாலினி சொய்சபுரவில் இருக்கும் பத்மா வீட்டுக்குப் போவதற்காய் பேருந்திலிருந்து இறங்கினாள்.கனகாலம் அந்தப் பக்கம் வராததினால் அவர்கள் புளக்கைக் கண்டு பிடிக்க கொஞ்சம் நேரம் பிடித்தது.அரசமரத்தைத் தாண்டும் போது அந்த இலைகளின் சரசரப் பில் தன்னை மறந்தாள் மாலினி.ஆரத்தழுவும் அந்த அரசமரக் காற்று அவளை எப்போதுமே பரவசப்படுத்தி விடும்.அரசமர இலைகளின் கிசு கிசுப்புச் சத்தம் எப்போதுமே அவளைப் பரவசப்படுத்தும்.அவை தமக் குள் இரகசியமாகப் பேசிச் சிரிப்பதுபோல் மாலினிக்குத் தோன்றும். காய்ந்து உதிரும் இலைகள் கூட கைகோர்த்தபடி

விழுவது போலிரு க்கும்.சில நிமிடங்கள் அங்கு நின்று அந்த மென்மையான சத்தங்ளை காதில் வாங்கியபடியே பத்மாவின் வீட்டை அடைந்தாள்.வாசலில் அழைப்பு மணியை அழுத்தவும் பத்மா வாசல் கதவைத் திறந்து விட் டாள்.உள்ளே நுழைந்த போதுதான் அதிர்ச்சி தரும் விடயத்தைப் பார்த்து வெகுவாய் அதிர்ந்து போய் விட்டாள். சாளரத்தினருகில் உட்கார்ந்து வெளியே வெறித்துப் பார்த்த வண்ணம் கைகளை வெறுமனே பிசைந்தபடி உட்கார்ந்திருந்தாள் ஒரு மெலிந்த பெண். நிகிலாவைப் போலத் தெரிய அதிர்ந்து போனாள் மாலினி. அவிழ்ந்து தொங்கின தலைமுடியும்;,ஒளியிழந்த கண்களும்.ஓடிப்போய் அவளைக் கட்டியணைத்தாள் மாலினி.அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரிய வில்லை.'என்ன பத்மாக்கா!'பதட்டத்துடன் மாலினி கேட்கவும் வார்த் தைகள் வெளிவராது உயிரற்ற குரலில் உதடுகள் துடிதுடிக்க மாலினி யை அணைத்துக் கொண்டாள் பத்மா.உணர்ச்சிக் கொந்தளிப்பினால் இருவராலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவே முடியவில்லை. அணைத்தபடியே இருவரும் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்தார்கள். எதுவுமே தெரியாமல் நிகிலா வெளியில் காற்றின் தோழமையுடன் சிறகை விரித்துப் பறக்கும் பறவைக் கூட்டத்தை வெறுமனே பார்த்த படியிருந்தாள்.

பத்மா நிதானத்திற்கு வந்து தானாகவே பேச்சை ஆரம்பிக்கு மட்டும் அவள் முதுகை ஆதரவுடன் தடவி விட்டபடி காத்திருந்தாள் மாலினி. 'மாலினி!எவ்வளவு புத்திசாலியாக இருந்த நிகிலா இப்ப இருக்கிற நிலையைப் பார்த்தீரா?கொழும்பில் நல்ல கொம்பனியில் ஃபினான்சி யல் ஹெட் பொறுப்பில் இருந்தவள் இப்பிடியாயிட்டாள்.சிங்களம்,ஆங் கிலம் என்று சரளமாகப் பேசத் தெரிந்த என் மகள் ஒரு மொழியும் பேசத் தெரியாமல் அவளைப் பார்த்தீரா?இரண்டுமுறை லண்டனுக்கு தங்கள் பிரதிநிதியாய் கொம்பனி அவளை அனுப்பியிருந்தது.அவ்வளவு கெட்டித்தனமுள்ள பிள்ளை குடும்பத்தைக் கொண்டு இழுக்கத் தெரி யாமல் தடுமாறிட்டாளே.அவளுடைய எந்த விருப்பத்தையும் நான் நிராகரிக்கவில்லை.நிகிலா பதினான்கு வயதிலிருந்து சென்ற் Nஜா்ன்ஸ் பாடசாலையில் படித்த சந்தோஷ் என்ற பிள்ளையை விரும்பியிருந்தா. நல்ல குடும்பம்.சூர்யா சொன்னபோது தெரிந்தும் தெரியாதது போல் இருந்தன். கல்யாண வயது வரும்போதும் அதே அன்புடனிருந்தால் பார்க்கலாம் என்று நான் அவருக்கு கூட சொல்லேலை. அவரும், மகன் அகிலனும் ஆமிக்காரரால் சுடுபட்டுச் சாக எல்லாத்தையும் நான் தாங் கிக் கொண்டிருந்தது இந்த இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளுக்காக த்தானே.பிறகு சூர்யாவும் கல்யாணம் செய்து நோர்வே போன பின்தான் பிரச்சனை வந்திச்சு.கல்யாணம் என்று வந்த போது தான் அவனின் அம்மா சாதக பொருத்தம் பார்க்க சாதகம் கேட்டு குடுத்தன்.அப்பதான் பிரச்சனையே தொடங்கிச்சு.நிகிலாக்கு சாதகத்தில் செவ்வாய் சரியில் லாத இடத்தில் இருப்பது சரியான தோஷமென்று வேண்டாமென்றிட்டி னம்.பெடியனுக்கு தோஷமில்லையென்றும் அவன் உயிருக்கு கூடா தாம். அவனுடைய தாயும் அதற்கு முதல் நிகிலாவிடம் அன்பாய்த்தானி ருந்தவ.இப்பிடிப் பொருத்தம் பார்த்தவர் சொன்னவுடன் பயந்திட்டா. எங்களோடையெல்லாம் நல்லாய்த்தானிருந்த குடும்பம் அது. இதைக் கேட்டு நிகிலாவும் ஒரேயடியாய் வேண்டாமென்றிட்டா. சந்தோஷ் இதிலெ ல்லாம் ஒன்றுமில்லையென்று எவ்வளவோ சொல்லியும் நிகிலா ஒரேய டியாய் மாட்டன் என்றிட்டாள்.எங்கையாவது அவர் உயிரோடை நல்லா யிருக்க வேணும்.கல்யாணம் செய்திட்டு அவருக்கேதும் ஆயிட்டால் என்னாலை தாங்க முடியாது.அவர் பொருத்தமான யாரையென்றாலும் கல்யாணம் செய்து உயிரோடை மட்டும் இருந்தாலே போதும்'என்றிட் டாள்.அதுக்கு மேலை என்னாலையும் ஒன்றும் செய்ய முடியாமல் போயிட்டுது. எனக்கும் பயமாயிருந்திச்சு. கல்யாணம் செய்திட்டு ஏதும் ஆயிட்டால் ஐயோ என்று கத்தினால் என்ன ஆகப் போகுது? தகப்பன் உயிரோடை இருந்திருந்தா எப்பிடியோ மாத்தியிருப்பார்'ஒரே மூச்சாக பேசிய பத்மா சிறிது நிறுத்தி மூச்சு விட்டாள்.

'சந்தோஷ் ஒரு வருஷம் காத்துக் கொண்டிருந்திட்டு நிகிலாவின் மனதை மாற்றுவதில் தோற்றுப்போய் பிறகு தாய் பார்த்த பெண்ணை யே கல்யாணம் செய்து மலேசியாவில் செட்டில் ஆயிட்டான்.நிகிலா இரண்டு வருஷம் கல்யாணமே வேண்டாமென்று இருந்திட்டு பிறகு நான் பார்த்த தம்பியைக் கல்யாணம் செய்து யேர்மனிக்குப் போயி ட்டா.நானும் இங்கை தனிய இருக்க வேண்டாமென்று சூர்யா என்னை நோர்வேக்கு கூப்பிட்டிட்டா.அங்கை போய் மூன்று வருஷம் இருந்தன். ஆனா நிம்மதியாய் இருக்க முடியேலை. நிகிலாக்கு அந்தப்பிள்ளை பிரேமுடன் வாழ முடியேலை. அவர்களுக்குள் என்ன பிரச்சனையென்றே எங்களுக்கு விளங்கேலை.பிரேம் நல்ல அருமையான பிள்ளை. கல்யா ணத்திற்கு முதலே நிகிலாவின் முதல் காதல் பற்றி பிரேமிடம் சொல் லவும் அதை அவர் பெரிதாக எடுக்க வில்லை.இந்தக்காலத்தில் காத லிக்காத பெண் என்று யாரும் இருக்க மாட்டினம்.இதெல்லாம் ஒரு பெரிய விஷயமில்லையென்று சாதாரணமாகவே எடுத்துக் கொண்டார். ஆனால் இந்த நிகிலாதான் எடுத்ததற்கெல்லாம் புருசனோடை சண்டை பிடிச்சுக் கொண்டு.அந்தப் பெடியனும் எவ்வளவுதான் பொறுப்பான்? ஆனாலும் ஐந்து வருடம் பொறுத்துப் பொறுத்துக் களைச்சிட்டான். யேர்மனியில் தன்னாலை டொய்ச படிக்கேலாது என்றும் லண்டன் போகச் சொல்லியும் கரைச்சல் குடுத்து அந்தப் பிள்ளையும் தான் வளர்ந்த படிச்சு நல்ல வேலையிலிருந்தாலும் நிகிலாக்காக

எல்லாத்தையும் விட்டிட்டு லண்டன் போய் அங்கை நல்ல வேலையில்லையெ ன்றாலும் சமாளிச்சுக் கொண்டிருந்தும் பிரச்சனை தீர்ந்த பாடில்லை. நிகிலாவுக்கு நல்ல வேலை கிடைச்சும் அதிலையும் நிலைத்து நிற்கா மல் எல்லாத்தையும் குழப்பியடித்து தன்ரை தலையிலை தானே மண் ணை அள்ளிப் போட்டுக் கடைசியிலை மனநோய்க்கு ஆளானதுதான் மிச்சம்.அவளுடைய சாதக பலன் இப்பிடித்தான் போலை.' ஒரே மூச்சில் பேசிவிட்டு 'இரும்.மாலினி.ரீ போட்டுக் கொண்டு வாறன்' என்று எழுந்து சமையலறை நோக்கிச் சென்றார்.

அந்த நேரத்தைப் பயன்படுத்தி மாலினி நிகிலா பக்கத்தில் போய் 'நிகிலா!என்னை நினைவிருக்கா?அம்மாவுடன் கச்சேரியில் வேலை பார் த்தனே.நீர் அப்ப சின்னப்பிள்ளை. எங்களோடையெல்லாம் கதைப்பீரே. வாரும் உட்கார்ந்து கதைப்பம்.எவ்வளவு காலம் கண்டு.எவ்வளவு கதை இருக்கு.' திரும்பிப் பார்த்தவள் நகத்தைக் கடித்தபடி மேலும் கீழும் பார்த்துவிட்டு 'ஆன்ரி!' என்று கட்டியணைத்து கதறிவிட்டாள். மாலினிக்கு உடலெல்லாம் பதறியது.எவ்வளவு துன்பம் இருந்திருந்தால் இப்படிக் கதறியிருப்பாள்.மாலினியைத் தெரிந்துதான் கதறினாளா அல் லது தன் மனவலியை இறக்கி வைக்க முயன்றாளா புரியவில்லை. அன்று பார்த்த குழந்தை நிகிலாதான் மாலினியின் கண்களுக்குத் தெரிந்தாள்.மாலினிக்குத் தன் நெஞ்சை யாரோ முறுக்கிப் பிழிவது போலிருந்தது. நிகிலாவுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியவி ல்லை என்றாலும் கட்டியணைத்து முதுகை நீவி விட்டாள்.அவளின் கதறல் கேட்டு விரைந்து வந்த பத்மா மனதுக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்த கவலை அழுகை மூலம் கொட்டி வெளியே வரட்டும், துன்பத்தைக் கொஞ்சமென்றாலும் குறைக்கட்டும் என்று உணர்ந்து வெறுமனே பார்த்தபடி நின்றாள்.

அழுகை குறைந்ததும் திரும்பவும் யன்னலருகே சென்றவள் நகத்தைக் கடித்தபடி வெளியே பார்த்தபடியிருந்தாள்.அழுததை மறந்து வெற்றுப் பார்வையுடன் இருந்தவளைப் பார்க்க மாலினிக்கு நெஞ்சைப் பிசைந் தது.'பத்மாக்கா!ஏன் நீங்க தமிழகத்திற்கு கூட்டிச் சென்று யாரும் சைக்கோலஜிஸ்ட்டிடம் காட்டக்கூடாது. திறக்கப் படாத பூட்டுக்கள் என்றோ திறக்க முடியாத பூட்டுக்கள் என்றோ எதுவுமேயில்லை.பிரச்ச னைகளும் அதுபோலத்தான்.பிரச்சனைகள் என்று நினைக்காமல் தீர்க்க ப்பட வேண்டிய தீர்வுகள் என்று நினைத்தால் தீர்க்க முடியும் தானே. மனம் குழம்பிப் போவதற்கு எத்தனையோ காரணங்களக்கா.ஆசைகள் நிறைவேறாத ஏமாற்றங்களும் மனதின் ஒரு மூலையில் உட்கார்ந்து சதா விறாண்டிக் கொண்டிருக்கலாம்.மேலோட்டமாய் சாதாரணமாய் இருப்பது போலத் தோன்றினாலும் கண்ணுக்குத் தெரியாமல் காயங் கள் அவளைப் போட்டு அலக்கழித்திருக்கலாம்.சிலவேளை குற்ற உணர்ச்சி கூட ஏற்பட்டிருக்கலாம்.நான் யூரியூப்பில் rஜய்சென் என்ப வருடைய நிகழ்ச்சி பார்க்கிறனான் பிரச்சனைகளை அவர் அணுகும் விதமும் வெறும் பேச்சாலேயே தீர்வுகள் தீர்;ப்பதும் நல்லாயிருக்கு. உங்களுக்கு வட்ஸ்அப்பில் அனுப்புறன்.பாருங்கோ.பிடிச்சாப் போய்ப் பாருங்கோ. அவ பழைய காதலை மறக்க முடியாமல் இந்த திருமண உறவில் நுழைந்ததால்தான் பிரச்சனையென்று நான் நினைக்கிறன். காதலனை விட்டு விலகிய நிகிலாவால் தன் காதலை மறக்க முடிய வில்லைப் போலும்.;சிலவேளை எல்லாத்திலையும் சந்தோசோடை பிரேம்மை ஒப்பிட்டுக் கொண்டு இருந்து வாழ்க்கையைத் தொலைச்சி ட்டா போலை' என்று மாலினி சொன்னதை பத்மா ஏற்றுக் கொண்டாள்.

'என்னுடைய அண்ணாவின் மகள் எங்கள் குடும்பத்துக்கு பொருந்தாத ஒருத்தனைக் காதலித்து எவ்வளவு சொல்லியும் கேட்காமல் ஒரே பிடி வாதமாக இருந்ததால் செய்து குடுத்தார்.ஆனால் ஆறேழு வருசத்தில் அவள் தற்கொலை செய்து செத்துப் போனாள்.இரண்டு பிள்ளையள். கல்யாணம் செய்த பிறகுதான் தன் தெரிவு பிழையென்று உணர்ந்து எங்களிடம் ஒப்புக் கொள்ளவும் மனசில்லாமல் வாழவும் பிடிக்காமல் தற்கொலையைத் தெரிவு செய்தாள்.அவளுக்கும் பொருத்தம் இல்லா மல் செய்தது தான் இப்படியாயிட்டுதோ என்று நாங்கள் யோசித்துதான் நிகிலாவை பொருத்தம் பார்த்து செய்தம். ஆனால் அதுவும் இப்படியாயி ட்டுதே.நல்ல புருசன் அமைந்தும் வாழக் குடுத்து வைக்கேலை.அந்தப் பிள்ளையும் எவ்வளவோ அட்ஜஸ்ற் பண்ணியும் முடியாமல்தான் கடை சியில் எனக்கு போன் பண்ணினார்.எல்லாம் விதி.நாங்க கொண்டு வந் தது இவ்;வளவுதான்' நீண்ட பெருமூச்சுடன் அமைதியானாள் பத்மா.

'சில பிள்ளைகள் காதல் முறிஞ்சதோடை எல்லாத்தையும் மறந்து புது வாழ்க்கைக்கு தயாராயிடுவினம்.சிலராலை அது முடியுறேலைப்போலை. எத்தனை பிள்ளைகள் காதலித்துப் பிறகு சரிவராமப் போகும்போது வேறை யாரையோ கல்யாணம் செய்து நல்லாய் வாழுதுகள்.ஒரு குழந்தை பிறந்திருந்தால் எல்லாம் சரியாகியிருக்கும். மனதைத் தளர விடாதேங்கோ அக்கா.நிகிலாவுக்கு சுகம் வரும்.அவள் பழையபடி ஆயி டுவாள்' பத்மாவை சமாதானப்படுத்தினாள் மாலினி.வெளியே மரத்திலிரு ந்து காகம் ஒன்று விடாமல் கத்திக் கொண்டிருந்தது. அந்தச் சத்தம் நிகிலாவைப் பாதித்ததாகத் தெரியவில்லை. தூரத்தில் பன்சலவில் பிரீத் ஓதும் ஓசை காற்றோடு கலந்து வந்தது.எதுவுமே நிகிலாவின் மனதில் ஒட்டாமல் தன் விரல் நகத்தைக் கடிப்பதும் வெளியே பார்ப்பதும் உள்ளே பார்ப்பதுமாக தன்னுடைய ஒரு உலகத்தில் இருந்தாள் நிகிலா.புன்னகையைத் தொலைத்து விட்ட நிகிலாவையே பார்த்தபடி மேல் சீலிங்கில் ஒரு பல்லி 'ச்' கொட்டியபடி நகர்ந்தது.



# சமுதாயச் சீற்றங்களை வெளிக்கொணர்ந்த சுந்தரிமணியனின் ‘தொங்குபாலம்’ - சிறுகதை விமர்சனம்

திரு.சமயக்கண்ணு, மதுரை

தமிழ்நெஞ்சம் இதழில் ஆசிரியர் சுந்தரமணியன் எழுதிய தொங்குபாலம் சிறுகதை படித்தேன். சிந்தை மகிழ்ந்தேன். கதை சோகம் கப்பிய கதை எனினும் தீட்டியவிதம் அற்புதம்.

தொங்குபாலம் என்ற தலைப்பிற்குக் கதை எப்படிப் பொருந்துமோ, எப்படி முடிவு வருமோ, கதையை எப்படி முடிக்கப் போகிறாரோ என்ற தவிப்பில் காலநேரம் விரயமின்றிக் கதையை விரட்டி விரட்டிப் படித்தேன்.

அம்மாவும் இல்லாது அப்பாவும் இல்லாது இருக்கின்ற பச்சிளங்குழந்தை மகிழன் ஒரு தொங்குபாலம் போல் ஆகிவிட்டானே என்று உரியவர்கள் வேதனையை வெளிக்காட்டும்போதுதான் கதைக்கு ஆசிரியர் வைத்த பெயர் அருமை என்பது எனக்கு மட்டுமல்ல இக்கதையை வாசிக்கும் அனைவரும் மகிழ்ந்து போற்றுவர் என்பது முற்றிலும் உண்மை.

அபியின் தற்கொலை அவசரப்பட்ட ஒன்றாக அறியமுடிகிறது. எவனோ ஒருவன் “என்னடி ஒரு நாள் என் வீட்டுக்கு வந்து போறீயா? இல்ல நீயும் நானும் சேர்ந்து எடுத்த போட்டோவ உன் புருசனுக்கு அனுப்பவா? இன்னைக்கு சாயந்தரத்துக்குள்ள செய்தி சொல்லலைன்னா போட்டோ உன் புருசனுக்குப் போயிரும் என்று குறுஞ்செய்தி படித்ததும் பாவம் அபி ஆடிப்போய்விட்டாள்.

இன்றைய புரட்சிப் பெண்ணாக இருந்திருப்பின், “நாம் சேர்ந்து எடுத்த போட்டோதானே வேறு ஒன்றும் வித்தியாசமான, நாம் பார்க்க அருவருக்கும் அசிங்கமான காட்சிகள் உன்னிடம் இல்லை அன்றோ? முடிந்தால் நீ அதை சொன்ன மாதிரி இன்று சாயந்தரத்துக்குள் அனுப்பு பார்க்கலாம்” என்று கூறியிருப்பாள். ஆனால் அவள் ஒரு மன ஊக்கம் இல்லா மைதிலி. அந்தக் காமக்கொடூரன் விதித்த வேண்டா விருப்பத்தை அவளால் எப்போதும் ஏற்கமுடியாது. அதற்கு அவள் மனமும் தயார் இல்லை. இதனால் அவள் அதுபற்றி ஆழ்ந்து சிந்திக்காது, தன் பத்துமாத பச்சிளங்குழந்தை மகிழனையும் மறக்கத்துணிந்தாள். அது மட்டுமா? அவளை மாய்க்கும் தூக்குக்கும் முத்தமிட்டு பெத்தவங்களையும் பித்துப்பிடிக்க வைத்துவிட்டாள். ஆம் அவள் ஒன்றை ஆழ அறியாது அறியாமையில் வளர்ந்துவிட்டாள்.

ஒருவன் வாழ்வில் எப்போதும் வேப்பம்பழத்திற்காக வேலி ஏறிக்குதித்து திருடப்போனதாக வரலாறு இல்லை. அதே நேரத்தில் முப்பழத்தில் முதல் பழமாம் மாங்கனிக்கு அவன் ஒரு வேளை ஆசைப்பட்டு, அறிவும் சிதறி அதனால் அடுத்தவர் தோட்டத்தில் திருடும் நோக்கில் சுவர் ஏறிக்குதித்து தன் இச்சையை இனிது போக்கிய வரலாற்றைக்கூட இவ்வுலகு கண்டதுண்டு! ஆனால் பாவம் அபி. அபிநய சுந்தரியாய் வாழ்ந்தவளை வளர்ந்தவளை வீதிக்கும் வராது வெயிலுக்கும் காட்டாது வளர்ந்தவளை ஒருவன் எறிந்த காமுகக் கல்வீச்சு அவள் மண்டையை உடைக்கவில்லை என்றாலும் அவள் இதயத்தைச் சுக்கு நூறாய் உடைத்துவிட்டது அன்றோ? எனவே அவள் உடனே எடுத்த தற்கொலை முடிவில்தான் பத்துமாதப் பச்சிளங்குழந்தை மகிழனையோ தன்னைப் பெற்றெடுத்த அன்புத்தாய் சிவகாமியைப் பற்றியோ கிஞ்சிற்றும் எண்ணாது உயிரைப் போக்கிக்கொண்ட இக்கதை எழுத்தாளர் சுந்தரமணியன் எழுதிய கதைகளிலேயே சிந்திக்க வைக்கக்கூடிய அருமைக்கதை என்பேன்.

“மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் போல”- புலனக் குறுஞ்செய்தியைத் தாங்கும் மனசக்தி இல்லாது மாண்டுவிட்டாள் அபி. தொங்குபாலம் என்ற இக்கதையின் பாத்திரங்கள் அனைத்தும் அரிய பல செய்திகளை அள்ளித் தருகின்றன.

அபி இறந்துவிட்ட வேதனையில் பெற்றவர்கள் இருக்க...துக்கம் கேட்கவந்த சொந்தபந்தங்கள் எல்லாம், அபி எப்படி இறந்தாள்? ஏன் இறந்தாள்? என்ன காரணமாக இருக்கும்? என்று ஒரு பட்டிமன்றமே போட்டுவிட்டனர் என்று ஆசிரியர் கூறுவதை இன்றும் நாம் பற்பல இடங்களில் காணும் உண்மைச்சம்பவம் என்பதை நிச்சயம் உணரமுடிகிறது...இதை ஆசிரியர் அருமையாய் விளக்குகிறார்.

இந்தப் பெண்ணுக்கு நாங்க என்ன குறைவைத்தோம்? இப்படி ஒரு தற்கொலை முடிவெடுத்து எங்கள் குடும்பப்பெயரைக் கெடுத்து, குட்டிச்சுவராய் ஆக்கிவிட்டாளே என்று புகுந்தவீட்டு மாமியார் புலம்பலில், தன் வேதனையைத் தெளித்த விதத்தில் உண்மையும் மிளிர்கிறது. ஏனெனில் புகுந்த வீட்டுக்காரர்கள் அபிக்கு எந்தவித இடறப்பாடும் கொடுக்கவில்லை என்பதைக் கதையோட்டம் தெளிவாக்குகிறது.

அபியின் அன்னை சிவகாமி, தன் மகளின் சாவுக்குக் காரணமானவனை பழிவாங்கத் திட்டம் தீட்டும்போது... அபியின் அப்பா குறுக்கிட்டு, “வேண்டாம் நம் பெண்ணின் பெயர் கெட்டுப்போய்விடும். மேலும் அபி இறந்த அன்னிக்குப் போலிஸ்காரங்களைச் சமாளிப்பதே போதும் போதும் என்றாகிவிட்டது! மேலும் அவர்கள் இதைத் தூண்டித் துருவும் பட்சத்தில் வேண்டாததை எல்லாம் வெளிக்கொணர நாம் காரணமாகக் கூடாது என்றதிலிருந்து ஆசிரியர் காவல்துறையின் செயல்பாடு எப்படி யதார்த்தமானது எனப் படம்பிடித்துக் காட்டும் விதம் சிறப்பு.

தொங்குபாலம் என்ற இச்சிறுகதை மூலம் ஆசிரியர் சுந்தரமணியன் அவர்கள் சமுதாயச்சீற்றங்களைப் படம்பிடித்துக் காட்டிய விதம் அருமையாக உள்ளது.

# தங்கேஸ் கவிதைகள்



## காலம்

கிணற்றுத் தவளை
இரவை சபிக்கும் கூக்குரலில்
பாம்புக்கு இரையாகி கொண்டிருக்கிறது

ஒரு சின்னஞ்சிறிய உயிரியால்
பெருங்கடலை குடித்து விட முடியுமா என்ன ?
ஒரு மனது ஒரு கடல் என்றால்
யார் நம்புவார்கள்?

விண்ணேகிப் போகும்
கடைசிப் பறவைகளுக்கு என்ன கதியோ
அதுவே தான் உனக்கும் போ

கோல மாவில் வாசல் தெளித்தது போல
சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்களை
கூட்டிப் பெருக்க
பெருமுயற்சி எடுத்து
தோற்றுக் கொண்டேயிருக்கும்
தென்னையின் கிளைகள்
நீண்டு நீண்டு
கடைசியில் தொடப் போவது
என்னவோ
உன் ஈரல் குலையைத்தான்

செக்கச் சிவந்து கனன்று கொண்டிருக்கும்
காட்டுத் தீயில்
வேகும் உடலின் ஊண் நெடி
எல்லை கடந்து வந்து
நாசியை நிறைக்க நிறைக்க

நீ ஒரு சின்னஞ்சிறிய ஈசல் பூச்சியாகி
அலைந்து கொண்டேயிரு மனமே

திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணையாக இருக்க
அந்த தெய்வத்திற்கே
நாம் துணையாக இருந்த காலம் தான்
இப்போது இந்த இருளை
விலாங்கு மீனைப் போல பிடித்து
நழுவ விட்டு
விளையாடிக் கொண்டிருக்கிறது.

## நான் ஒரு எளிய கதை சொல்லி

நான் ஒரு எளிய கதை சொல்லி
உனக்கொரு சிறிய கதை சொல்வேன்

துயரத்தில் சாளரத்தில்
தென்படும்
மங்கலான முகம்
என்றும் உன் பார்வைக்கு தெரியாது

தவிரவும் உன் போல்சாயம் பூசிய
உதடுகளால் கவர்ச்சிகரமாக
எனக்கு முத்தமிடவும் தெரியாது

பண்டமாற்று போல் விருப்பங்களை
முகநூலில் பரிமாறிக்கொள்ளும்
சூட்சுமத்தில் நான் பூஜ்யம்
பசிய மலைநெல்லியையும்
எளிய வேலியோரப்பூக்களையும்
யார் சந்தைப்படுத்தக்கூடும்?

கடவுளே தான்...
ஒரு புன்னகைக்கும்
சற்று அதிகமாக விரியும்
உதடுகளை சபித்துவிட்டு
மூடிக்கொள்வாய் நீ

ஒரு எளிய கதைசொல்லிக்கு
சமய சந்தர்ப்பம் தெரியாது

ஒரு இளம் பச்சை மரம் முழுவதும்
கொத்து மஞ்சள் அரளிப்பூக்கள்
அதில் அதனதன் இயல்புக்கு
குதித்து தாவும் அணில்கள்
புத்தம் புது மலர்கள் உதிர்வ்தை
அறியாததால் பாவத்தில்
அவைகளின் பங்கு ஏதுமில்லை

காற்று அதை வாஞ்சையாக
தன் உருவமற்ற கரங்களில்
ஏந்திச்செல்கிறது என்பது உனிக்கொரு விசயமில்லை
மேலும் நான் ஒரு எளிய கதை சொல்லி என்பதும்.



# குழல் இனிதோ????
# யாழ் இனிதோ?????

நௌஷாத் கான், அபுதாபி

இந்த உலகத்துலேயே ரொம்ப அழகான விஷயம் எதுன்னா என் குழந்தை தான்.அவள் குழந்தை இல்லை என் தேவதை.அவள் மட்டும் அழகு இல்லை அவள் பெயரும் பேரழகுதான்.

என் பேரழகியின் பெயர் மீரா.என் மீரா வந்ததுக்கு அப்புறம் தான் என் மனைவியை காமம் கடந்து ஆத்மார்த்தமா உண்மையா நேசிக்க ஆரம்பிச்சேன்.

எல்லோருமே கல்யாணமான புதுசுலே தன் பொண்டாட்டிய ஒரு போக பொருளா, தன் காம பசியை தீர்க்க கூடிய ஒரு வடிக்காலத் தான் பார்ப்பாங்க ஆனா உங்க குழந்தை பிறக்கும் போது உங்க மனைவி கூட நீங்க இருந்தீங்கன்னா அந்த காமம் என்கிற எண்ணமே வராது.

என் மனைவி கீதாவுடைய வலியை, வேதனையை, அவள் என் வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவள் என்பதை என் குழந்தையை அவள் பெற்றெடுக்கும் போது தான் ஜீவாயாகிய நான் முதன் முதலாய் உணர்ந்தேன்.

பிரசவத்தின் போது உங்கள் மனைவி மீது ஒரு காதல் வரும் பாருங்க, அந்த காதலை, பாசத்தை வார்த்தைகளால் வர்ணிக்க, சொல்ல முடியாது.

வார்த்தைகள் அற்ற உணர்வுகளால் ஆன அன்பின் ஊற்றை, காதலை உங்கள் உங்கள் மனைவியின் பிரசவத்தின் போது நீங்கள் உணரலாம்.

இந்த உணர்வுகளை நான் சொல்வதை விட நீங்கள் அனுபவித்தால் மட்டுமே அதன் சுகம் உங்களுக்கு புரியும்.என் உயிரின் உயிரை சுமந்த என் மனைவியை என் மகள் பிறந்த அன்றய நாளில் இருந்து உண்மையாய் ஆத்மார்த்தமாய் நேசிக்க ஆரம்பித்தேன் எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல்.

என் மனதில் ஏற்பட்ட அன்புக்கு, பாசத்துக்கு காரணம் என் குட்டி தேவதை, என் செல்ல குட்டி மீரா தான், அவளுடைய ஒரு புன்னகையில் கோடான கோடி கவலைகளையும் கரைக்கும் வல்லமை அவள் ஒரு துளி புன்னகையில் உள்ளது.கடவுள் தான் என் மகளின் ரூபத்தில் என்னருகே இருக்கிறாரோ என அடிக்கடி என் ஆழ்மனதில் தோன்றும் ஏனென்றால் என் மகள் இருக்கும் இடங்களெல்லாம் புன்னகை மட்டுமே நிறைந்திருக்கும்.

என் மகள் மீரா பேசும் பிஞ்சு மொழி எனக்கு தெரியாது ஆனால் அந்த புரியாத மொழியை வருட கணக்கில் கூட கேட்டு கொண்டே இருக்கணும்னு தோணும்.

அவள் முகம், பேச்சு, சைகை எல்லாமும் அழகோ அழகு, என்னை பொறுத்தவரை அழகின் முகவரி என் மகள்.அவள் சுவாசம் படும் தூரத்தில் உறங்குவது இந்த உலகிலேயே அலாதி சுகமுடையது.

என் மகள் சிரிப்பது, அழுவது, சைகைகளால் புரியாத மொழியில் பேசுவது, அவள் உறங்குவது, உளறுவது என்று அவள் செய்யும் ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்து, பார்த்து, இரசித்து, இரசித்து மகிழ்வேன்.

பேரன்பும், பேரழகும் ஒட்டு மொத்தமாய் குத்தகைக்கு என் மகள் எடுத்து விட்டாளா என்ன ?

மொத்தத்தில் அவள் செய்யும் ஒவ்வொன்றுமே இப்பிரபஞ்சத்தின் அதிசயங்களுக்குள் ஒன்று.

என் மகளின் பிஞ்சு விரல்களை பிடிக்கும் போது என்னை புதியவனாய் உணர்கிறேன்.என் தேவதை வந்த பிறகு எங்கள் வீட்டில் துளி கூட, பேருக்கு கூட சண்டை இல்லை அன்பின் ஆலயமாய், பாசத்தின் பாசறையாய், காதலின் அடையாளமாய் என் குடும்பம் என் தேவதையால் ஆனது.

என்னை பொறுத்த வரை இசைக் கருவிகளின் ஒலியை விட என் குழந்தையின் குரலே இனிமையானது.

அந்த ஒரு நாள்....

யார் கண்ணு பட்டதோ என் குழந்தைக்கு பிக்ஸ் வந்தது, வாயில் நுரை வேறு, பதறி அடித்து கொண்டு நானும் என் மனைவியும் ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு சென்றோம்.அங்கிருந்த மருத்துவர்கள் ஆங்கிலத்தில் ஏதேதோ பெயர் சொன்னார்கள்.

கோடியில் ஒரு குழந்தைக்கு தான் இந்த நோய் வருமாம் இதற்கு மருந்தே கிடையாதாம் இன்னும் சில மாதங்கள் தான் என் குழந்தை உயிரோடு இருக்கும் என்றனர்.

அவன் கிடக்கிறான் பைத்தியகார டாக்டர் என்று விரக்தியில் திட்டி விட்டு வீட்டிற்கு வந்து விட்டோம்.

ஒருநாள் அன்று..

என் குழந்தைக்கு பேச்சு மூச்சு இல்லை பதறி அடித்துக் கொண்டு ஹாஸ்பிட்டலுக்கு சென்றோம் டாக்டர் பல்ஸ் பார்த்து சொன்னார் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதென்று.

என் கண்களில் என்னையும் அறியாமல் கண்ணீர் மட்டும் வந்து கொண்டு இருந்தது.மகிழ்ச்சியும் -சந்தோஷமும் நிறைய அன்பும் நிறைந்திருந்த வீடு இப்போது மயானமாய் காட்சியளித்தது.

அந்த கண்ணு இல்லாத கடவுள் தனக்கு அதிகம் பிடித்தவர்களை தான் சீக்கிரம் கூட்டி கொள்வாராம். என் குழந்தையை அந்த படுபாவி கடவுளுக்கு ரொம்ப பிடித்திருக்கிறதோ என்னவோ அதான் என் குழந்தையை சீக்கிரம் கூட்டிக்கிட்டானோ.

வீசும் காற்றிலெல்லாம் என் தேவதையின் குரல் ஒலித்து கொண்டே இருக்கிறது.கொடுமைக்கார கடவுளே என்னையும் -என் மனைவியையும் என் குழந்தை கூடவே சீக்கிரம் கூட்டிக் கொள்ளடா !!

குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள்

மழலைச் சொல் கேளாதவர்.

## கோ. கோகுலநாதன். நெல்லிக்காடு, மட்டக்களப்பு

செலவில்லா எனது திருமணம்.

தாலி செய்ய கூலி கொடுக்கும் செலவு நான்

வைத்ததில்லை...

கணையாழி மாற்றிடும் கல்யாணச் செலவு

வைத்ததில்லை...

தந்தியடித்து யாருக்கும் பந்திவைக்கும் செலவு

வைத்ததில்லை...

ஊரைக்கூட்டி ஊர்வலம் போகும் செலவும்

வைத்ததில்லை...

ஊரார் பேரார் உணவில் உப்பு, புளியில்லயென குறை சொல்ல

வைத்ததில்லை...

ஆதனம், சீதம் என்று பேசி அவஸ்தைகள்

கொடுத்ததில்லை..

கல்யாணப் பெயரில் இருவீட்டாரையும் கணக்குப்பார்க்க

வைத்ததில்லை...

காதலித்த காரணத்தால் யாருக்கும் பெரும் கஷ்ட்டம்

கொடுத்ததில்லை...

காலத்தால் வந்த விதியென்று பெற்றோரும் மற்ரோரும் உணர

வைத்ததில்லை...

காதலென்ற சொல்லால் இருவீட்டார் சம்மதத்துடன்
கடதாசியில் கையொப்பமிட்டு கரம்பிடித்தேன்

என்னவளை...


## ஏ. எம். கஸ்புள்ளா

வந்தமர்ந்ததுதான் தாமதம்
கடலலைகளின் சிரித்த
வரவேற்பு

மெல்லிய தென்றலின் உரசல்
சிறு மணல் நண்டுகளின்
அணிவகுப்பு

சின்னச் சின்ன சிப்பிகளின்
மின்னும் ஒளி

இன்னொரு
பொழுது திரும்பும் வரை..
நேரங்கள்
கடந்து சென்றதே
தெரியாமல் இருந்து விட்டேன்
அவளுக்கான காத்திருப்பில்
நானும் எனது
தனிமைப் பொழுதும்.



கோ. தனுசன். மட்டக்களப்பு, இலங்கை.

# உலகம்

உருண்டை உலகம் உறுளுது
புதுமை கண்டு மிரலுது.
தொழினுட்பம் வளருது
தொடர்புகளை வளர்க்குது.

தொடர்புகொள்ளும் தெலைபேசி
தொல்லைகளைகொடுக்குது.
எல்லைகளை சுருக்குது
எல்லாத்தையும் கெடுக்குது.

விரலசைவில் விளக்கம்
வரும் வினாக்களுக்கு.
புவியசைவில் நடுக்கம்
வரும் கனாக்களுக்கு.

இமையசைவில் இயக்கம்
வரும் இயந்திரத்திற்கு.
இறுதியிலே நடுக்கம்
வரும் மனுக்குலத்திற்கு.

பழமைகளை நாடியவர்
துருப்பிடித்துப் போகிறார்.
புதுமைகளை தேடியவர்
புவியிதனிலே வாழ்கிறார்

எப்பொழுதும் கற்பவனே இருக்கிறான்.
எண்ணியபடி நடப்பவனே பிழைக்கிறான்.
ஏழைமக்கள் மட்டுமே
இருந்த இடத்தில் இருக்கிறார்.


கடவுகள் இல்லை என்பவனே
பகுத்தறிவு ஆளன்.
கடவுளரை படைத்தவனே
கட்டுக்கதைக் காரன்.

விஞ்ஞாய் வளர வளர
அஞ்ஞானமும் வளருது.
மெஞ்ஞானம் வளர வளர
முடநம்பிக்கை வளருது.

வெட்டவெளிக்குள் இருக்கும்
புவியில் இத்தனையும் நடக்குது.
வெளியில் நின்று உற்றுப் பார்த்தால்
உண்மை எல்லாம் விளங்குது.

# கொழுத்தவனுக்கு கொள்ளு; இளைத்தவனுக்கு எள்ளு’

தொகுப்பு:இரா.சீ.பாலகுமார் MA



பலமுறை கேட்ட முதுமொழி. ஆனால், அர்த்தம் நிறைந்தது. கொழுப்பைக் கரைப்பதில் கொள்ளுக்கு அத்தனை சக்தி உண்டு. அதற்காக, இதை வெறும் கொழுப்பைக் குறைக்கும் உணவு என்று சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. `ஏராளமான மருத்துவப் பலன்களையும் உள்ளடக்கியது' என்கிறார்கள் மருத்துவர்கள். இது ஓர் ஆரோக்கிய உணவு. ஊற வைத்தோ, வறுத்தோ சாப்பிடலாம். ரசம், துவையல், குழம்பு என விதவிதமாகச் சமைத்தும் சாப்பிடலாம். நன்கு அரைத்து, சாறு எடுத்து சூப்பாகச் செய்தும் அருந்தலாம். இதை ஊறவைத்த நீரில்கூட எண்ணற்ற மருத்துவப் பலன்கள் இருக்கின்றன.

ஆயுர்வேத, சித்த மருத்துவத்திலும் கொள்ளு பயன்படுத்தப்படுகிறது. இதில் வைட்டமின்கள், புரதச்சத்து, இரும்புச்சத்து ஆகியவை நிறைவாக இருக்கின்றன. இதன் மகத்துவத்தை அறிந்திருந்ததால்தான் நம் முன்னோர்கள் கடினமான பணிகளைச் செய்யும் குதிரைக்கு இதை உணவாகக் கொடுத்தனர். குதிரைக்கு இது பிரத்யேக உணவு. அதனால்தான், குதிரை கொழுப்புக் கூடாமல் சிக்கென்ற உடல்வாகோடு இருக்கிறது; அதிவேகமாக ஓடுகிறது; இதன் காரணமாகத்தான் இதை, `குதிரைக் கொள்ளு' என்றும் சொல்கிறார்கள்.

அருமையான மருத்துவகுணம் கொண்ட கொள்ளு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்றது. இதில் நிறைந்திருக்கும் மருத்துவப் பலன்களை விளக்குகிறார் சித்த மருத்துவர் ரமேஷ்...

## ஆரோக்கியப் பலன்கள்

### புரதம் நிறைந்தது

அதிக புரதச்சத்து நிறைந்த சிறுதானிய வகையைச் சேர்ந்தது. நம் உடல் வளர்ச்சிக்கும், திசுக்கள் முறையாக வேலைசெய்யவும், பழுதடைந்த திசுக்களைச் சரிசெய்யவும் இதிலுள்ள புரதம் உதவுகிறது.

### உடல் எடை குறைக்கும்!

சாப்பாட்டில் அடிக்கடி இதைச் சேர்த்துக் கொண்டால், உடல் எடையைக் குறைக்க உதவும். முதல் நாள் இரவில் ஒரு கைப்பிடி கொள்ளுவை எடுத்து தண்ணீரில் ஊறவைத்து, காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் விரைவில் உடல் எடை குறையும். உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் குறையும்.

### சளி, காய்ச்சல்

இதை தண்ணீர் சேர்த்துக் கொதிக்கவைத்து அந்த நீரை அருந்தினால், ஜலதோஷம் குணமாகும். ரசமாக வைத்து சாப்பிட்டால், உடல்வலி, ஆஸ்துமா போன்ற சுவாச பிரச்னைகள் சரியாகும்; சுவாசத் தொந்தரவு நீங்கும்; காய்ச்சலையும் குணமாக்கும்.

### நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கத் தேவையான ஊட்டச்சத்துகளும் இதில் நிறைந்துள்ளன. இது, உடல் உறுப்புகளை பலம் பெற வைக்கும். நோய் பாதிப்பிலிருந்து காப்பாற்றும். எலும்புக்கும் நரம்புக்கும் வலுசேர்க்கும். இதை அரிசியுடன் சேர்த்துக் காய்ச்சி, கஞ்சியாக உட்கொள்ளலாம். இதனால், பசியின்மை நீங்கும்; உடல் வலுவாகும்.

### சிறுநீரகக் கற்களைக் கரைக்கும்!

இதை சமையலில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், சிறிய அளவிலான சிறுநீரகக் கற்களை கரைத்து வெளியேற்றும். குறிப்பாக, `கால்சியம் ஆக்சலேட் (Calcium oxalate) வகை சிறுநீரகக் கற்களை கரைக்க உதவும்' என்கிறது சமீபத்திய ஆராய்ச்சி ஒன்று. மேலும், கொள்ளுவையும் இந்துப்பையும் சிறிது எடுத்துக்கொண்டு, அவற்றுடன் ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்கவைத்து சாப்பிட்டு வந்தால், சிறுநீரகங்கள், சிறுநீரகப் பாதை போன்ற உள்ளுறுப்புகளில் சேரும் கற்களைக் கரைக்கும்.

### விந்தணுக்கள் அதிகரிக்கும்!

இதில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, அமினோ அமிலங்கள் உள்ளன. இவை ஆண்களின் விந்தணுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மலட்டுத்தன்மையை நீக்க உதவுபவை.

### சர்க்கரைநோய் தடுக்கும்!

நாம் உண்ணும் உணவில் உள்ள சர்க்கரையின் அளவைக் கணக்கிடும் அளவுகோல் `கிளைசெமிக் இண்டெக்ஸ்' எனப்படும். இந்த அளவீடு அதிகமாகும்போது, ரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும். ஆனால், கொள்ளு ஆன்டி- ஹைப்பர்கிளைசெமிக் (Antihyperglycemic) உணவு வகையை சேர்ந்தது. எனவே, இது சர்க்கரை நோயாளிகளுக்கும் சிறந்தது.

### மாதவிடாய்ப் பிரச்னைகளைச் சரிசெய்யும்

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில், ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தும்; மாதவிடாய் பிரச்னைகளை சரிப்படுத்தும். பெண்கள் கொள்ளு நீரை அருந்தலாம்; சூப்பாகவும் சாப்பிடலாம். மாதவிடாய் காலத்தில் மட்டும் தவிர்த்தல் நல்லது.

*தொகுப்பு: இரா.சீ.பாலகுமார். M A*

*நன்றி: https://www.vikatan.com/health/87937-what-are-the-health-benefits-of-horse-gram.*

மெய்யன் நடராஜ்

# பிறவி எதற்கு?

விடிந்தது முனக்கொரு விளக்கொளி எதற்கு?
விடுமுறை யளித்ததன் விழிகளை முடக்கு
படிகிற பனித்துளி பரவச மிருக்கப்
பகலொடு இரவினைப் பதுக்குவ தெதற்கு?
கொடிகளில் சிரிக்கிற குளிர்மல ரிருக்க
குதிரையின் கனைப்புள கொடுநகை எதற்கு?
வடிகிற புனலிடை வடிவழ கிருக்க
வறட்சியி லுழல்கிற வயல்வெளி எதற்கு?

◎

பழரச மளித்திடப் பலமர மிருக்கப்
பருகிடப் பிணிதரு மதுவுனக் கெதற்கு?
பழகிடு முறவுகள் பலமென விருக்கப்
பதருக ளுடனுனக் குறவுக லெதற்கு?
அழகொடு உடுத்திடப் புடவையு மிருக்க
அரைகுறை உடைகளில் கிழிசலு மெதற்கு?
குழவியி னெழிலொடு குறுநகை யிருக்க
குமுறிடு மெரிமலை குணமுனக் கெதற்கு?

◎

வருடிட வருகிற வளியது மிருக்க
வலிமையைத் தகர்த்திடும் புகையிலை எதற்கு?
கருணையை பொழிகிற கடவுளு மிருக்க
கருடனில் நிழலொடு அடைக்கல மெதற்கு
குருடென இருக்கிற விழிகளை துறந்து
குருகுல மதுதரு மமுதினை பருகு
திருடரும் திருந்திட வழிகளு மிருக்கத்
திருந்திட மறுப்பவர்க கெதற்கினி பிறவி?



### கவிஞர் சாய்சக்தி சர்வி– பொள்ளாச்சி

அவன் ஒரு அரசன் மகுடங்களை
விரும்பாதவன்

அவன் ஒரு போர் வீரன் எதிரிகளை
நேசிப்பவன்


அவன் ஒரு காதபத்திரம் கற்பனைகளுக்கு
அப்பாற்பட்டவன்

யுகத்தின் விழும்பில் தோன்றியவன்

காற்றின் வருடலாக
கரைகிறான்

இனி காலம் அவன் பெயரை
எழுதிக்கொண்டேயிருக்கும்

உருவங்களின் மாற்றத்தில்.



# வெயில்

கவிஜி

அதிகாலையா அது அரூப காலையா... காதுக்குள் ரீங்காரம் அடித்த போதே தூக்கம் தெறித்து சிதறியது. கேட்ட குரலில் வெடித்தது மரணம். அதிர்வில்லாத வெடிப்பு. எந்த எதிர்பார்ப்புக்குள்ளும் இல்லாத மரணத்தை மனம் மிக சுலபமாக எடுத்துக் கொள்கிறது.

சரி... என்று மட்டும் சொன்னேன். வர்றேன் என்று கூட சொல்ல மனம் வரவில்லை. மனதுக்குள் சப் சப்பென்று விழுந்து கொண்டே இருந்த அறை... சிந்திப்பதை நிறுத்தி விட்டது.

வலிந்து கொண்ட அழுகையா... வற்றி போன அழுகையா எதிர்முனையில். தெரியவில்லை. சரி வர்றேன் என்ற போது அதே அழுகையினூடாக வந்த கோரிக்கை.. அது கோரிக்கை அல்ல. உரிமை போல இருந்த சொற் தடுமாற்றங்கள்.

அவன் வீட்டுக்குள்ள விட மாட்டேங்கறான் இவனே.... - பதற்றத்தில் என் பெயர் மறந்து விட்டது போல. நான் எங்கன்னு உங்க மாமனை கொண்டு போவேன். நம்ம இடத்துல வெச்சிருக்கறேன்டா. சுத்தம் செய்ய ஆள் அனுப்பிட்டேன் என்ற போது தான் சுளீர் என்றிருந்தது. அந்த அவன்ங்கறது இப்ப பேசிட்டிருக்கற மணிமேகலை அத்தையின் தம்பி கிருபாகரன். காலத்துக்குமான காழ்ப்பு சண்டை அவர்களுக்கு. சரி அது அவர்கள் பாடு. என்னோடு என்ன இது. இத்தனை காலம் இல்லாத உறவு இப்போது இந்த சாவு இழுத்துக் கொண்டு வருவதை நினைத்தால்... உள்ளே கொந்தளித்தது.

காத்திருந்த மனித குரூரம் வேலையைக் காட்டும் போல தான். நான் பதில் சொல்லவில்லை.

என்ன சாமி ஒன்னும் சொல்லாம இருக்க...

இருங்க நான் பேசறேன் - கட் பண்ணி விட்டேன். படுத்தபடியே வெறித்திருந்தேன். மொபைலை ஆப் பண்ணி போட்டு விடலாமா. யோசித்தேன். இருளின் கொத்து என் இதயத்தில் கொப்பளித்தது. கண்களில் கருப்பு முழி மட்டுமே முட்டிக்கொண்டு நின்றது.

கோவில் திடலில் விளையாடிக் கொண்டிருந்த என்னை எதுக்கு அடிச்சான். இன்று வரை புரியவில்லை. டேய் இங்க வாடா... என்றானே. யாரு... இப்ப செத்து கிடக்கிறானே... அவன் தான். சொந்த மாமாலாம் இல்ல. தூரத்து மாமா தான். ஆனாலும் மாமான்னு நான் கூப்பிட்டதே இல்ல. என்னவோ இடைவெளி. எதுக்கு இந்தாள் கூப்பிடறான் என்று யோசித்தபடியே அருகில் சென்றேன். போன நொடிக்கு... பட்டென்று அத்தாம் பெரிய கையை வெச்சு விட்டானே ஒரு அறை.

இப்ப கூட அந்த சத்தம் கேட்கிறது.

மூச்சே நின்னுடுச்சு. ஒரு பக்க கன்னம் படபடன்னு வீங்கிடுச்சு. நண்பர்கள்... தோழிகள்ன்னு கிணற்றைச் சுற்றி ஆட்கள் அத்தனை பேரும் பார்த்து விட்டார்கள். பத்தாததுக்கு ஆங்காங்கே நின்ற ஊர் பெருசுகளும் பார்த்து விட்டார்கள். கடைக்கு போறவன்.. புளியமரத்தடியே நின்னு ரோட்டை பாக்கறவன்னு நிறைய கண்கள் என் மீது சிமிட்டி விட்டன.

யாருக்கும் ஒன்றும் சொல்லவோ கேட்கவோ முடியவில்லை. என்ன எதுக்கு... என்ற சலசலப்பு இருந்தது. ஆனால் அவனிடம் என்னவென்று கேட்பது.

காட்சியே ஸ்தம்பித்து நின்றது. கால்களில் நடுக்கம் கூட முதுகினில் மூச்சு விட்டபடியே வீடடைந்தேன்.

கேட்க போன பாட்டியை ஏய் கிழவி மூடிட்டு போன்னு சொல்லி விட்டு அவன் பாட்டுக்கு போயிட்டே இருந்தான். பாட்டி திட்டும் வரை திட்டி விட்டு கை விளங்காமல் போவதற்கு மை மந்திரித்து வைத்தது. அவனை எதிர்த்து வேறு என்ன செய்ய முடியும். அவனைப் பார்த்தாலே அதன் பிறகு ரொம்ப நாள் எனக்கு அந்த பயம் இருந்தது.

குமார் பெயிலு... ஆமா... நம்ம குமாரு தான்.

இந்த மேட்டுல நின்னு அந்த மேட்டுக்கு கத்தி கத்தி சொன்னான். நான் பெயில் ஆன அன்னைக்கு பெயில் ஆனத விட அவன் ஊரெல்லாம் சொன்னது தான் அவ்வளோ பயங்கரமா இருந்துச்சு. பத்தாவது பெயிலு ஊருக்கே ஒரு மணி நேரத்துல தெரிஞ்சா பத்தாவது படிக்கற பையனுக்கு எப்பிடி இருக்கும். அதை எப்படி எதிர் கொள்ள முடியும். முடங்கிட்டேன். தியேட்டர் ஆபரேட்டர் முனுசாமிகிட்ட காசு குடுத்து குத்தி போட சொல்லலாமான்னு கூட தோணுச்சு. ஆனா காசு இல்ல. அழுதுட்டே விட்டுட்டேன். நான் பெயிலானதுல அவன் ப்ரைட்டா சுத்தினான். அது ஏன்னு தெரியவே இல்ல.

வீதி லைட்டுல உக்காந்து படிக்கறேன்னு சொல்லி வீதி லைட்டை அடிச்சு உடைச்சிட்டான். வனிதாக்கா பார்த்துட்டு சொல்லுச்சு. யாரு அவன்கிட்ட கேப்பா. மரியாதை இல்லாம பேசுவான். அரசியல்ல வேற இருக்கான். எதுக்கு வம்பு என்று ஒதுங்கி கொண்டார்கள்.

ஒரு நாள் பைக்கட்டுல இருந்து கணக்கு நோட்டை திருடிட்டான். ரெண்டு நாள் கழிச்சு பேப்பர் பேப்பரா கிழிச்சு பள்ளத்து மேட்டுல கிடந்துச்சு. பசங்க சொன்னாங்க. ஓடிப் போயி பார்த்தா.. என் நோட்டு தான். முடிஞ்ச வரை கிடைச்சதெல்லாம் பொறுக்குனேன். ம்ஹூம். மண்ணு பட்டு ஈரம் பட்டு கிழிஞ்சு... ஒண்ணுக்கும் உதவல. அப்புறம் திரும்ப நோட்டு வாங்க ஒரு வாரம் ஆச்சு. அப்புறம் எழுதின வர எழுதி முடிக்க இன்னொரு வாரம் ஆச்சு. இடையில பள்ளிக்கூடத்துல

வாத்திகிட்ட திட்டு. இவன் ஏன் இப்பிடி பண்றான். எனக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம். ஒன்னும் புரியல. அவனை பார்த்தாவே கை கால் நடுங்கி பயம் வரும்.

ஒரு நாள் வீதில விளையாடிட்டு இருந்தவனை அக்கறையா வீட்டுக்கு கூட்டிட்டு போயி இன்னைக்கு நம்ம வீட்ல தான் சோறு.. என்றான். முதல்ல வரலன்னு சொன்னேன். அப்புறம் கறி சோறுன்னான். எச்சி ஊறிடுச்சு. இது ஒரு மாதிரி சமாதானம் போல. இனி ஒன்னும் பண்ண மாட்டான். நம்மளும் சொல் பேச்சு கேட்டு கூட போய்ட்டா... அப்புறம் இந்த பிரச்சனை இருக்காது. எல்லாத்துக்கும் மேல கறி சோறு வேற. பாதி மனம் பயந்தாலும் மீதி மனம் கறி வாசம் பிடித்துக்கொண்டே பின்னே சென்று விட்டது. அவுங்க தட்டில் எல்லாம் கறி இருக்கிறது. எனக்கு வெறும் குழம்பு மட்டும் தான் ஊற்றினார்கள். நல்லா சாப்பிடு... நல்லா சாப்பிடு என்று கூட சேர்ந்து பேசினாளே.... இன்று ஒப்பாரி வைக்கிறவள். அவளும் தான் என் தட்டில் கறி ஒரு துண்டு கூட இல்லை என்பதை பார்த்துக் கொண்டிருந்தவள். எதுக்கு கூப்பிட்டாங்க. எதுக்கு வெறும் சோறு மட்டும் போட்டாங்க. புரியவே இல்லை.

அடுக்கடுக்காய் மனதுக்குள் பழைய காட்சிகள் மாறி மாறி வெடித்துக் கொண்டிருந்தன.

கொடிது கொடிது கொடிது... இளமையில் வறுமை கொடிதினும் கொடிது. அந்த வறுமையிலும் எருமை மேய்ந்தால் எப்படி இருக்கும். அப்படி ஒரு மனிதன் அவன். என்னவோ அவனுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதனால் எனக்கும் அவனைப் பிடிக்கவில்லை. வாத்தியார் புள்ளை ரதிக்கும் எனக்கும் காதல்ன்னு பள்ளிக்கூட சுவத்துல எழுதி வெச்சிட்டான். அதை பார்த்துட்டு ஊரே பொறி பறக்குது. வாத்தியார் வீடேறி வந்து சட்டைய புடிச்சு அடிச்சு திட்டி மானத்தை வாங்கி... ஆனாலும் நான் கேட்டுட்டேன். எவனாவது லவ் பண்ற பொண்ணு பேர எல்லாருக்கும் தெரியற மாதிரி எழுதி வைப்பானான்னு. அந்தாளுக்கு அப்பவும் புரியல. எவ்ளோ தைரியம். என் புள்ள பேர அவன் பேர் கூட சேர்த்து எழுதி வைப்பான்னு கத்திட்டு போனான்.

ஒரு நாள் பள்ளத்துல தண்ணி போகுதுனு விளையாட போனேன். தண்ணில மெல்ல மெல்ல நடந்து அக்கறை போயிட்டு இருக்கும் போது.. கல்லெடுத்து வீசினான் பாரு. ரெண்டு முறை தடுமாறி விழுந்து தண்ணி குடிச்சு... அப்புறம் ராஜா தான் புடிச்சு தூக்கி இழுத்து மேல விட்டான்.

இப்பிடி என் பருவ வாழ்வில்... பாறாங்கல்லாய் இருந்தவன் தான் இப்போது செத்திருக்கிறான். அவன் சாவுக்கு போவதே பிடிக்காத ஒன்று. இதில் எங்கள் வீட்டு வாசலில் அவனைக் கிடத்த இடம் கேட்கிறாள் அவன் பொண்டாட்டி. என்ன செய்ய போகிறேன். அட ஆயிரம் பிரச்சனை இருந்தாலும்.. சொந்தம் விட்டு போகுமா.. ஒன்னு விட்ட அத்தை புருஷன். நல்ல காரியத்துக்கு போகாட்டியும் இந்த மாதிரி காரியத்துக்கு போகனும்ல என்று நெருங்கிய சொந்தம் சொல்ல.. வேறு வழியின்றி சாவுக்கு கிளம்பினேன்.

போன் வந்து கொண்டே இருக்கிறது. பெருந்துறையில் இருந்து பாடி கிளம்பி விட்டது. பார்த்து முடிவு பண்ணி சொல்லு சாமி. நம்ம இடத்துல வெச்சுக்கலாம். வாடகை வீட்டுல உள்ள விட மாட்டேன்னு சொல்லிட்டாங்க, தம்பிகாரனும் முடியாதுனு சொல்லிட்டான்.

அப்புறம்... தம்பிகாரன் எப்படி விடுவான். மாசம் ஒரு முறை வீட்டை சாத்திட்டு அக்காவும் மச்சானும் அடிச்ச அடியெல்லாம் தழும்புகளாய் இன்னும் அவன் உடலில் இருக்கிறதே. அவன் கத்திய கத்து இன்றும் கேட்கிறதே. யாராவது காப்பாத்துங்களே... கடவுளே... புருசனும் பொண்டாட்டியும் இப்பிடி போட்டு அடிக்கறாங்களே... ஈனக்குரல் என்பது அது தான். நான் தான் கதவைத் தட்டி அவனை இழுத்து வந்து எங்கள் வீட்டில் வைத்து காப்பாற்றுவேன்.

உனக்கும் ஒரு நாளைக்கு இருக்குடா என்பது போல பார்ப்பான். உச்சாவே வந்து விடும். நடுங்கி கொண்டே பம்முவேன்.

பாடி கோபி தாண்டி விட்டது என்றார்கள்.

நான் ஊர் சேர்ந்து விட்டேன். எங்கள் வாசலில் ஈஸி சேர் போட்டு சாய்ந்து அமர்ந்து விட்டேன். சுத்தம் செய்து கொண்டிருந்தவர்களை அதற்கு மேல் அனுமதிக்க வில்லை. அவர்கள் முனங்கி கொண்டே நகர்ந்து கொண்டார்கள். ஊர்க்காரர்கள் சிலர் அயோ பாவம்... இடம் குடுத்தா தான் என்ன என்பது போல் சிணுங்கினார்கள். ஏன் நீ குடேன் என்பதாக பார்த்தேன். நிஜமான பார்வைக்கு பொதுவாக பதில்கள் இருப்பதில்லை. இல்லை.

லோன் போட்டு கார் வாங்க தெரிஞ்சுதுல. அந்த லோனுக்கு வீடு வாங்கிருக்கலாம்ல. புத்தி இருக்கறவன் அத தான் பண்ணுவான்.வாடகை வீட்டுல இருந்துகிட்டு எவனாவது காரு வாங்குவானா. அதுவும் விரல்ல கார் சாவிய மாட்டிகிட்டு அவன் பொண்டாட்டி பண்ணின கூத்தெல்லாம் மறக்க முடியுமா. சும்மா விரல விரல சுத்திகிட்டு யார்கிட்ட பேசினாலும்... இப்பதான் கார்ல வந்தேன்.. அடுத்த வாரம் வேளாங்கண்ணிக்கு கார்லயே போறோம். என்ன... புள்ள வயசுக்கு வந்துட்டாளா. எப்போ சீர்னு சொல்லு.. கார்ல ஜம்முனு வந்து முறை செஞ்சுட்டு போறோம்.. என்று எது பேசினாலும் காரை இழுத்து வீதியில் விட்டுக் கொண்டே இருந்தாள். கார் இல்லாம எப்பிடிங்க ஒரு மனுஷன் வாழ முடியும்.

என்னது கோயமுத்தூர்க்கு பஸ்லயே. ஐயையோ... பஸ்லலாம் எப்பிடி போறது. அவ்வ்ளோ உப்புசம். கார் கிடக்குதுல. ஆயிரம் ரூவாய்க்கு டீசலை ஊத்துனா... ராணி மாறி போயிட்டு வந்துரலாம். பெரியவனுக்கு பொண்ணு பாக்கனும். கார்ல தான் போறோம்.

சிக்கினவர்களிடம் எல்லாம் கார் பெயிண்ட்டை உரித்து உரித்து பூசினாள்.

பொம்பள வடிவேல பார்த்த மாதிரியே ஊர் பார்த்துச்சு. இப்ப பாரு ஒப்பாரி வைக்கறத. ஊருக்குள்ள ஒரு பயல மதிக்கல. எல்லார்கிட்டயும் லொள்ளு நியாயம். பத்தாதுக்கு கட்டப் பஞ்சாயத்து வேற. கட்சில இருக்கானாம்... மயிர் கட்சி. இங்க சொல்றத அங்க சொல்றது. அங்க சொல்றத இங்க சொல்றது. அவன்கிட்ட பேசி இவன்கிட்ட போட்டு குடுத்து.. இப்பிடி ஒரு பொழப்பு. புருசனும் பொண்டாட்டியும் ஒரு நல்ல காரியத்துல கலந்திருப்பாங்களா. அட ஒரு சாவுக்கு... முன்னால நின்னுருப்பாங்களா. நீ என்ன பண்ணுனயோ அது இன்னைக்கு திரும்பி வருது. அதான் கூட்டத்தையே காணோம்.

ஆளாளுக்கு பேசினார்கள். சேர்த்து முடிச்சிட்டால் இதோ முந்தின பத்தி.

மக்கள் ஆங்காங்கே ஒதுங்கி இருந்தார்களே தவிர யாரும் முன் வந்து எதுவும் செய்யவில்லை. மணியின் தம்பி பேந்த பேந்த முழித்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கொண்டிருந்தான். முகமற்ற ஒரு மனிதனின் இருத்தல் அது. காலம் வாகாக கைக்கு கிடைக்கையில் கல்லெடுத்து அடிப்பதும் அது.

நண்பன் சிவகுமார் அலைபேசியை என்னிடம் நீட்டினான். உங்கத்தை தான். உனக்கு கூப்பிட்டுச்சா. எடுக்க மாட்டேங்கறயாம்.. என்றபடியே கையில் திணித்து விட்டான்.

அவனை முறைத்தபடியே காற்றில் சில நொடிகள் நீட்டியிருந்து விட்டு பிறகு காதுக்கு அலைபேசியை தந்தேன்.

என்ன சாமி... சுத்தம் பண்ண வந்தவங்கள வேண்டான்னு அனுப்பிட்டியாம். ஐயோ ஏன் சாமி இப்பிடி பண்ற. ஏதாது கோவம் இருந்தா திட்டிரு. பாவம் செத்து போன மனுசன பழி எடுக்காத. அட ஒரு ரெண்டு மணி நேரம் வெச்சிருந்துட்டு அப்புறம் எடுத்தரலாம். நானே சுத்தம் பண்ணி குடுத்தறேன். அந்த இடத்துக்கு நீங்க இல்லாதப்போ வரியெல்லாம் கட்டி இருக்கேன்டா.

அதுக்கெல்லாம் சேர்த்து போன வாரம் ஆஸ்பத்திரி செலவுக்கு காசு குடுத்தேனே. சரியா போச்சு தான என்றேன்.

ஐயோ இப்பிடி சொல்லாத சாமி. அத்தாணி வந்துட்டோம். இன்னும் அரை மணி நேரத்துல வந்துருவோம். உன்ன தான் நம்பி இருக்கோம். இந்த ஒரு உதவி மட்டும் பண்ணு...

அழுகையை ஆரம்பித்தது. கட் பண்ணி விட்டேன்.

அட... பாவமா இருக்கு. ஏன் இவ்ளோ பிடிவாதம் பிடிக்கற என்றான் சிவா.

நான் அவனையே பார்த்தேன். அவனுக்கும் பழைய நினைவுகள் ஓட தான் செய்யும். இதே வீட்டில் பாட்டியும் தாத்தாவும் எத்தனை முறை இவர்களிடம் அவமானப்பட்டிருப்பார்கள். உடம்பு சரி இல்லாமல் போகும் போதெல்லாம் நண்பர்கள் தானே உதவினார்கள். இவர்கள் இல்லையே. அத்தை... பாட்டிக்கு ரொம்ப முடியல. ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு போகணும்... வாங்க என்ற போது.... டேய்... போடா...நான் என்ன உங்க வீட்டு வேலைக்காரனா. கிழட்டு மூதேவிங்களுக்கு மருமகன்கிற மரியாதை இருக்கா. வந்துட்டான்... என்றபடியே உள் அறையில் இருந்து வந்தானே. இந்தா இப்ப ஒப்பாரி வைக்கற இவ படக்குனு சமையக்கட்டுக்குள்ள ஓடிட்டாளே. மிரண்டு போயி நின்னேன். கிட்டத்தட்ட உதைக்காத குறை. அருவா மீசையில் துடித்த ஆத்திரத்தை கண்டதும் நடுக்கம் தான் நிரம்பியது. ஐயோ அடிச்சிர போறான் என்று ஓடி வந்து விட்டேன்.

ஒரு தடவ எங்க வீட்டுக்குள்ள பாம்பு வந்துச்சில்ல. அது கூட இவன் கொண்டு வந்து போட்டதுதான்னு மொட்டச்சி கிழவி சொல்லுச்சு. நிஜமான்னு தெரியல. ஆனா நம்பாம இருக்க முடியல. அந்த ராத்திரில பாம்பு பாம்புனு கத்திகிட்டு வீதிக்கு ஓடி வந்தோம்ல. பக்கத்து வீடுதான. எட்டிக்கூட பாக்கலயே. அப்புறம் ராஜேந்திரன் மாமா வந்து தான பாம்பை அடிச்சாரு. இவனுக்கு எதுக்குடா நான் இடம் குடுக்கணும். வாழும் போது திமிரா வாழ்ந்தா சாகும் போது இப்பிடிதான். மனுஷங்களை சம்பாதிக்காத வாழ்க்கை... எப்பிடி கடைசி நாள்ல மடியேந்தது பாத்தியா. ஏந்தட்டும். நல்லா ஏந்தட்டும்.

சொல்ல ஏதுமின்றி சிவகுமார் என்னையே பார்த்தான்.

நான் கால் மேல் கால் போட்டு அமர்ந்து விட்டேன். என்னை திட்டுகிறவர்களும் ஆங்காங்கே நின்றார்கள். அவன் பண்றது சரி என்றவர்களும் ஆங்காங்கே நின்றார்கள். எல்லாருக்குமே இந்த கூத்தின் இறுதிக் காட்சி எப்படி இருக்கும் என்ற ஆவல் தான். மதிய உணவை வேக வேகமாய் முடித்துக் கொண்டு ஆங்காங்கே அமர்ந்து விட்டார்கள். அக்கம் பக்கத்து வீட்டு ஜன்னல்.. வாசல் எல்லாம் திறந்திருக்க... திண்ணையில் சிலர் ஸ்டூல் போட்டு அமர்ந்து விட்டார்கள். அடுத்தவன் வீட்டை வேடிக்கை பார்ப்பதில் அப்படி ஒரு வெண்ணைத்தனம்.

ஊர் தலைவன் அருகே வந்தான். அக்கறையை ஆரம்பித்தான்.

என்னதான் இருந்தாலும்.... இந்த மயிறு வசனமெல்லாம் எனக்கு வேண்டாம்.. என்பதை கை ஜாடை காட்டி நிறுத்து என்பதாக நிறுத்தினேன். என் தாத்தா வீடு. இப்ப அது என் வீடு. இந்த வீட்டு வாசல்ல கண்டவன் பொணத்தை எல்லாம் அனுமதிக்க முடியாது என்றேன்.

யாருக்கும் எதுவும் சொல்ல முடியவில்லை. பல கண்களில் பள பளவென அப்பிடித் தான் வேணும்.... போடு அப்படி.. என்ற கொண்டாட்டம் மின்னியது. வெகு சில கண்களில்... அட என்னதான் இருந்தாலும்.. இப்போ உயிர் இல்லாத வெத்து உடம்புயா அது. அதுகிட்ட போயி சண்டை போட்டுக்கிட்டு...

அப்போ உன் வீட்டு வாசல்ல இடம் குடு. அவ்ளோ பாவம் புண்ணியம் பாக்கறவன் உன் வீட்டுக்குள்ள எடுத்துக்கிட்டு போப்பா.. - சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து வேகமாய் இழுத்தேன். ஆழமாய் சுவாசித்தேன். பரவிய சூடு பரபரவென ஆக்கியது.

டேய் தம்பி நீ சிகரெட்டலாம் குடிப்பியா என்றான் ஒரு கன்றாவி மீசைக்காரன்.

சாராயமே குடிப்பேன் பெரிப்பா. வேணுமா. ஃபாரின் சாராயம் வெச்சிருக்கேன் என்றேன்.

கோபம் நொடியில் மாறி கும்பிடு கண்களில் குழைந்தது.

த்தூ மானகெட்டவனுங்க. நியாயம் பேச ஓடி வருவானுங்க. மத்தவனுக்கு அறிவுரை சொல்றதுல அப்பிடி ஒரு அரிப்பு. இவ்ளோ பேச தெரியுதுல. இந்த செத்தவன் எத்தனை வாட்டி என்கிட்ட வம்பு பண்ணிருக்கான். என் பாட்டி தாத்தா கூட கேவலமா சண்டை போட்ருக்கான். என்ன ஏதுன்னு ஒருத்தன் கேட்ருப்பானா. கேட்டா சொந்தக்காரங்க சண்டைல நாம என்ன பண்ண முடியும்னு நழுவிக்குவானுங்க.

இப்பவரை என்ன ஏன் அறைஞ்சான்னு எனக்கு தெரியவே இல்லையே. அது தெரியாம அவனை என் இடத்துல எப்பிடி கிடத்த விடுவேன்.

சிகரெட்டின் கடைசி இழுப்பை தீர்க்கமாக இழுத்தேன்.

நேரம் கூட கூட ஊருக்குள் கிறுகிறுப்பு எகிறிக் கொண்டிருந்தது. மணிமேகலையோட பெரிய பையன் கடுப்புல இருப்பான். எப்படியும் வம்பு வளரும். இவன் இடம் குடுக்க மாட்டான். அவன் வேணும்பான். அட்றா சக்கை. யாருக்கு கிடைக்கும். ஒரு ஞாயிறின் மதிய உணவுக்கு பிறகான ஒரு சூப்பர் டூப்பர் சண்டைக்காட்சி. அதுவும் உணர்ச்சி பொங்க பிணம் வேறு வீதியில் கிடக்க போகிறது. சும்மா களை கட்டும் வீதி. ஒவ்வொரு வாயிலயும் ஒவ்வொரு குத்து அவுல். அரைச்சு தள்ளுவானுங்க.

அட என்ன தான் இருந்தாலும் இந்த பையன் பண்றது சரி இல்லப்பா என்ற கிழடு கட்டைகள் ஐயோ பாவம் பார்த்து பேசுகிறார்கள். அதென்ன அய்யோ பாவம் செத்தவனுக்கு மட்டும். செத்துட்டா அவன் புனிதமாகிடுவானா. அவன் செஞ்ச வெங்காயமெல்லாம் உரியாம போய்டுமா.

அவன் பண்றது சரி தான். குடுக்க கூடாது. அனாதை பொணமா போகட்டும். அப்ப தான் மனசு ஆறும். குடிச்சுட்டு வந்துட்டா மக்க மனுஷன்னு பார்க்கறது இல்ல. அக்கா தங்கச்சிங்ககிட்ட கூட வம்பு இழுக்கறது. டபுள் மீனிங்ல பேசறது. ஊரை அடிச்சு வயித்துல போட்டான்ல. அதான் வயிறு வீங்கியே செத்து போய்ட்டான்.

வனிதக்கா வாய் திறந்தே பேசியது. எனக்கென்ன பயம் என்று சுய சமாதானம் வேறு.

ஏய் நீ சித்த சும்மா இரு... யாராவது மணி காதுல போட்டு விட போறாங்க. பேயாட்டம் ஆடுவா என்று வனிதாக்கா தங்கச்சி வினிதாக்கா கிசுகிசுத்தாள்.

அறுத்து விட்ருவேன்... அவ வேலையெல்லாம் வேற எங்கயாவது வெச்சுக்கணும். இங்க ஆகாது. க்ஹா.

வெயிலோடு சுள்ளென அடித்தது அவள் பேச்சு. வீதிக்கே புத்துணர்வு வந்தது. அப்பாடா... ஆரம்பித்து விட்டது. எதுக்கும் ஒரு ஸ்டார்ட்டிங் பாயிண்ட் வேணும்ல. வீதியே திரை விரிய காத்திருக்கும் அரண்கள் போல காத்திருந்தது.

ஊருக்குள் ஆம்புலன்ஸ் நுழைந்து விட்ட செய்தி பெரிய வீதியில் அமர்ந்திருந்தவர்கள் படபடவென தாறுமாறாக எழுந்ததில் இருந்தே தெரிந்து விட்டது.

வந்தாச்சு வந்தாச்சு என்று சலசலப்பும் ஜாடை மாடைகளும் ஆங்காங்கே கை மாற... கண் மாற ஆம்புலன்ஸ் ஊருக்குள் நுழைந்து பெரிய வீதியில் முகத்தை திருப்பியும் விட்டது. வண்டிக்குள் இருந்து அழும் வறட்டு குரலில் ஈரம் இல்லை. தாரம் என்றாலே தாளிக்க வேண்டும் என்று ஒன்று இருக்கிறதே. பெரிய பையன் முன்பே இறங்கி விட்டான். வேகமாய் என்னை நோக்கி வந்தான். வந்து கிழிச்சிருவாரு.

என்ன மாமா... இப்படி பண்றீங்க. கொஞ்ச நேரம் இடம் குடுத்தா...

கையை ஆட்டி இடைமறித்தேன்.

எனக்கு உன்கிட்டலாம் பேச பிடிக்கல. நகரு என்பது போல ஒரு ஈன பார்வையை பார்த்தபடி இன்னும் வசதியாக சாய்ந்து அமர்ந்து கொண்டேன். பள பளவென என் உடையும் மினுங்கும் கூலிங் கிளாசும்... கமகமக்கும் செண்ட்டும்... கண்டிப்பாக அவனுக்கு கொலை வெறியைத் தூண்டி இருக்கும். அதுக்காகவெல்லாம்... அந்த கன்னத்து அறையை நான் மறந்து விட முடியாது. அனிச்சையாக தடவிக் கொண்ட போது கோபம் இன்னும் கொந்தளித்து. அந்த வீதியில் ஒரு கை கால் முளைத்த பவளம் போல என்னை நானே உணர்ந்தேன். வெயிலின் சூடு இன்னும் என்னை பலமாக்கியது.

அவன் செய்வதறியாது என்னையே பார்த்தான். அவன் கண்களில் நீர் கொப்புளங்கள்.

சாவுங்கடா. இதே வீட்டுல உப்புசத்துல சாவேனே. கொஞ்சம் கரண்ட் குடுத்துருக்கலாம்ல. வீதி லைட்டுலதான்டா படிச்சேன். இந்த வீட்டுக்கும் அந்த வீட்டுக்கும் ஒரு செவுர்தான இடையில. கொஞ்சூண்டு ஒயர் இழுத்து குடுத்து சரி படிக்கட்டும்னு விட்ருக்கலாமே. ரேடியோவை சத்தமா வெச்சு படிக்க விடாம பண்ணுவானே. அவனுக்கு நான் எதுக்குடா என் வாசல்ல இடம் குடுக்கணும். தூக்கிட்டு போ.... வார்த்தையே வராமல் வன்மத்தை பேசினேன்.

சின்னவன் அழுதுகொண்டே துள்ளினான். ஊர்க்காரர்கள் அடக்கினார்கள்.

தம்பி அவன் இடம் குடுத்தா சரி. குடுக்கலானா வம்பு பண்ண கூடாது. அவன்கிட்ட கெஞ்சி வேணா கேளுங்க. அதிகாரம் பண்ண உங்களுக்கு அதிகாரம் கிடையாது. அவன் இருக்கற பிடிவாதத்துக்கு உங்களுக்கு எதிர இன்னும் பலமா நிப்பான். உங்க வீட்டுல இழவு விழுந்துருக்கு. நீங்க தான் பொறுத்து போகணும் என்றார்.

சரி எங்கன்னு...

நொடிகளில் அந்த குடும்பம் கதி கலங்கி விட்டது. கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் வாழ்ந்த ஊரில்... ஒரு மனிதனின் உடலை வைக்க இடம் இல்லை. அப்படி ஒரு புத்தி கெட்ட வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறான். கட்சி அரசியல் என அடித்த கூத்துக்கெல்லாம் ஒரு பயனில்லை. ஒரு பய அதிலிருந்து வரவில்லை. சாவுக்கு வந்தவர்களை எண்ணி விடலாம். ஊரே கூடி நிற்பது இப்போது இந்த சம்பவம் எப்படி முடியும் என்று பார்க்கும் ஆவலில் தான். மற்றபடி இறுதிச் சடங்குக்கு வந்த கூட்டம் இல்லை இது.

மணிமேகலை பாடியை இறக்க முடியாமல் தடுமாறினாள். வந்து கால்ல கூட விழுந்து விட்டாள். நான் அசைய வில்லை. சின்னப் பையன் முறைத்துக் கொண்டே நின்றான். பெரியவன் உடல் நடுங்க தலை குனிந்திருந்தான்.

அத்தனை நேரம் எனக்கு சப்போர்ட்டாக பேசியவர்கள் கூட.. பாடியை பார்த்ததும் ஐயோ பாவம் என்று முனங்க ஆரம்பித்து விட்டார்கள். மானுட மழுங்கல் அது. யாருக்கும் இப்பிடி வரக்கூடாது என்றார்கள் செத்தவனை. இந்தப்பயன் ரெம்ப பண்றான் என்றார்கள் என்னை. உயிரோடு இருப்பதாலே நான் இப்போது குற்றவாளிக் கூண்டில். மரித்து போனதாலே அவன் இப்போது ஐயோ பாவம் பக்கம்.

அப்படி அப்படியே மக்கள் அவரவர் வீட்டுக்குள் நழுவினார்கள். மணிமேகலை யாரை பார்க்கிறாளோ அவர்கள் ஒதுங்க தொடங்கினார்கள். பின்ன நம்ம வீட்டை குடுத்துட்டு யாரு பெயிண்ட் அடிச்சிட்டு கிடக்கிறது. இவ காசு குடுப்பாளா. இங்கொன்னு அங்கொன்னும்னு பேசிட்டு திரியறவளுக்கு இதுவும் வேணும். இன்னும் வேணும். கடவுள் புத்தி குடுக்கற நேரம் இது. யாரும் தடுக்க கூடாது என்ற பிரதர் அல்லேலூயா போட்டு விட்டு வீட்டுக்குள் மறைந்து கொண்டார்.

அட ஆஸ்பத்திரில கிடந்த உடம்பு. தொத்து வியாதி வந்துட்டா என்ன பண்றது. வம்பே வேண்டாம். ஆட்கள் ஒதுங்க... ஒதுக்க... மணிமேகலைக்கு மண்டை வெடித்து விடும் போல இருந்தது.

ஊரையே கெடுத்து குட்டிச்சுவர் பண்ற அவன் பசங்களுக்கு இது தான் தண்டனை. இருக்கற அத்தனை மொள்ளமாரித்தனங்களும் பண்ணிட்டு திரிஞ்சா... இப்பிடி தான் நடக்கும். கடவுள் எல்லாத்தையும் பாத்துட்டுதான இருக்கான். அதுவும் கார எடுத்துக்கிட்டு நேரம் காலம் தெரியாம ஊருக்குள்ள பண்ணுன அட்டூழியம்... இப்ப இப்பிடி திரும்பி வந்து நிக்குது. ஒன்னும் பண்றதுக்கு இல்ல.

ஏங்க பாடிய இறக்கறீங்களா எப்படி... நான் கிளம்பனும் என்று ஆம்புலன்ஸ் டிரைவர் அவன் பங்கை கொளுத்தி போட்டான். நண்பர்கள் உறவுகள் என்று ஒரு பய உதவிக்கு வரவில்லை. நீ எப்பிடி வாழ்கிறாய் என்பதில் இருக்கிறது.. நீ எப்படி மறைகிறாய் என்பது.

பெருசொன்று பொக்கை வாயில் புகையிலையைப் போட்டுக் கொண்டே நீட்ட நீட்டமாய் தத்துவம் வாசித்தது.

வெயில் சட்டென கூடி விட்டது. அப்படியே பொல பொலவென தன்னை அள்ளி அள்ளி சிதறிக் கொண்டிருந்தது. அனல் மூச்சு அங்கே பூமிக்கும் ஆகாயத்துக்கும் அதிர்ந்தது. ஊரின் கண்கள் முழுக்க காலாட்டி அமர்த்திருக்கும் என் மீது தான். வெயில் தாலாட்டுவது போல என் உடல்மொழி. அமைதி. பெரும் சலசலப்புக்கு பிறகு வந்த அமைதியில் தெருவுக்குள் அச்சம் படர்ந்தபடியே இருந்தது. அது தான் எனக்கு வேண்டியது. ஆன்ம பலம் கூடி அமர்ந்திருந்தேன்.

பெரியவன் கண்டிப்பாக என்னை அடித்து நொறுக்குவான் என்பது பாதி வீதியின் ஆர்வம். பாடி வீதியில் கிடப்பதை பார்க்க மீதி வீதியின் பரபரப்பு. ஒவ்வொரு கண்ணிலும் காழ்ப்பு கொப்பளித்தது.

என் முன்னே மணிமேகலை கை எடுத்து கும்பிட்டபடி நிற்க.... நான் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தேன். என்னவோ உள்ளே ஒரு துள்ளல். அவள் கண்களில் இயலாமை கரகரவென கரைந்தபடியே இருந்தது. ஆம்புலன்ஸ் உறுமல் அங்கிருப்போரின் இதயத்தை அதிர்வடைய செய்வது போலவே இருந்தது. நெற்றியில் வியர்வை. தலை மேல் பாரம். உடல் முழுக்க கனம்.

அத்தனை வெயிலிலும் சாய்ந்து அமர்ந்திருந்த எனக்கு உள்ளே எங்கோ மலை உச்சி காற்று. சரி தவறு தாண்டி ஒரு நிறைவு மனதுக்குள் ஊர்ந்தபடியே. இறுகிய முகத்தில் இம்மியளவும் பாவம் இல்லை. சிரிப்பை அடக்கிக் கொண்டு பார்த்தேன்.

இப்பிடி பண்ணினா எப்பிடி சாமி... - கவனம் கலைக்கவில்லை. கலைந்தது போல பார்த்தேன்.

அம்மா கெஞ்சாதம்மா. நமக்கும் காலம் வரும். இப்பிடியே காட்டுக்கு கொண்டு போய்டலாம் என்றான் பெரிய பையன். வீதி உச் கொட்டியது. ஆனாலும் தன் வாசலை கெட்டியாக மறைத்துக் கொண்டது. புஸ்சென்று போக போகிறதோ என்ற பதற்றம் வேறு அங்கே பரபரத்தது.

அதே நேரம் தயங்கி தயங்கி கூட்டத்தில் இருந்து வெளியே வந்த மணிமேகலையின் தம்பி கிருபா... அக்காவிடம் சென்று அமைதியாக நின்றான். அக்காவும் தம்பியும் நொடிகளில் பார்த்துக் கொண்டார்கள். அவள் விசும்பினாள்.

அழாத... நம்ம வீட்டு வாசல்ல வெச்சுக்கோங்க.. என்றான் பட்டும் படாமல். அத்தனை நேரம் திறந்திருந்த வீதி கண் சிமிட்டியது. மூச்சில் ஆசுவாசம். மொத்த கண்களிலும் சப்பென்று போய் விட்ட கதை... காட்சியை உதறியது.

அவனிடம் அத குடு இத குடு என்று அவனை சுரண்டி எடுத்து அவனை ஒன்றுமில்லாமல் செய்து.. அவன் பொண்டாட்டி வந்து இப்போது இரு குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் ஆன பிறகு தான் அவன் தப்பித்தான்.

என்ன யோசிக்கற. ஆம்புலன்ஸ் அப்படியே கொஞ்சம் உள்ள வாப்பா என்றபடியே வேகமாய் அவன் வாசலில் இருந்த குடம் பாத்திரம் ஆட்டாங்கால் என ஒவ்வொன்றாக அப்புறப் படுத்தினான். புரிந்து கொண்ட பசங்களும் ஓடிச் சென்று உதவ... அங்கே நின்றிருந்த சிலரும் உதவ தொடங்கினார்கள். ஆம்புலன்ஸ் என் வீட்டைத் தாண்டி பக்கத்து வீட்டு வாசலில் நின்றது.

அப்போது கூட நான் அப்படியே தான் அமர்ந்திருந்தேன். ஆம்புலன்ஸ்க்காவது வழி விடப்பா என்று சில பெருசுகள் சவுண்ட் விட... போனா போகுது என்று கால்களை மட்டும் மடக்கிக் கொண்டு வழியை விட்டேன். தத்தளிப்பும் தவிப்புமாக தள்ளாட்டத்தில் பாடி இறக்கப்பட்டது.

அப்பாடா... என்ற பெருமூச்சு கூட்டத்தில். என்ன இப்பிடி புசுக்குனு போயிடுச்சு என்ற வெறுமையும் தான். பெரிதாக ஏதோ நடக்க போகிறதென எதிர் பார்த்த கண்களில் ஏமாற்றம். பெருத்த புஸ்ஸு.

சரி வந்து பாக்கறவங்க பாருங்க. ரெம்ப நேரம் வைக்க முடியாது. ஊர் பெருசு இப்போது தான் செத்து பிழைத்தது போல வாய்ச்சவடால் விட்டது. எல்லாருமே கோட்டுக்கு அந்தப்பக்கம் நிற்க தான் விரும்புகிறார்கள். இந்தப்பக்கம் வெகு சிலரே அது எதிராக இருந்தாலும் நிற்கிறார்கள்.

நான் அமர்ந்து கழுத்தை சரித்து என்ன நடக்கிறது என்று பார்த்தபடியே இருந்தேன். என் கண்களில் வெறுமை. வேகமாய் என் அருகே வந்த மணிமேகலை... நீ நல்லா இருக்க மாட்ட. நாசமா போய்டுவா... என்று மண்ணை வாரி வீசி விட்டு சென்றாள்.

நான் சிரித்துக் கொண்டே அங்கிருந்து மெல்ல எழுந்து ஈஸி சேரை மடக்கி என் வீட்டு திண்ணையில் வைத்து விட்டு கிளம்பினேன்.

பாடியை பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் அப்படியே என்னை பார்த்தது. என்ன கிளம்பிட்டான் என்பது போன்ற பார்வைகள்... பலவிதம். கூத்தாடிக்கு நடக்க இருந்த கொண்டாட்டம் தடுமாறியது.

கூட்டம் விலக்கிக் கொண்டு கர்ணா எங்க.. கர்ணாவை எங்க என்று தேடியபடியே வந்த மணிமேகலையின் தம்பி... பெரிய வீதியில் என் தோள் பற்றி... நிறுத்தினான். என்ன என்பது போல திரும்பாமலே நின்றேன்.

பார்த்தியா எப்பிடி பேசுறான்னு. நீ காசு குடுக்கவும் தான் நான் ஒத்துக்கிட்டேன்....அவளை எல்லாம் சாக விடனும்..


கிருபாவை மேற்கொண்டு பேச விடாமல் மெல்ல திரும்பி அவன் பாக்கெட்டில் இன்னும் கொஞ்சம் காசை திணித்தேன். ஆம்புலன்ஸ்க்கு குடுத்துட்டு ஆகற வேலையப் பாரு என்றேன்.

அப்போது நான் நின்ற இடம்... மரணித்து கிடக்கும் அவன் என்னை அறைந்த இடம். நன்றாக உணர முடிந்தது. இந்த இடம் வந்தாலே இதுநாள் வரை என் கால்களில் இருந்த தடுமாற்றம் இப்போது மெல்ல அகன்று கொண்டிருந்தது.

# இளையவன் சிவா கவிதைகள்

உயரும் பூமியின் வெப்பநிலையைப் பற்றி
ஒரு நொடியும் கவலைப்படாமல்
வெட்டுகிறோம் மரங்களை
கட்டுகிறோம் வில்லாக்களை
இளைப்பாற இடம் கிடைக்காமலும்
மூச்சு விட மரமின்றியும்
கதிரவனும் கண்ணீரைப் பெருக்குகிறான்.

◎



நீண்ட தினங்களுக்குப் பிறகு
வனத்தில் நுழைந்த
பறவை நோக்குபவனை
வரவேற்கிறது பேரமைதி
வளியின் வேகம் நின்றதென
அமைதி காக்கின்றன
இலையும் கிளையும்.
கீச்சொலிகளும் உறுமல்களும்
கேளாது பேரச்சமூட்டுகிறது காடு.
சருகுகளையும் நகர விடாது
காலடிக்குள்
கிடத்திக் கொள்கிறது மரம்.
கடந்து போகாத வழித்தடங்களில்
காலடித் தடங்கள் காணாது
கலக்கமடைகிறது மனம்
ஆகாயப் பாலத்தில்
வெளியை அளக்கும்
புள்ளினங்கள் இல்லாது
வெறுமையில் விசும்புகிறது வனம்
கண்ணீரைப் பொழிய மறுத்து
மேகத்தைக் கரைத்து விடுகிறது வானம்.
வண்ணங்கள் தொலைத்த வானவில்லென
நிறமற்றுத் திரியும் தடங்களில்
தேடத் தொடங்குகிறான்
பறவையின் நிழலை.

◎

தட்டில் காந்தி விழுமா என
கவலையில் காத்திருக்கும்
பிச்சைக்காரனிடம்
பாடப்புத்தகத்தில் அச்சிடப்பட்ட
காந்தியைக் காட்டி
சிரிக்கிறாள் மகள்.

# சுடர்நிலா கவிதைகள்

**சாந்தி..**

இறந்துபோன சாரதாவின் சாயலாய்
பலகாரச்சூட்டின்
வாசம் நுகர்ந்தபடி
வீட்டின் நடுவே
அசைவற்றுக் கிடக்கிறது
வெள்ளைப் பூனை....

கலர் பூசப்பட்ட
சிமெத்துச் சுவர்கள் நடுவே குவிந்து கிடக்கும்
மரக்கறி மூட்டைகளில் மோதி வழியும் அப்புவின்
பெருமூச்சில் உலர்கிறது கழுவப்பட்ட விறாந்தை...


முற்றத்தில் உயர்ந்து நிற்கும் பந்தலில் தொடக்கு
வீட்டின் சரடுகள் உதிர்ந்து போயின.....

பால்
பழம்
பலகாரம்
படையல்...

சூழ்ந்திருந்த முகங்களிளெல்லாம் ஆத்துமாவின்
ஆசையெல்லாம் தீர்த்த பெரும் திருப்தி
அப்பியிருந்தது...

படையலின் முன்னால் உரிமைச் சொற்றை
அள்ளி மெல்கையில் உதிர்ந்து விழும் அப்புவின்
கண்ணீரில் சாரதாவின் ஆத்துமா இன்னும்
சுற்றிக்கொண்டிருக்கிறது...

◎



**விதியின் ரேகை...**

இரவின் போர்வையைக்
கிழிக்கும் நிலவொளியொன்றில்
ஒற்றைப் பாறையில்
அமர்ந்தபடி
கட்டிக்கொண்டோம் எமக்கான
வீடொன்றை....

கரும் பாறையில்
மோதிச் சிதறும்
நம் சொற்களை
சலசலப்பின்றி
நிதானமாய்
இழுத்து வரும் நதிநீரிடம்
இப்போது என்ன
சொல்வது....

நதிக்கரை மூங்கில்கள் நம் பற்றிய
பேச்சுக்களை
நிறுத்திக்கொண்டன..
கிணுகிணுத்து இரையும்
நுளம்புகள்
மறந்துவிட்டன
நம் ரத்தச் சுவையை..
சவுக்கு மரங்கள்
உதிர்க்கும் பூக்களில் கூட நம் வாசம்
இல்லை...

நாமின்றிச் சிணுங்கும் பெருவெளியை
அதட்டி ஊமையாக்கும்
தனிமையின் வேர்கள்
எம்முள்ளும் படர்கிறது..

எந்தப்
புகைப்படங்களிலும்
திணிக்க முடியா
எம் நினைவுப்
பொக்கிஷத்தை
ஏலமிடும் அந்த நாளை
எண்ணியபடி
இயல்பாய் நகர்கிறது
விதியின் கால்கள்...

நேசன் மகதி

# மண் குளியல்

பூமியவள்
கை கால் முகம் கழுவிக்கொண்டாள்
லேசான மழை!

அழுக்குப்போக தேய்த்துக் குளித்தாள்
கனமழை!

தண்ணீரில் ஆட்டம்போட்டு
சேறும் சகதியுமானாள்
அடைமழை!

கோடைகளில் அவள் குளிப்பதே இல்லை!
மரக்கூந்தல்களில் சிக்கெடுத்து அலசுகிறது
காற்று!

அவளின் முதுகுதேய்த்து பெரு அழுக்கை
சுரண்டி எடுக்கிறது வெள்ளம்!

தேய்த்துக்குளித்த மஞ்சளில் பச்சை
பூத்துக்கிடக்கிறாள் மேனியெங்கும்

அவள் குளிக்காவிட்டாள் நாறிப்போவோம்
நாம்..!

◎

சாந்தாதேவி, சென்னை

காலச்சக்கரத்தின் ஈவிரக்கமற்ற
சுழற்சியில்
சிக்கிக்கொண்ட அணுக்களின் சிதைவுகளில்
இருப்பெனும் கட்டமைப்புக்குள்
பலமெனப்பட்டது பலவீனமாகிட்ட
நிகழ்கணத்தின்
பேரிரைச்சல் கூப்பாடுகளில்
வலிதாக திணிக்கப்படும் கூர்கத்தி
கிழிக்கப்பட்ட முகமூடிகளின்
சிலந்தி வலைப் பின்னலுக்குள்
உடைந்து நொறுங்கிய மனதின்
வார்த்தைகளின் மறுபெயர் என்னவாயிருக்கும்?
மௌனத்தை தவிர.

# இரா. மதிராஜ் கவிதைகள்

மொழிகளின் தேசத்தில்
அவள்
என்றும் மாறாத
புன்னகை...

◎

புன்னகைக்கும் ஒவ்வொருவரும்
ஏதோ ஒரு வகையில்
அன்புள்ளவர்களே
அல்லது
அன்பிற்கு பாத்திரமானவர்களே

◎

ஆயிரத்தெட்டு பறவைகள்
பறந்தாலும்
குருவிகளுக்கு மட்டும்
வீடுகளில்
கிடைத்து விடுகிறது
எளிதில் கூடு.

◎

காலையில்
எழுந்ததும்
“அப்பா
இந்த குருவிக் கூடு
நான் தான் கட்டினேன்
குருவி தான் இன்னும் வரவில்லை “
என்று
முதல் குற்றப்பத்திரிக்கையை
குருவி மீது தாக்கல் செய்தான் மகன்.

ஞா. முனிராஜ், அருப்புக்கோட்டை

# கண்ணீர்

விரித்தாடிய இமைகளில்
நின்றாடிய தருணங்கள்
பெருக்கெடுத்துஓடியதே
வலிகளைசேர்த்திட
உயிர் நீராய்உருகியதே

நிலங்கள் வறண்டிட
அறுபட்டு கிடந்திட
கோமனங்கள் இடுப்பேறுகிறது
நாளைய பொழுது
நமக்கென எழுதுகிறது

நகைகளை பூண்டவள்
நகைத்துப் பார்க்கிறாள்
அழகாய் நகைக்கிறது
இன்னமும் அடகுகடையில்...

பேசிய விழிகளில்
வருகிற காதல்
ஊடல் பேசியதும்
சுரக்கும் நீராய் கயலும்....

கிளிகள் பேசப்பேச
சிரிக்கும் மழலையும்
கிலிகள் கேட்டு கேட்டு
அழுகிறது

நகைகள் இன்றி
கழுத்து நனைகிறது
நகையும் கடனாய்
வர மறுக்கிறது

பொத்தல் கூரையில்
பசிகள் காய்கிறது
அனுமதியின்றி விழிகள்
நீரை வார்க்கிறது

அடுப்புகள் எரிந்தே
நாட்கள் பலவாகிறது
சுடும்நெருப்பில் வீழ்ந்து
உயிர்கள் தினம் மாய்கிறது

கிழிசல் ஆடைகள்
தைத்தே வாழ்கிறது
மாற்றுத்துணியின்றி
துவைத்தே போகிறது

தட்சனைகள் கொடுத்து
சேர்கிறது இருமணம்
தட்சனையின்றி
நிற்கிறது திருமணம்

சகதிகள்பூசிய உடம்பில்
விழிகள் மட்டும்
திறந்தே இருக்கின்றன...
கொஞ்சம் கொஞ்சமாய்
கழுவப்படுகிறது
வார்க்கும் நீரில்....

முகங்களில் வந்தே
ஆடிடும் அழகு..
அழகை உதைத்தே
ஆடிடும் விழிநீர்ப்பந்து

வேண்டுதலில் ஆடுகிறது
ஆலமரத் தொட்டில்....
வெறுமனே ஆடுகிறது
தாய்மையற்ற தொட்டில்..

அழுவதற்கு முன்னே
வலிகளை மூடு
விழிகளில் பூத்திடும்
ஒளிரும் நிலவோடு...



# சுமைகள்

சுந்தரிமணியன், புதூர்

காலையில் எழும்போதே கால்களை ஊனமுடியாமல் வலதுகுதிங்காலில் மட்டும் வலி விண் விண்ணென்று தெறித்தது. கால்களை ஊனமுடியாமல் எழுந்த பூர்ணாவுக்கு எதற்குத்தான் இந்தக் குதிங்கால் இப்படி வலிக்கிறதோ தெரியலையே? என நினைத்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறாகி ஐந்து நிமிடம் ஆகியிருந்தது. வேகவேகமாக துடைப்பத்தை எடுத்துக் கொண்டு முன்வாசல் பெருக்கித் தண்ணீர் தெளித்தாள். பக்கத்துத் தெருவில் பால்பண்ணைக்குப் போய் பால் வாங்க வேண்டும். தலைமுடியைச் சரிசெய்து கொண்டு பால் வாங்கி வந்தாள். சிங்கில் நிறைந்திருக்கும் பாத்திரங்களைத் துலக்கிவிட்டு, பல்தேய்த்து, முகம் கழுவி, பாத்ரூமை விட்டு வெளியே வந்து மணியைப் பார்த்தாள் மணி ஆறு நாற்பது. அடுப்பில் பால் காய்ச்சினாள். நினைவுகள் தன்னையும் அறியாமல் பின்னோக்கி நகர்ந்தன. மாமனார் உயிரோடு இருந்தால் ஐந்து நிமிடம் எழுந்திரிக்கத் தாமதம் ஆனாலும் மகனும் மருமகளும் படுத்திருக்கும் அறையின் கதவைத் தட்டி,

“எந்திரிம்மா. மணி ஆறாச்சு”

என்று கத்துவார். அவர் கத்திய கத்தலில் திடுக்கிட்டு விழிக்கும் பூர்ணாவுக்கு, ஒரு நாளைக்காவது தனது மனைவியை எழுப்பி, வாசல் தெளிக்கச் சொல்லக்கூடாதா? என்ற எண்ணம் மேலிட்டாலும் அதை வெளியில் சொல்லாது மனதிற்குள்ளேயே புதைத்துக் கொள்வாள். சொன்னாலும் தனது கணவனைப் போன்ற கல்நெஞ்சக்காரர்களுக்குத் தனது வலி புரியாது. பிரச்சினைதான் பெரிதாகும்.

திருமணமாகி வந்த புதிதில் வீட்டிலிருந்த நாத்தனார் பிள்ளைகளுக்கெல்லாம் மாங்கு மாங்கென்று வேலை பார்த்துச் செய்தவளுக்கு, தனக்கென்று குழந்தை பிறந்தவுடன் வீட்டுவேலை பார்த்து, எல்லோருக்கும் பார்ப்பது சிரமமாக இருந்ததுடன் தனது குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் போனது. தனது கணவனிடம் எவ்வளவு சொன்னாலும் அவன் அதைக் காதிலேயே வாங்கவில்லை. நாத்தனார் பிள்ளைகள் இருவரில் ஒருவன் கல்லூரியிலும் இன்னொரு பெண் பத்தாம் வகுப்பும் படித்து வந்தாள். போதாக்குறைக்கு நாத்தனார் மூன்றாவது பையனையும் இங்கே தங்கவைக்க பிளான் செய்தாள். இவள் எவ்வளவோ தனது கணவனிடம் மன்றாடிப் பார்த்தாள். என்னால் மூன்று பேரையும் பார்க்கமுடியாது உங்க அக்காவிடம் சொல்லுங்கள் என்று. ஆனால் அவன்,

“உன்னால் பார்க்கமுடியாவிட்டால் நீ சொல்லு. என்னால் சொல்ல முடியாது” என்றான்.

அவன் இப்படிச் சொல்வதைக் கேட்டபிறகு அவளால் மனஉளைச்சலில் இரவு முழுவதும் தூங்கமுடியவில்லை. ஏன் உயிர் வாழ்கிறோம்? பேசாமல் தற்கொலை செய்து கொள்வோமா? உள்ளுக்குள் பல்வேறு எண்ணக்குமுறல்கள் எழுந்து உடலையும் மனதையும் சோர்வடையச் செய்தன. நான் நாத்தனாரிடம் பேசினால் அவள் எத்தனை ஜாடைப்பேச்சு பேசுவாள் என்று தெரியாது. சண்டை பெரிதாகிவிடும். மாமியார் அதைவிட மோசம். என் குழந்தையைப் பார்ப்பேனா? அல்லது வருசம்பூரா இவர்கள் பிள்ளைகளையே பார்த்துக்கொண்டிருப்பேனா? திருமணமாகி இரண்டாண்டுகள் இவர்களுக்குப் பார்த்தாகிவிட்டது? என்ன செய்வது? எனக்கான வாழ்க்கையை நான் எப்போதுதான் வாழ்வேன்? இந்தக் கேள்வி அவள் மனதுக்குள் எழுந்து கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது.

திருமணமாகி வந்த நாளிலிருந்து தனது கணவனிடம் கூட தனியே பேசமுடியாத வீட்டின் சூழல் ஒரு பக்கம் என்றால், மனைவியைப் பேசவே விடாமல் வாயை அடக்கும் கணவனின் கொடூர குணங்கள் அவள் மனதை வெகுவாகப் பாதித்தன. மலர் போன்ற மென்மையான அவளின் மனது காயம்பட்டுப் போனது. என்றைக்காவது தனது அம்மா வீட்டிற்குப் போகலாம் என்றால் மூஞ்சியைத் தூக்கும் மாமியார், மாமனாரின் செயல்களும் கணவனின் குணமும் அவள் ஆறுதல் தேடக்கூட வழியில்லாமல் செய்தன. அப்போதெல்லாம் அவள் குழந்தைகளைப் பார்த்து மட்டுமே ஆறுதல் அடைவாள். அவளுக்கு அடிக்கடி தற்கொலை எண்ணம் வரும் போதெல்லாம் தனது குழந்தைகளைப் பார்த்து அமைதி பெறுவாள்.

இப்படித்தான் பூர்ணாவின் வாழ்வு நகர்ந்தது. வழக்கமாக ஒரு நாள் மாலையில் தெருவில் வரும் நல்ல தண்ணியை வயதான மூதாட்டி ஒருவர் பிடித்து வைக்க மாமியார் தூக்கி வந்தாள். அதைப் பார்த்த நாத்தனார் மகன்,

“எதற்கு ஆச்சியைத் தண்ணீர் பிடிக்கச் சொல்கிறீர்கள்? நீங்கள் சென்று பிடிக்கவேண்டியதுதானே?”

என்றான். அதைக் கேட்ட பூர்ணாவுக்கு வந்த ஆத்திரத்தில்,

“ அதைக் கேட்க நீ யார்? உன் வேலை எதுவோ, அதை மட்டும் பார்”

என்றாள் கோபத்தில்,

“ இது என் ஆச்சி வீடு. நான் கேட்கத்தான் செய்வேன்”

என்று ஆணித்தரமாய்க்கூற,

“உன் அதிகாரத்த உன் வீட்டில் போய் வைத்துக்கொள்”

என்று சொல்ல, பூர்ணாவுக்கும் அவனுக்கும் சண்டை முத்திப்போனது. வேடிக்கை பார்த்த மாமனாரும், மாமியாரும் ஒன்றுமே சொல்லாமல் நகர்ந்தனர். தன் கணவர் வந்த பிறகு நடந்த விசயங்களைக் கூற, அவர் எதுவும் பேசாமல் நகர, பூர்ணாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

“அவனைத் தட்டிக் கேட்கக்கூடாதா?”

கோபத்தில் வார்த்தையும் துக்கமும் தொண்டையை அடைக்க,

“கேட்போம். பேசாமல் இரு தாயே”

என்று நகர்ந்த கணவனின் மலுப்பல் அவளுக்கு வெறுப்பைத்தான் கொடுத்தது. தன் முன்னாடியே கூப்பிட்டுத் தட்டிக் கேட்காத கணவரின் குணமும் தூண்டி விட்ட நாத்தானாரின் சாமார்த்தியமும் தெரிந்திருந்தாலும் அதைக் கேள்வி கேட்காத கணவரின் கண்மூடித்தனமான பற்றும் குடும்ப வாழ்க்கையின் மேல் அளவுகடந்த வெறுப்பைக் கொடுத்தன.

வருடக்கணக்காய் உட்கார்ந்து இவர் அக்கா பிள்ளைகளுக்குச் சமைத்துப் போடவேண்டும், அதைத் துளிக்கூட எண்ணாத, என்னை யார் பேசினாலும் வேடிக்கை

பார்க்கக்கூடிய இவருடன் வாழவேண்டுமா? எல்லாம் என் தலையெழுத்து. நான் எதற்காக வாழவேண்டும்? என் குழந்தைகளுக்காக மட்டுமே இந்தத் துன்பத்தையெல்லாம் பொறுத்துக் கொள்கிறேன்.

காலையில் எழுந்ததில் ஆரம்பித்து, இரவு வரை வேலைதான். மாமியார் மாலையில் ஒரு நேரம் தண்ணீர் பிடிப்பது தவிர எந்த வேலையும் செய்வதில்லை. கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு காலையில் காப்பி குடித்தவுடன் வாசிக்க ஆரம்பிக்கிறவள். காலை டிபன் முடித்து பூர்ணா கிச்சனை விட்டு வெளியில் வரும்போதுதான், கணவனுக்குப் பரிமாற எழுந்து வருவாள். வீட்டிற்கு வரும் பலரும்,

"ஏன் உன் மாமியார் காலையிலேயே கதைப் புத்தகம் படிக்கிறார்கள். வீட்டில் வேறு வேலையில்லையா? உனக்கு சமையலில் உதவலாம் அல்லவா?"

என்று உறவினர்கள் பூர்ணாவிடம் கேட்டதுண்டு.

"அவர்கள் டீச்சர் வேலை பார்த்தவர்கள் என்பதால் இப்படிப் பழகியிருக்கிறார்கள். நான் வருவதற்கு முன்பு மாமானாரின் அத்தை எல்லா வேலையும் பார்த்திருக்கிறார்கள். இப்பொழுது நான் பார்க்கிறேன். அதனால் அப்படியே பழகிவிட்டார்கள்."

என்று சொல்லி சமாளிப்பாள். இன்னுமொரு கொடுமை மாமியாருக்குப் பென்சன் வருவதால் அவருக்கு மட்டுமே டூத்பேஸ்ட். மற்றவர்கள் எல்லோருக்கும் வீட்டில் பல்பொடிதான். வந்த புதிதில் இது விந்தையாகப்படவே,

"ஏன் எல்லோருக்கும் பேஸ்ட் வாங்கக்கூடாதா? உங்க அம்மாவுக்கு மட்டும் என்ன ஸ்பெசல்?"

என்று கேட்டபிறகே அவளுக்கு டூத்பேஸ்ட் கிடைத்தது. தனது அப்பா வீட்டில் கஷ்டம் தெரியாமல் வளர்ந்தவளுக்கு புகுந்த வீட்டினரின் பாகுபாடு வேதனையைத் தந்தது.

பூர்ணாவின் மனது இப்படித்தான் இன்னும் அசைபோடுகிறது. "இன்று மாமானார் இறந்து போனாலும் மாமியாரைக் கண்ணும் கருத்துமாய் நான்தான் பார்த்துக் கொள்கிறேன். என்னுடன் சண்டை போட்ட பேரனோ, வளர்த்த பேத்தியோ வந்து பார்க்கவில்லை. என்றாவது உடல்நிலை சரியில்லாமல் போகும் சமயம் வந்து எட்டிப் பார்ப்பார்கள். அவ்வளவுதான். மகள்களே அப்பா போனவுடன் தாயைப் புறக்கணித்தனர். ஆனால் இன்னும் மாமியார் மகள்களின் மேலும் தான் வளர்த்த மகளின் பிள்ளைகளின் மேலும் அளவுகடந்த பிரியத்தைக் காட்டுவார். ஆனால் நான் மட்டும் இன்னும் அந்நியப் பெண்ணாகவே எனது கணவனாலும் மாமியாராலும் உணரப்படுகிறேன். உணர்த்தப்படுகிறேன். இந்த நிலை எப்போது மாறும்? புகுந்தவீடென்பது வலி மிகுந்த சுமையாகவே எனக்கு இன்னும் இருக்கிறது".

# டீன் கபூர் கவிதைகள்

## பறக்கத் தெரியாத கொக்கு எனப் பெயர்

கொக்கு மாதிரி ஒன்றை
கடையில் வாங்கி வந்தேன்.
மேசையில் ஒரு கொக்காக
மனம் நிறைந்தது அது.
பறக்கத் தெரியாத கொக்கு என
ஒரு பெயரை வைத்துக்கொண்டேன்.
காற்றில் அசையும் கடதாசிகளுக்குப் பாரமாக
இருந்தது
தனது நீண்ட கால்கள்.
கொக்கு பற்றிய ஒரு கனவில்
கொக்குகளோடு கொக்கெனப்
பறக்க வில்லை.
அறை முழுவதும்
அதன் இறகுகள் உடைந்து கிடந்தன.
கடதாசிகள் றெக்கை கட்டின.

◎

## சோதனை

சுதந்திரம் என்ற பறவைகளை
உற்பத்தி செய்து வைத்திருந்தனர்
குழந்தைகள்.

விடிய விடிய
எழுதி எழுதி
விழித்து விழித்து
அப்பியாசக் கொப்பிகளில்
அவற்றின் கூடுகளை அமைத்திருந்தனர்.

சோதனையோடு சுதந்திரத்தைப் பறக்கவிட்டு
மகிழும் குழந்தைகளுக்கு
இப்போது இரவு என வைத்துக்கொள்வோம்.

அமைதியாகத் தூங்குகின்றனர்
எங்கெங்கோ பறக்கும் சுதந்திரம்
இன்றிரவு ஒரு கனவில் பேசக்கூடும்.

# அ.சீனிவாசன் கவிதைகள்

ஆற்றை வரைவதை விட
மணலை வரைவது
எளிதாகத்தான் இருக்கிறது
ஆனால்
கவலையாக இருக்கிறது.
ஆற்றைக் கடப்பதை விட
மணலைக் கடப்பது
எளிதாகத்தான் இருக்கிறது
ஆனால்
கவலையாக இருக்கிறது.
நீரை அள்ளுவதை விட
மணலை அள்ளுவது
இலாபகரமாகத்தான் இருக்கிறது
ஆனால்
கவலையாக இருக்கிறது.
கவலைப்படுவதன் மூலம்
கவலைக்குரிய விசயத்தை
மறைத்துவிடுவது
எளிதாகத்தான் இருக்கிறது
ஆனால்
கவலையாக இருக்கிறது.
என்ன ஆறு இருந்த இடத்தில்
ஆறு போல ஒன்று இருக்கிறது
அவ்வளவு தானே!
மனிதன் இருந்த இடத்தில்
மனிதன் போன்ற ஒருவனாக இருப்பவனுக்கு
இதில் கவலைப்பட என்ன
இருக்கிறது!
ஆனாலும் கவலையாக
இருக்கிறது.

◎

மணற்கொள்ளை இனி இல்லை
நதிநீர்ப் பங்கீடு பிரச்சனை இல்லவே இல்லை
ஆறுகளை தேசியமயமாக்கும் அவசியம்
இல்லை.

எல்லாவற்றிலும் கெமிக்கலென கதறியவன்
தண்ணீரும் ஒரு கெமிக்கலென
சமாதானம் கற்றுவிட்டான்.
தாயை நட்டாற்றில் விட்டு பழகிக் கொண்டவன்
ஆற்றையும் கை கழுவ ஆயத்தமாகிறான்.

ஆற்றங்கரை
நாகரிகத்தின் தொட்டிலென சிலாகித்தவன்
ஆற்றில் கட்டில் போட்டு
குடும்பம் நடத்துகிறான்.

நதிக்கரையில் ஈமச்சடங்கு நடத்தியவன்
நதிக்கே ஈமச்சடங்கு புரிகிறான்.

'ஆறு தன் வரலாறு கூறுகிறது' என
கட்டுரை எழுதுகிறவன்
ஆறு இருந்ததையே
வரலாறாக ஆக்குகிறான்.

குற்றுயிரும் குலை உயிருமாய்
நகரும் நதியின் விரல் பிடித்து
ஜெ.சி.பியால்
சாலைத் தடங்களில் குறிப்பு எழுதுகிறான்
'என் சாவிற்கு நானே காரணம்
வேறு யாருமில்ல '.

இப்படித்தான்
ஒரு நதி ஒரு மழைக்காலத்தில்
சாலையில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறது!

# "உதவியின் ஒளி"

கவிஞர் பா. குரு



மருதன் பார்ப்பதற்கு ஏழை வீட்டு பையன் போல் இருக்கிறான். கரை படிந்த சட்டை, எளிமையான தோற்றம். ஆனால் அதற்கு முற்றிலும் எதிர்மறையாக இருக்கிறான் பாலாஜி. இருவரும் சிறுவயதில் இருந்தே நண்பர்கள். மருதன் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தாலும், பாலாஜிக்கு அது பிடிக்காது. பாலாஜி எல்லா இடங்களிலும் மருதனை தரக்குறைவாகவே பேசுவான். மருதன் ஏழ்மையான நிலையில் இருந்தாலும் கூட, உதவும் மனப்பான்மை கொண்டவன். ஆனால் பாலாஜி கஞ்சன்; உதவி என்று யாரும் கேட்டால், "என்னால் முடியாது" என்பதே அவனுடைய பதில்.

பாலாஜியின் சொந்த அலுவலகத்தில் மருதன் பியூன்னாக வேலை பார்த்தான். தினமும் மிதிவண்டில் செல்லுவது தான் மருதனின் வழக்கம். ஒரு நாள், சாலையில் சென்றுகொண்டிருக்கும் போது, ஒரு 50 வயது நபர் விபத்தில் சிக்கி, உயிருக்கு ஆபத்தான நிலையில் சாலையில் விழுந்து கிடந்தார். அதனை பார்த்த மருதன், அவரை மருத்துவமனையில் சேர்த்து, உறவினர்களுக்கு செய்தி சொல்லி விட்டு, அலுவலகத்திற்கு சென்றான். இதனை கேள்விப்பட்ட பாலாஜி, "உனக்கு வேலை விட தர்மம் முக்கியமா? அந்த வேலையை பார்" என்று மருதனை வேலையை விட்டு நீக்கிவிட்டான்.

சில மாதங்கள் வேலை தேடி அலைந்த மருதனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. மனைவியின் வருமானத்தில் பிள்ளைகளை படிக்க வைத்து வந்தான். எப்போதும் டீ கடையில் செய்தி தாள் படிப்பது வழக்கம். ஒரு செய்தி தாளில் வேலை ஆட்கள் தேவை என்று ஒரு விளம்பரம் பார்த்து, தன் கையில் எடுத்து கொண்டு பட்டணம் சென்றான். அங்கும் வேலை கிடைக்கவில்லை. விரக்தியில் வெளியே வந்தவனுக்கு காத்திருந்தது இன்ப அதிர்ச்சி. பியூன் வேலைக்கு சென்ற அவனை மேலாளர், "கிடைத்தது விட்டது" என்று ஒரு குரல் கொடுத்தார். ஆச்சரியத்துடன் ஏன் எனக்கு இந்த வேலையை கொடுத்தனர் என்று புரியாமல் முதலாளியிடம் கேட்டான் மருதன். அப்போது அவர் சொன்ன பதில், "நான் அன்று உயிருக்கு போராடிய போது நீ மட்டுமே என்னை காப்பாற்ற முன்வந்து என்னை மருத்துவமனையில் சேர்த்தாய்" என்றார். இதுவே மனிதனின் எதிர்வினை.

# கி.கவியரசன் கவிதைகள்

காற்று ஒலியை கடத்துவது போல்
கவிதையும் கடத்துகிறது
யாரையும் கேள்வி கேட்பதில்லை
அது பரிமாறுகிறது
சண்டையிடுவதோ சச்சரவு செய்வதோ
அதற்கு தெரியாது
இயற்கையோடும் உணர்வுகளோடும்
அது சரணடைகிறது
அது எந்த தீர்வுகளையும்
யாரிடமும் கேட்பதில்லை
அது முழுமையிலிருந்து பிறக்கிறது
அது ஒரு ஊடகமாகிறது
புல்லாங்குழல் இசை போல்
ஊதுபவரின் சுகதுக்கத்தை
அது அப்படியே கடத்துகிறது!!!

◎

எல்லோரும் கூடி ஆளுக்கு ஒரு வரியாக
கவிதை எழுதினார்கள்
முதல் வரியில் வானமும்
மறு வரியில் மேகமும்
அதற்கடுத்து பூமியும்
பிறகு ஒரு நதியும்
இறுதியில் ஒரு கடலுமாக
அந்த கவிதை முடிகிறது
முதல் வாசகன் கடலழகு என்றான்
அடுத்தவன் வானம் அருமை என்றான்
பிறகொருவன் பூமி சிறப்பென்றான்
இப்படியே போக
இறுதியில் வானமாகவும் மேகமாகவும்
பூமியாகவும் நதியாகவும் கடலாகவும்
பிரிந்தது கவிதை!

◎

ஜாதி என்றும் மதம் என்றும் இனம் என்றும்
இன்னும் பல வென்றும் மோதிக் கொள்கிறார்கள்
இப்படித்தான் நானும்
காலை எழுவது முதல்
இரவு உறங்குவது வரை
மோதிக் கொண்டேயிருக்கின்றேன்
ஆனால் என்னோடு!!!

◎

பரபரப்போடு சுற்றும் முற்றும்
பார்த்துக் கொண்டிருந்த
ஒன்றின் மீது வந்தமர்கிறேன்
நெஞ்சை பிடித்தபடி ஒன்று
அமைதியாய் சாய்ந்திருந்தது
யாரின் கரத்தையோ ஒன்று
இறுக பற்றிக் கொண்டிருந்தது
வயிற்றை தடவியபடி ஒன்று
தனக்குள் சிரித்துக் கொண்டிருந்தது
குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக்கொண்டிருந்த
சிறுவர்களைப் பார்த்து ஒன்று
ஏங்கிக் கொண்டிருந்தது
உதறல் எடுத்து ஒன்று
சுருண்டு கொண்டிருந்தது
எவ்வளவு ஆகுமென ஒன்று
கணக்கிட்டுக் கொண்டிருந்தது
மருத்துவர் அழைக்கிறார் செல்கிறேன்
மீண்டும் அதே பரபரப்போடு
சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கியது
நான் அமர்ந்து செல்லும் ஒன்று!!!

# கலித்தேவன் கவிதைகள்

அகத்தில் பாய்ந்த ஒளி உடலை
ஊடுருவி முழுவதும் ஒளிர்ந்தது
கூடுதலாக என்னப்பா மகிழ்ச்சியாயிருக்க
ஒன்றுமில்லை
அகத்தின் அழகு என்றேன்
பீறீட்டு வெளியாகும் போதாமையை புன்னகையின்
ஒளியால் பரவச் செய்தாய்
முழுமையடைய மறுப்பே துணை
தேடிக் கொண்டிருப்பதை விட அறிவில் அறிவதே
ஆனந்தம்
துயரில் நுனி நாக்கே பெரும் எதிர்
வளைய வரும் கோள்களா காட்டும்
வழியெய்யறிவதே நோக்கு
ஈர்ப்பின் ரகசியம் ஈர்க்கப்படுவதே
ஒளிப்புள்ளி ஈர்க்கப்பட்டு
ஜோதியாவது
மூழ்குவதும் இரண்டற கலப்பதும்
தூய ஈர்ப்பின் இருப்பு
தனிமைத் தேனை பருகுவதின்பம்
விருப்பு வெறுப்பு இயல்பாகும்
எதையும் ஏற்றுக் கொள்ளலில்
தெளிவு
அகமும் புறமும் ஒன்றான பின்னே
வெளி ஒன்றுண்டோ?

◎

மேஜை மீதிருந்த உலக உருண்டையில் கைவைத்து
பார்த்துக் கொண்டிருந்த மகள்
கேட்டாள்
பூமி இப்படித்தான் இருக்குமா
திரைப்படங்களில் காட்டுவது போல
அப்படித்தான் இருக்குமென நம்புகிறேன் நானும்
நேரில் பார்த்ததில்லை என்றேன்
அடுத்தது எதிர்பார்த்த கேள்வி
கடவுள் உலகை படைத்தாரா?
நிச்சயமாக எனக்கு தெரியாது
யாரும் ஆதாரப்பூர்வமாக சொல்லவில்லை என
முணுமுணுத்தேன்
இதற்கு மட்டும் முணுமுணுக்குற
என்றாள்
யாருக்கு தெரியும் பக்கத்திலிருந்து
பார்த்துக் கொண்டிருந்தாலும் இருப்பார் என என்
அப்பா சொல்லியிருக்கிறார்
கலகலவென வயிற்றை பிடித்துக் கொண்டு சிரித்தாள்

◎

மொழியின் வீச்சை உணர துடித்தான் ஒரு நீண்ட
வாழ்க்கை தேவைப்பட்டது
சொற்களின் வழியே நிறுவ தலைப்பட்டான்
வார்த்தைகள் சுனக்கம் காட்டின, இலக்கியத்துக்காக
எதை பின்
தொடர வேண்டும்
சொற்கள் உள்ளே கோர்க்கப்பட்டு
ஒலியாக பரிணமித்தது
ஒலியினை பின்தொடர முடியுமா?
பிரார்த்தனை ஒலியை பின்தொடர்ந்தவள் சந்தித்த
நிகழ்வுகள் என்ன?
கற்பனையின் உச்சத்தில் மொழியின் சிறப்பு
இலக்கியத்தின்
பக்கங்களில் நிரம்பின
மொழிகளுக்குள் கண்டடைவதின்
கூறுகளுக்குள் சிக்காமல்
வெளியேறி வால்பிடித்து ஓடி
தப்பித்தன சொற்கள்
கேள்விகள், கேள்விகள், கேள்விகள்
பதில்களை தேடின
பிடி கொடுக்காமல் நழுவி ஓடியது
ஒலியை பின்தொடர்ந்தவளின்
மௌனம் பேசியது, பதில்களை தேடியது.

◎

மழைநாளில் மழையோடு
மழையாய் நனைந்தேன்
எச்சமின்றி முழுதாய்
தூவானத்தின் பெரும் தூறலால்
பூமியெங்கும் காலடித்தடங்கள்
அடர் தூசியின் நடுவே முத்திரை
உயிர்பிழைக்க காத்திருக்கும்
கரையோர நாணல்கள்
கலித்தேவன்

**பெ.விஜயலட்சுமி, காஞ்சிபுரம்**

*பரபரப்பான*
*வாழ்க்கைச் சூழலில்*
*எப்பொழுதாவது*
*எதிர்ப்படும்போது*
*கைக்குலுக்கிக் கொள்கிறோம்.*
*முத்தமிட்டுக் கொண்டதாய்*
*பேரானந்தத்தோடு*
*தழுவிக் கொள்கிறது*
*நமது பேரன்பு!*

◎

---

**துவாரகன்**

# ஒன்றில்

*மிகச் சிலிர்ப்போடு*
*வேர்விட்டது வெற்றிலைக்கொடி.*
*தனக்குரிய ஊற்று*
*உண்டென்ற*
*கரைபுரண்ட மகிழ்ச்சியோடு*
*வேர்கள் வளர்ந்தன*
*வளர்ந்து கொண்டேயிருந்தன*
*மண்ணின் பிடிமானத்தைத் தேடியபடி*
*யாராவது வரக்கூடும்*
*ஒன்றில்,*
*நாளாகிவிட்டது என்று*
*தூக்கி எறிவதற்கோ*
*அல்லது*
*மண்ணில் ஊன்றுவதற்கோ*
*நீர் நிரப்பிய*
*போத்தலில்*
*அழகுக்காக*
*வைக்கப்பட்டிருக்கிறது*
*ஒரு வெற்றிலைக்கொடி.*

**பா.சிவகுமார்**

# கடற்கரைக் கா(சா)ட்சிகள்

*இறந்து கரையொதுங்கிய*
*கடலாமையின்*
*தலையைச் சுற்றியவாறு*
*நெகிழிப் பை*
*தீர்ந்த பின்பும்*
*அலையில்*
*ஆடிக் கொண்டிருக்கின்றன*
*காலி மதுபுட்டிகள்*
*கெட்டுப்போன சாம்பார் சேர்வா*
*நெகிழிப் பொட்டலங்களை*
*மோந்துப் பார்க்கும் கயல்கள்*
*கழிவுக்குப்பைகளால்*
*மூடிக்கிடக்கும் வீட்டை விட்டு*
*வெளியேற முடியாமல்*
*தவிக்கும் நண்டுகள்*
*உப்புக் காற்றை மீறிய*
*துர்நாற்றம்*
*சீற்றத்துடன் அலைகள்*
*உள்ளதாகவும்*
*யாரும் கடலில்*
*குளிக்க வேண்டாமென*
*காவல்துறையின்*
*எச்சரிக்கை அறிவிப்பு*
*இது கடலின் அறச்சீற்றமென*
*யாரும் அறியாததே*
*ஆகப் பெருந்துயரம்.*

பெரணமல்லூர் சேகரன்

# உங்கள் விருப்பம்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது மற்றவர்களைத் துன்புறுத்தாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது மற்றவர்கள் மனம் புண்படும்படி
இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது அன்பை முறிக்காததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது வெறுப்பு வார்த்தைகள்
நிரம்பியதாக இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது பிரிவினை ஏற்படுத்தும்
சொல்லாகவும் செயலாகவும் இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது பாலின வேற்றுமை
பேசுவதாக இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது ஒற்றுமையில் வேற்றுமை
உருவாக்காமல் இருப்பதாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது சாதியம் பரப்புவதாக
இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது மத உணர்வுகளை
வெறியாக்காமல் இருப்பதாயின்

உங்கள் விருப்பம்
எதுவாயினும் இருக்கலாம்
அது மனிதநேயத்துக்கு
விரோதமாக இல்லாததாயின்

உங்கள் விருப்பம்
மனிதம் போற்றுவதாகட்டும்

உங்கள் விருப்பம்
வேற்றுமையில் ஒற்றுமை காணுவதாக இருக்கட்டும்

உங்கள் விருப்பம்
பாலின சமத்துவம்
பேணுவதாக இருக்கட்டும்

உங்கள் விருப்பம்
சாதி மத வேற்றுமை அழிய
வழி கோலட்டும்

உங்கள் விருப்பம்
அன்பின் ஊற்றாகட்டும்

உங்கள் விருப்பம்
எல்லாமும் எல்லார்க்கும் கிடைக்கும்
நிலையை நோக்கி
குமுகாயத்தை நகர்த்துவதாகட்டும்.


# வில்வரசன் கவிதைகள்

பெருவெளிகள் குறுகிய நாளில்
கைவிலங்குகள் பூட்டி
உன்னை இழுத்துச் செல்கையில்
நானும் அங்குதானிருந்தேன்.

என் துப்பாக்கிகள் அவிந்திருந்தன
தோள்ப்பட்டை
ரவைக்கூடுகள் நளுவியிருந்தன
கதறுவதை தவிர
குரல்வளைக்கு வேறு தேர்வுகளில்லை.

கொலைக்களத்துக்கு உன்னை அழைத்துச்
செல்கையில்
இயலாமையை
பருகிய தாகத்துடன்
நானும் அங்குதான் இருந்தேன்
என்னுடைய கொலைக்களத்திற்கு
அழைக்கப்படுவதற்காக..

◎



பொண்னையாப்பிள்ளையின்
பிரேதம் வந்தது.
புரண்டு அழுகின்றான்
டாக்டர் மருமகன்

சீதனச்சண்டையில் ஒதுங்கிய
தலைமகன்
மொட்டைச்சிரசுடன் மூலையில்
கசிக்கிறான்.

பாக்கு வெற்றிலை தட்டம் நிறைய
குளிர்பான போத்தல்கள்
பரிமாற்றம் புரிந்தன.

பாடை கட்டிய பத்தர் சண்முகம்
"போத்தல் " இல்லையென்று
வாயை சுளிக்கிறார்.

கடிகாரம் பார்த்து
கைகளை சொரிந்து
நேரம் போகுதென்று நெளிகிறார்
நல்மனிதர்.

பட்டு வேட்டியில் பந்தம் பிடிக்க பயத்துடன்
நிற்கும் பேரக்குழந்தையை
கண்களை மூடிய பொன்னையாத்தேவர்
கற்றுக்கொடுக்கிறார்
சாவினை பழக.

◎

# தங்கராஜா.சிவபாலு கவிதைகள்

**முல்லை நிலக் காட்சி**

காட்டுக்கோழி கானகத்தே
        கூவியழைக்கையிலே
பேட்டினமோ போய்நின்று
        புழுதி கிளப்பயிலே
காதல் கொண்டே சேவலங்கே
கனன்று வருகையிலே
தத்தித் தத்தி  தாளம் போடும்
        பேடுகளோ முல்லையிலே

காவுயர் சோலைக் காட்டில் சுதந்திரமாய்
                கானகத்து காட்டு விலங்கெல்லாம்
காதற் களிப்புடனே கதைபேசும் சுகமெல்லாம்
                கண்டு களித்தின்பாய் கண்ணசைவில்
தோற்றம் தெரியாத சொல்வனப்பில் தேனீயாய்
                தித்திக்கத் மலர்தாவித் தேன்னெல்லாம்
தேடிச்சேர்த்து மரப்பொந்தில் சேகரிக்கும்
                தேவதையாய் தலைவியின் வழியாமே!

மானினமும் மரையினமும் மரைதின்னாக் காய்
மண்பினில் தவிர்த்திடுமே மரங்களையும்
ஊனுண்ணும் நரியோடு புலிகள் எல்லாம்
                மறைந்து வாழும் காப்பகமாய் முல்லை
மாமருத மரத்தோடு முதிரை பாலை கருங்காலி
                மாமரமாய் வளந்த்தங்கு சோலையென
ஒய்யாரமாய் விளங்கம் முல்லை நிலம்
                ஓடிஒளித்து விளையாடிடும் யானையினம்.

        வேங்கை ஒலியெழுப்பி எச்சரித்து குரங்குகளும்
        வேகம்கொண்டு மரந்தாவி மறைந் தொழுகும்
சங்கை யெலாம் சஞ்சலமே தெரியாத மயான
                அமைதியெலாம் கற்றுத் தரும் பாங்கெல்லாம்
நீங்கக் கண்டிடலாம் முல்லை நிலத்தினிலே
                முதுவேங்கை பாய்ந்துவர பரதவிக்கும்
மானினமும் மாயாது தப்பிடவே விரைந்தோடும்
காட்சிகளைக் கண்டிடலாம் கானகத்து நடுவினிலே!

◎

### மருத நிலக் காட்சி

முல்லைப்பூ மொட்டவிழ்க்கும்
முல்லையூர்க் கரையழகே
பல்லை எழில் காட்டி நிற்கும்
கவியினம் தாவிப்பாயும்
எல்லைபட வாழ்ந்த அந்த
எழிலுறு காட்சி எல்லாம்
தொல்லை நீங்கப்பார்த்திடலாம்
தொல்காப்பிய மரபினிலே!

கட்டவிழ்த்து ஏர்பூட்டி பயிர் வளர்க்க
கார்காலம் மையல் கொண்டு
மொட்டவிழ்த்து மல்லாந்து மலர் விரிக்க
மகரந்தம் சொட்டுச் சொடுக்கிவிட
மணிக் கொடியோ உடல் பெருத்து
மத்தளம் போல நின்று
மணிமணியாய் மின்னுவதை
மருதத் திணை தந்திடுமே

அந்தப்புரம் மானினமும்
இந்தப்புரம் மயிலினமும்
அந்திப் பொழுதினிலே முகிழ்ந்த
காதல் வேட்கை எல்லாம்
மனதில் கிளர்ந்து நிற்க
மாலைவரை காத்திருந்து
மனையை எண்ணி விரைந்தவரும்
கோல மெல்லாம் மருதத்திலே.

◎

### நெய்தல் காட்சி

நெய்தல் நிலத்திடை கடலையை
நேராய் நோக்கி நிற்பவளை
நெத்தலி, கயல் செவ்வல் எனக் காட்டி
நெருங்கிவந்து படகின் ஓரத்தே
கொய்து கோதித் தலைமுடியைத்
திருத்திக் காதல் பார்வையிலே
மேயும் காதல் களிப்பெல்லாம்
கையும் விழியும் கலந்திடவே1

மீனின் இனங்கள் வகைகூறி
மீனவன் மீகாமன் வழிகூறி
தேனின் இனிமை தந்தங்கு
தேனாய்ப் பாயும் தமிழமுது
வானின் புள்ளினப் பறப்புக்களும்
வாசம் சொரியும் மலராக மீனவளும்
மானின் மருட்சிப் பார்வையிலே
மயக்கிக் கிறங்க வைத்திடுவாள்!


◎

### குறிஞ்சி

மலையின் மேட்டில் மான் எனவே
மருட்சி கூட்டி விழிகளிலே வனப்பு
கலையெனக் காட்டி நிற்பாள் கருத்துற
கனிமொழி செப்பல் ஓசை எலலாம்
சிலையாய் சிற்பம் போலங்கு நிலவாய்
சிந்திய முத்தாய் உதடுகளில் மலரும்
குலையா புன்முறுவல் தவழ விடுவாள்
முலையின் மகளே அவள் தானோ?

மாமலர்கள் மணம்வீச மகரந்தம் சொரிந்தொழுக
மாங்காட்டுத் தோப்பினிலே மானெனவே
சாயல் கொண்ட எழில் முகத்தாள்
சார்ந்தே ஓரக்கண்ணால் ஒளிபாச்;சி
மாயா சாலம் புரிந்திடுவாள் புதிராக
மறந்தே மதிமயங்கி நிற்க வைக்கும்
தீயாய் உளத்தைக் காயவைத்து கடிதில்
கண்ணின் காந்தம் கவர்ந்திடுமே.

.



# கனத்துப் போன இதயங்கள்!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அன்று இஃப்தார்விருந்திற்கான இந்தியன் அசோசியேசன்சிலிருந்து வந்திருந்த அழைப்பை, கொஞ்சம் சோம்பலாக இருந்த பிறகும் வெள்ளிக்கிழமையின் விடுமுறை உல்லாசமும் விட்டு விட்டுப் போக வேண்டுமா? என்று யோசிக்க வைத்தது.

இருந்தாலும் இஸ்லாமிய நண்பர் பாட்ஷா அழைப்பை மறுக்க விரும்பாமல் எமிரேட்ஸ் இங்கிலிஷ் ஸ்பீக்கிங் ஸ்கூலுக்கு நண்பர்கள் ராம், அல்போன்ஸ் ஆகியோருடன் சென்றிருந்தேன்.

நல்ல வேளை எந்த வித டிராப்பிக்கும் இல்லாததால் 6.20க்கு போய்ச் சேர்ந்து விட்டோம். அன்று 6.22க்கு நோன்பு திறப்பதற்கு எல்லா நண்பர்களும் பெண்களும் காத்திருந்தார்கள். எல்லோரும் தொழுகை முடிந்ததும் தங்கள் முன்னால் வைத்திருந்த பழ வகைகளையும், இரச வகைகளையும் குடிக்க ஆரம்பித்தனர்.

முதலில் பாட்ஷாவைக் காணாமல் நான் நண்பர்களோடு திரும்பி விடலாம் என்று நினைத்த போதுதான் விரைவில் ஓடி வந்து "வாருங்கள் நண்பரே, உங்கள் அமைப்பிலிருந்து யாரும் வரவில்லையா நான் நரசிம்மனிடம் சொல்லியிருந்தேனே. நீங்கள் மூவர் மட்டும்தான் வந்தீர்களா?" என்று என்னை கட்டித் தழுவிக் கொண்டார்.

"பாட்ஷா நான் உங்கள அழைப்பை இ.மெயிலில் தான் பார்த்தேன். மற்ற அங்கத்தினர் எல்லோருக்கும் அமைப்பிலிருந்து அழைப்புப் போயிருக்கும். ஒரு வேளை பிந்தி வருவார்களோ.. என்னவோ... " கொஞ்சம் மழுப்பினேன்.

"என்ன சார் சொல்கிறீர்கள் நோன்பு திறப்பதற்கு கரெக்டாக வரவில்லை யென்றால் அதன் பிறகு வரமாட்டார்கள். பரவாயில்லை. துபாயின் எல்லா அமைப்புகளிலிருந்தும் பல நண்பர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சரி என்ன செய்வது நீங்கள் அமருங்கள் நோன்பு திறப்பு நிகழ்ச்சி ஆரம்பித்து விட்டது.

நீங்களும் அமர்ந்து பழங்களை சாப்பிடுங்கள். பின் ஜூஸ் மோர் எல்லாம் இருக்கிறது. அருந்துங்கள், சாப்பிட்ட பிறகு பேசலாம். அமருங்கள். நோன்புத் திறந்த கொஞ்ச நேரத்தில் எல்லோரும் பள்ளிக்குச் சென்று வருவோம். நீங்கள் அமர்ந்திருங்கள். நாங்கள் ஐந்து நிமிடத்தில் வந்து விடுவோம். போய்விட வேண்டம். நாங்கள் வந்தவுடன்இரவு உணவு பஃபே சிஸ்டம் ஆரம்பித்து விடும். நண்பர்களோடு சாப்பிட்டு விட்டுச் செல்லலாம்" என்றவர் பள்ளிக்கு போய் தொழுகை எல்லாம் முடித்து விட்டு வந்தார்.

எல்லோரும் உணவு உண்ண ஆரம்பிக்க "அப்புறம் பாட்ஷா சொல்லுங்கள் இப்போது கலை நிகழ்ச்சிகள் எதுவும் நடத்த வில்லையா?" என்று ஆரம்பித்தேன் உணவுத்த்ட்டைக் கையில் எடுத்துக் கொண்டு.

"ஏன் சார்? கலை நிகழ்ச்சிகளா இப்போது துபாயில் முக்கியம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் கையிலிருந்த உணவை சுவைத்துக் கொண்டே...

"ஆறு நாட்கள் எந்திரமாய் அலைகிறோம். ஒரு ரிலாக்ஸிற்காக நிகழ்ச்சி ஏதாவது.." என்று நான் சொல்லி முடிப்பதற்குள் "துபாயில் முக முக்கியமான விஷயங்கள் நிறை செய்ய வேண்டியிருக்கிறது தெரியுமா...?" சிரித்துக் கொண்டே கேட்டார்.

"சொல்லுங்கள்" என்றேன்.

"மூன்று இந்தியர்களின் உடலை அவர்கள் வீட்டிற்கு முதலில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எந்த அமைப்பாவது செய்ய முன் வருகிறதா..." என்றார்.

"ஆனால் பாட்ஷா இந்தியர்கள் இறந்தால் அவர்கள் கம்பெனியே அவர்கள் உடலை ..." என்று நான் முடிக்குமுன்னே....

"இவர்கள் ஒழுங்கான விசா இல்லாமல் ஒளிந்து வேலை செய்தவர்கள். விபத்தில் இறந்தவர்கள், இவர்களில் ஒருவர் உடலை இந்தியாவிற்கு அனுப்ப நம்முடைய பணத்திற்கு பத்து லட்சத்திற்கு மேலே செலவழியும் அதை எந்த அமைப்பாவது செய்ய முனைகிறதா.. ஏதோ கலைநிகழ்ச்சிகள் என்று சொல்லி கூடி சாப்பிட்டு விட்டு சார், நாமெல்லாம் ஒரு வகையிலே கையாலாகாதவர்கள். ஏதோ பாட்டுப் போட்டி, பட்டி மன்றம் இல்லையெனில் சினிமா நடிகர், தமிழ் நாட்டின் பிரபலங்களை அழைத்து மகிழ்ந்து போய் விட்டுப் போகிறமே ஒழிய இந்த மாதிரி ஏதாவது நல்லது செய்ய முயற்சிக்கிறோமா?"


நான் கொஞ்சம் கோபத்துடன் "ஏன் நீங்கள் கூட உங்கள் அமைப்பின் மூலம் இந்த நல்லவைகளைச் செய்யலாமே" என்றேன்.

"உங்கள் கோபம் முகத்தை சிவப்பாக்கி விட்டது" என்று சிரித்தவர் நான் இப்போது அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். இறந்தர்கள் மூவரும் இந்துக்கள். நான் இஸ்லாமிய மதத்தைச்சேர்ந்தவன். நான் எதற்காக இந்த உதவியைச் செய்ய வேண்டும்..

ஏனென்றால் அவர்கள் என் இந்திய நண்பர்கள். முடிந்தால் கலை நிகழ்ச்சியை நிகழ்த்துவதை விட இப்படி நல்ல காரியங்கள் ஏதாவது செய்ய முயற்சி செய்யுங்கள். முடிந்தால் உங்கள் அமைப்பின் மூலம் இந்த மாதிரி நல்ல காரியங்கள் செய்ய முயற்சியுங்கள்.

கலை நிகழ்ச்சிகள் தேவைதான். வேண்டாமென்று சொல்ல வில்லை. ஆனால் இங்குள்ள சட்ட திட்டங்கள் நம்மை பல விஷயங்களில் எதுவும் செய்ய முடியாமல் தடுத்து விட்டாலும் நமது இந்திய நண்பர்களுக்கு ஏதாவது நல்லது செய்தோமானால் அட்லீஸ்ட் நம்முடைய அமைப்பிற்கு நல்ல பெயரும் நமக்கு ஆத்ம திருப்தியும் கிடைக்கும் என்றார்.

நான் நண்பர்களோடு உணவை முடித்து விட்டுத் திரும்பும் போது வயிறு மட்டுமல்ல இதயமும் கனத்துப் போயிருந்தது.



# கடவுளுக்கு ஒரு வாடகை வீடு

உமா சௌந்தர்யா

**போ**டா...நாயே..

இது வழக்கமான வார்த்தைதான் நீங்கள் ஒன்றும் கலவரமாகாதீர்கள்.

“எதுக்குடா..என்ன இப்ப திட்ற..”என்றான் சிவ சாமி.

“மூடிகிட்டு போயிரு..இல்ல இன்னும் அசிங்கமா திட்டுவேன்”என்றான் பாஸ்கரன்.

பாஸ்கரன், சாலையில் கடவுளர்களின் படம் வரைபவன்.அவன் சாக்பீஸில் புகுந்து கொள்ள..மத பேதமின்றி கடவுளர்கள் வரிசையில் நின்றனர்.

அவன் சிநேகம் வேண்டி அவனுடனேயே பயணித்தனர்.அவன் உண்ணும் போது.. அவர்களும் உண்டனர். அவன் தேநீர் இளைபாற்றலில் அவர்களும் கலந்து கொண்டனர்..விருப்பபட்டவர்கள் சுருட்டும்..புகைத்தனர்.

இதுவும் தெய்வங்களுக்கு நன்றாகத்தான் இருந்தது.கை வச வரங்கள் பற்றிய கவலை இல்லை. பள்ளி எழுச்சையில்.. பச்சை தண்ணீரில் கிடு கிடுக்க குளிக்க வேண்டியதில்லை..இவனை போல அழுக்கு சட்டையுடனேயே அலைவதிலும்,ஒரு அலட்ச்சியமும்... அழுத்தமும்..அலாதியான இன்பமும் இருந்தது.குறிப்பாக..கஷ்ட.. நஷ்டங்களை..பகிர்ந்து கொண்டனர். கடவுள்களுக்கு என்ன கஷ்டமே.. இருக்காதா என்ன..

“சரி..வாடா...போகலாம்”என்றான் சிவ சாமி.

“எங்க..”என்றான் பாஸ்கரன். பள்ளிடுக்கில் புகைந்து கொண்டிருந்த பீடியய் கடித்தபடி.

“அதான் அந்த சக்தி நகர் ல ஒரு வீடு இருக்குன்னு சொன்னாங்க இல்ல..அத்த போய் பார்த்துட்டு வரலாம்”என்றான்

“அங்க மட்டும் என்ன சொல்ல போறாங்க... ரோட்டுல பிச்சை எடுக்குறவனுக்கு வீடு கிடையாதுனு சொல்வாங்க...ஊரெல்லாம் கூட்டி கிட்டுபோய் என்னை அசிங்க படுத்திறி யா “என்றான் பாஸ்.

“அட..அத விடு.போன தடவை மிஸ் ஆயிருச்சு.. இப்ப தான் ரொம்ப தள்ளி பார்க்கிறோம் இல்ல.... யாருக்கும் தெரியாது”என்றான் சிவா.

“அப்புறமா தெரிஞ்சா..”என்றான்.

“அப்ப பார்த்துக்கலாம்...இப்ப கிளம்பு”என்றான் சிவா,வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில்.

இவர்களின் வாயயே பார்த்திருந்த கடவுள்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்,காத்திருந்தது வீணாகி விடுமோ என்று.

பாதியில் வரையப்பட்டிருந்த அனுமனும்.. கொஞ்சம் திகைத்தார்.

“அப்படியெல்லாம்..பாதியில விட்டுட்டுவர முடியாது.வெயிட் பன்னு”என்றவன் வேகமாக வரைய தொடங்கினான்.ஆஞ்சினேயர் ஆசுவாச மானார்.

சக்தி நகரில் கூரை வீடுகளும்,ஓட்டு வீடுகளும் மாறி மாறி இருந்தன.இதில் எதுவாக இருக்கும் என்றபடி பார்த்து கொண்டு வந்தனர் இருவரும். அங்கிருந்த ஒருவரிடம்”க்கா...இங்க வூடு ஒன்னு காலியா..இருக்குன்னாங்க...”என்று இழுத்தான் சிவ சாமி.

“”இங்க நாலு வூடு காலியா இருக்கு..எது உனக்குன்னு தெரியலையே”என்றாள் அவள்.இது வேறயா...என்று எண்ணிய படி.சட்டைக்குள் கை வைத்து நெஞ்சை தேய்த்து கொண்டான் பாஸ்கரன்.

“கிழக்கு பார்த்த வீடு..னு சொன்னாங்க..சரி வா பார்க்கலாம்”என்றான் சிவா.

ஒருவழியாக வீட்டை கண்டுபிடித்தனர்.ஒரே அறை, ஓட்டு வீடு.போதும் ஒருத்தனுக்கு.ஒன்னும் இல்லை ஒரு பாய்...ஒரு பையில் நாலு சட்டை,பேண்ட் தான். படுத்து எழுந்து செல்வதற்கு ஒரு இடம்.

கண்ட இடத்தில் படுத்து உறங்கினான்.காற்றும்,மழையும் அவன் புகைக்கும் பீடியும்,அவனைஇருமி கொண்டிருக்கும் நோயாளி ஆக்கியது.சிவசாமியால் பொருத்து கொள்ள முடியவில்லை.முண்ணூறு...நானுருக்கு ஒரு வீடு பார்க்கலாம் என்றான்.

பாஸ்கரன் ஒத்துக்கொள்ளவில்லை.அவ்வளவு வருமானம் இல்லை.சாப்பாட்டுக்கே சரியாக உள்ளது. வாடகை எல்லாம் தர முடியாது.என்றான்.

நான் பார்த்துக்குறேன் என்று இருந்தான் சிவ சாமி.

அப்படி ஒன்றும் பால்ய பழக்கம் அல்ல இருவருக்கும்.

சிவ சாமி பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்து.. அதை எடைக்கு போட்டு பிழைப்பவன்.மனைவியும் ஒருகுழந்தையும் உள்ளது.

திருமணத்திற்கு பிறகு தான் இவனும் ஒரு வீடு பார்த்து அமர்ந்தான்.

அப்படி ஒருவேளை நேரத்தில் தான் பாஸ்கரனை கண்டான்.எவன் சட்டைய்யோ கொத்தாக பிடித்த படி சண்டை யிட்டு கொண்டிருந்தான்.

ஊரே வேடிக்கை பார்த்தது.அது மனித வியாதி. அடுத்தவன் பிரச்சனை பற்றிய அக்கரை இல்லை.காரணம், நேரமின்மை...எனக்கு ஏன் வம்பு...சும்மா நாமும் வேடிக்கை பார்ப்போம்...என்னையே அடிச்சுட்டா.... என பல அட்டைகள் அவர்களின் சட்டை பையில்.

கோணிப்பையய் தோளிலிருந்து இறக்கியபடி சிவ சாமி தான் விலக்கினான்...”யேய்..யேய்.. இருங்கப்பா...”என்றபடி,முதலில் பாஸ்கரனை பிடித்து இழுத்து நிறுத்தினான்.

“ஏப்பா..ஒரு பெரிய மனுசனை இப்படி ரோட்டுல சட்டையய் புடிச்சு இழுக்குற”என்றான் சிவ சாமி.

“யாரு இவனா பெரிய மனுசன்...வெத்தலைய போட்டு படத்து மேல புளிச்சுனு துப்பிட்டான்...இவனா பெரிய மனுசன்”என்று எகிறினான்.

சிவ சாமி அந்த பெரியவரை முறைத்தான்.”ஏயா... ஈர்க்குச்சியில இவ்வளவு பெரிய நாமம் போட்டு இருக்க..சாமி படத்து மேல இப்படி துப்பி வெச்சு இருக்குற..”என்றான்.ஆத்திடத்துடன்.

“கவனிக்காம துப்பிட்டேன்..அதுக்கு சட்டையய் பிடிப்பானா”என்றார்.

“யோவ்...அதுக்கொன்னும் நான் சட்டைய..புடிக்கல..நீ ஏன்டா ரோட்டுல..வரையற..அப்படித்தான் துப்புவேன்னு நீ சொன்னதுக்குதான் புடிச்சேன்”என்றான் பாஸ்கரன்.

“அதுவும் இல்லாம...பொது இடத்த அசிங்கம் பன்றனாம்..பிச்சை எடுக்க..இது ஒன்னும் தான் உனக்கு வழியா...அப்படினு எல்லாம் பேசிச்சு..அதான் எனக்கு கோவம் வந்திருச்சு”என்றான்.

சிவ சாமி பெரியவரை முறைத்தான்.

நான் பார்த்துக்குறேன் என்று இருந்தான் சிவ சாமி.

அப்படி ஒன்றும் பால்ய பழக்கம் அல்ல இருவருக்கும்.

சிவ சாமி பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்து.. அதை எடைக்கு போட்டு பிழைப்பவன்.மனைவியும் ஒருகுழந்தையும் உள்ளது.

திருமணத்திற்கு பிறகு தான் இவனும் ஒரு வீடு பார்த்து அமர்ந்தான்.

அப்படி ஒருவேளை நேரத்தில் தான் பாஸ்கரனை கண்டான்.எவன் சட்டைய்யோ கொத்தாக பிடித்த படி சண்டை யிட்டு கொண்டிருந்தான்.

ஊரே வேடிக்கை பார்த்தது.அது மனித வியாதி. அடுத்தவன் பிரச்சனை பற்றிய அக்கரை இல்லை.காரணம், நேரமின்மை...எனக்கு ஏன் வம்பு...சும்மா நாமும் வேடிக்கை பார்ப்போம்...என்னையே அடிச்சுட்டா.... என பல அட்டைகள் அவர்களின் சட்டை பையில்.

கோணிப்பையய் தோளிலிருந்து இறக்கியபடி சிவ சாமி தான் விலக்கினான்...”யேய்..யேய்.. இருங்கப்பா...”என்றபடி,முதலில் பாஸ்கரனை பிடித்து இழுத்து நிறுத்தினான்.

“ஏப்பா..ஒரு பெரிய மனுசனை இப்படி ரோட்டுல சட்டையய் புடிச்சு இழுக்குற”என்றான் சிவ சாமி.

“யாரு இவனா பெரிய மனுசன்...வெத்தலைய போட்டு படத்து மேல புளிச்சுனு துப்பிட்டான்...இவனா பேரிய மனுசன்”என்று எகிறினான்.

சிவ சாமி அந்த பெரியவரை முறைத்தான்.”ஏயா...

ஈர்க்குச்சியில இவ்வளவு பெரிய நாமம் போட்டு இருக்க..சாமி படத்து மேல இப்படி துப்பி வெச்சு இருக்குற..''என்றான்.ஆத்திடத்துடன்.

''கவனிக்காம துப்பிட்டேன்..அதுக்கு சட்டையய் பிடிப்பானா''என்றார்.

''யோவ்...அதுக்கொன்னும் நான் சட்டைய..புடிக்கல..நீ ஏன்டா ரோட்டுல..வரையற..அப்படித்தான் துப்புவேன்னு நீ சொன்னதுக்குதான் புடிச்சேன்''என்றான் பாஸ்கரன்.

''அதுவும் இல்லாம...பொது இடத்த அசிங்கம் பன்றனாம்..பிச்சை எடுக்க..இது ஒன்னும் தான் உனக்கு வழியா...அப்படினு எல்லாம் பேசிச்சு..அதான் எனக்கு கோவம் வந்திருச்சு''என்றான். சாமி பெரியவரை முறைத்தான்.''அவனுக்கு தெரிஞ்சதை வைத்து..அவன் பொழைக்கிறான்..உனக்கென்ன...நீ எல்லாம் ஒரு ஆளு... போய்யா...''என்றான்.

முனு முனுத்தபடியே...பெரியவர் நகர்ந்தார்.

சிவ சாமி,பாஸ்கரனை ஊடுருவினான்..களையான சிவந்த முகம்..கண்களில் பளிச்சென்ற ஒளி...சர்ச்சில் ஏசுவை பார்த்த சாயல்..

''தேங்க்ஸ் ணே...''என்றான் பஸ்கரன்.

புன்னகையுடன் அவன் வரை படத்தை பார்த்தான்... சாலையிலும் ஏசு அவனை போலவே..சிரித்திருந்தார்,

வரேன் என்பதாய் காய் அசைத்து விட்டு சிவ சாமி கிளம்பினான்.

அதற்கு பின்பான சந்திப்புகள் இயல்பாய் நடந்தன... சாப்பிடும் நேரங்களில் ஒருவருக்காக ஒருவர் காத்திருந்து இணைந்து உண்டனர்.

சிரித்து பேசி கிடந்தனர்.உலகம் ஒரு அடி தள்ளி நின்று அவர்களை வேடிக்கை பார்த்தது.அவர்களதனை விலக்கினர்.

பெரும் தயகத்திற்கு பின்,பாஸ்கரன் சிவ சாமி வீட்டிற்கு சென்றான்.அவன் மகனுடன் மிகவும் அன்பானான். அவன் அன்றாட சம்பாத்தியத்தில்,குழந்தைக்கான விளையாட்டு பொருளுக்கான பங்கும் இருந்தது.

அவன் வரையும் கடவுளர்களில் அக்குழந்தையின் சாயல் ஒட்டிக்கொண்டது.

ரயில் நிலையத்திலும்..பஸ் ஸ்டேண்டிலும்... பாஸ்கரன் உறங்கினான்.

சிவசாமி யின் வீடும் ஒற்றை அறை குடிசை.அங்கு செல்ல பாஸ்கரனும் தயங்கினான்.

பனியும் குளிரும்.அவன் சத்தில்லா உணவும் அவன் உடல் நலம் குறைத்தது.

இவன் இருமலை பொருத்து கொள்ள முடியாமல் சிவ சாமி இவனுக்காய் வீடு பார்த்தான்.இவனுக்காய் வீட்டு சாப்பாடு கொண்டு வந்தான்.

''சாப்பாடு எல்லாம் கொண்டு வராதே...தங்கச்சியய் கஷ்டப்படுத்தாதே..''என்று கண்டிப்புடன் சொல்லி விட்டான் பாஸ்கரன்.

அதனால் அது நின்றது.வீடு பார்ப்பது மட்டும் நடந்து இப்போது முடிந்துள்ளது.

ஒரு சாமி படம் மாட்டி வீடு குடி புகுந்தான் பாஸ்கரன்.

கத கதப்பாய் உறங்கினான்.உடம்பு சரியானது.முகம் தெளிவாக...வரையும் கடவுள்களும் அதிக அழகாயினர். ரோட்டில் போவோர்.. வருவோர்க்கும்...வரங்களை வாரி இறைத்தனர்.

நட்பின் நீள அகலத்தில் இருவரும்,அலாதியாய் நீந்தி கிடந்தனர்.,

''யாருப்பா உள்ள...''குரல் கேட்டு

வெளியே வந்தான் பாஸ்கரன்.

ஒரு நடத்தர வயது ஆணும்,ஒரு பெண்ணும் நின்றிருந்தனர்.

பாஸ்கரன் நெற்றி சுருக்கினான்.

''அந்த ரோட்டுல படம் வரைபவன் நீ தானா'' என்றான் வந்தவன்.

''ஆமா..அதுக்கென்ன..''என்றான்

வந்தவன் சற்று பின் வாங்கினான்.

சின்ன அமைதி வந்து அமர்ந்தது அங்கே..

அந்த பெண் தொடர்ந்தாள்.''அந்த மாதிரி ஆளுகளுக்கு எல்லாம் நாங்க வீடு வாடைகைக்கு கொடுப்பதில்லை''என்றாள்.

''எந்த மாதிரி...''என்றான்.

அவர்கள் தடுமாறினர்.

''நான் பிச்சை எடுக்கவில்லை..என் படத்திற்கு..என் ஆர்ட்க்கு கொடுக்கும் சன்மானம்..கூலியில் தான் நான் வாழ்கிறேன்...''என்றான் அழுத்தமாக.

''அப்படியே...பிச்சை எடுத்தாலும் உங்களுக்கு

என்ன..கரெக்டா வாடகை குடுத்திருவேன்..எந்த சத்தமும் இல்லாமல்..வர்ரது போறது தெரியாமல் இருந்திடுவேன்... வேறென்ன வேண்டும்''என்றான்.

"இருக்கட்டும்..எங்களுக்குன்னு ஒரு இது இருக்கு... உன்ன மாதிரி ஆளுங்களுக்கு வீடு தர்ரது இல்ல... கெளம்பிக்க..."என்றான் வந்தவன்.

"அந்த இது எது....கௌரவமா.."என்றான் பாஸ்கரன்.

அவர்கள் கலவரமானார்கள்.சண்டை இழுத்து விடுவானோ என்று பயந்தனர்.

எதையோ யோசித்த பாஸ்கரன்"உன்ன அடிக்கடி பார்த்த மாதிரி இருக்கு..

தப்பா நெனச்சுக்காத..சந்தைக்கு பின்னால இருக்குற டாஸ்மார்க்

வாசல்ல..அடிக்கடி விழுந்து கெடப்ப...இல்ல... நான் பார்த்து இருக்கேன்"என்றான்.

வந்தவன் கோபமுற்றான்.."என்னை பத்தி பேசாத... ஒழுங்கா காலி பன்னு"என்றான்.

"சேத்துல பொறண்டு எந்திரிக்கும் போது இல்லாத கௌரவமா...நான் குடி இருக்குறதுல இருக்கு..."என்றான்.

மனித மூளைக்குள் அப்படித்தான் ரெஜிஸ்டர் ஆகி இருக்கு.

கௌரவம் என்பது குணத்தை பொருத்தும்,நடத்தை பொருத்தும் அமைவதே..இல்லை...பணம் வேலை.. படோபகரங்களை பொருத்தே..நிர்ணயிக்க படுகிறது. அப்படி இருப்பவர்களின் தவறுகளும்,அசிங்கங்களும் கூட அங்கீகரிக்கப்படுகிறது...அது ஒன்றும் தப்பில்லை என்பதாய்...ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தவறுகளை தட்டி கேட்பதுமில்லை..சரிகளை கொண்டாடுவதுமில்லை..

எல்லோரும் அப்படி இல்லை..நல்ல மனசுக்காய்.. எண்ணத்திற்காய்..நேர்மைக்காய்..சில இதயங்கள் காத்து தான் இருக்கின்றன.அவைகள் ஒன்றிணைந்து..ஒரு உலகை அமைத்து, வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஓடோடி வந்து கொண்டிருந்தான் சிவ சாமி.வந்து மூச்சிரைக்க நின்றான்.

"அக்கா..என்ன விசயம் கா..."என்ற தயக்கத்துடன்.

"நீ..சொல்லவே இல்லையே..வீடு கேட்டப்ப..இந்த மாதிரி ஆளுக்கெல்லாம் வீடு தர்ரதில்லை...காலி பன்ன சொல்லு"என்றாள் அந்த பெண்.

"அவனால ஒரு பிரச்சைனையும் இல்ல....அத நான் பார்த்துக்குறேன்"என்றான்.

"அந்த பிச்ச காச...நாங்க வாடகையா வாங்கனுமா"என்றான் வந்தவன்.

பாஸ்கரன் கல கலவென சிரித்தான்...சிவ சாமி முறைத்தான்.

"டேய்..நீ குடிக்கிற டாஸ்மார்க் கில் தான்...சில்லைரையய் நோட்டாக மாத்தறேன்.அப்படி பார்த்தா..என் பிச்ச காசு எப்பவோ..உன் கைக்கு வந்திருக்கும்"என்று சொல்லி சிரிப்பை நிறுத்தினான்.

மகனை அசிங்கப்படுத்துவதாக அந்த பெண் ஆத்திரமுற்றாள்."இந்த பேச்செல்லாம் வேண்டாம்..இப்பவே கெளம்பு....கெளம்புன்னுன்னு சொன்னேன்"என்றாள்.

சிவ சாமி..பாஸ்கரனை பார்த்தான்.

அவன் உள்ளே சென்று பையய் எடுத்து வந்தான். பதில் சொல்லாமல்..நடக்க தொடங்கினான்.

சிவ சாமி சின்ன தயக்கத்திற்கு பின்,அவனை பின் தொடர்ந்தான்.

பஸ் ஸ்டாப்பில் வந்து அமர்ந்தான்.சிவ சாமி யும் வந்து சேர்ந்து அருகில் அமர்ந்தான்.

இருவரும் இரண்டு நிமிடம் முகத்தை பார்த்து இருந்தனர்.பின் இருவரும் சிரித்துக்கொண்டனர்.

"வுடு..மாப்ள..வேற வூடு பார்ப்போம்"என்றான் சிவ சாமி.

போதும்..விட்டுரு என்பதாய் கும்பிடு போட்டான் பாஸ்கரன்.

நல்ல இடமாய் பார்த்து,சாலையய் அவன் வைத்திருக்கும் பிரஷ் சால் சுத்தம் செய்தான்,வரைய தொடங்கினான். கண்ணனும் குசேலனுமாய் வரைந்து முடித்தான்.

வீசப்பட்ட சில்லரையய் பையில் சேகரித்தான். பொழுது சாய்ந்தது..

அவனும் சாய இடம் தேடினான்..ஒரு கோவிலுக்கு பின் அடக்கமான இடம் அமைந்தது.

பையய் தலைக்கு கொடுத்து படுத்தான்.கோவிலுக்குள் இருந்த தெய்வம்,நாளைக்கு நான் தான் பஸ்ட் என்பதற்கு அச்சாரமாய்,வந்து அவன் அருகில் படுத்து கொண்டது.. குளிருக்கு இதமாய் அவனை அணைத்துக்கொண்டு.




கவிஞர்.க.திருமாவளவன் (கனடா)

# காடு

அடர்பச்சை இருளுடுத்த
பெருமழைக் கானகம்
நுழையும் ஒவ்வொரு கணத்திலும் அவிழ்கிறது
ரகசிய முடிச்சுகள்.
புள்ளொலி எழுகிற புலரி வசீகரம்
வழிந்து
பெருகி
எழுபகலுச்சியில் உக்கிரங்கண்டு
தணிந்து
மம்மலின் மாய எழிலில் மயங்கித் திளைக்கிறேன்
இருள்பெருக்கி ஒளி புகுத்தி
விழி பறிக்கும் வித்தையில்
பொறி கலங்கிச்
சித்தம் சிதைந்து மீள்கிறேன்
அஞ்சி
நுழைய மறுத்தொதுங்கும்
அகத்தை விஞ்சி ஆசை எழுகிறது.
பூனைச்சிறுரோமமென மென்பாசி படர்
அல்லிக் குளத்தோரம்
பெருமரக் காவற்பரணில்
வேடுவனின் விழி பொருத்தி
தீராத்தாகம் பெருகி வழிய தனித்திருந்தேன்
அல்லில் அவிழ்ந்த அல்லி அழகை
அருந்தித் திளைத்தேன்
திகட்டி
மனம் பேதலித்து
கிறங்கி
மீளும்
ஒவ்வொரு கணமும் அடர்பச்சை.
இன்றும்அங்ஙனமே
அச்சமும் இச்சையும் அகத்துள் எரிய
நுழைந்தேன் அடர்வனத்துள்
மதுவந்தியில்
காமம் காந்திவழியும்
ஆலாபனையென குரலுருகப் பாடிற்று
ஒரு சாம்பல் பட்சி
இன்று புதிதாயப் பிறந்தோமென
மந்திரகுரல்பற்றித் தொடர்ந்தேன்
என்னை ஏய்த்து இழுத்து உள்ளே
அழைக்கிறது
இனிக் காடு தழுவுதலதன்றி
மீள வழியில்லை
இது அவள் வனம்



# பாசம்

## பழனி குமார்

மழைக்கு ஒதுங்கிய சிறுவன் மரத்தடிக்கு வந்தான்..

கையில் ஒரு காகித பொட்டலம்..

பாதுகாப்பாக கால்சட்டையில் வைத்தான் நனையாதிருக்க..

அருகில் நின்றவர் அதட்டியபடி கேட்டார்..

ஏனிந்த பதற்றம்.. எதை மறைக்கிறாய்?

எங்கிருந்து வருகிறாய் என்றவரிடம்

குளிரில் நடுங்கியபடி கூறினான்..

வீட்டில் படுத்துள்ள அம்மாவிற்கு உணவு எடுத்து செல்கிறேன் என்றவனிடம்.. எங்கு வாங்கினாய்.. திருடனியா என்று மிரட்டினார்.

இல்லை சார்..எனக்கு பள்ளியில் தந்த மதிய உணவில் சிறிது மட்டும் சாப்பிட்டு மிச்சத்தை எடுத்து காகிதத்தில் மடித்து எடுத்து வருகிறேன். மழையில் நனையாதிருக்கவே கால்சட்டையில் வைத்தேன். பாவம் அம்மா பசியுடன் இருப்பார்கள் என்றதும் கேட்டவர் கண்கலங்கினார்.

தாய்ப்பாசத்தின் உன்னதத்தை உணர்ந்து உள்ளம் சிலிர்த்தார்...

மதிய உணவே மிகவும் சிறிது அளவு தான். ஆனால் அதில் பாதியை மட்டும் சாப்பிட்டு விட்டு மீதியை தனது தாய்க்கு எடுத்து செல்லும் அந்த செயலால் மிகவும் நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்த அந்தப் பெரியவர் கட்டி அணைத்து வாழ்த்தினார்.

தானே வலிய சென்று மேலும் உணவை வாங்கி அவன் கையில் அளித்து பிறகு தனது வாகனத்திலயே அவனை வீட்டிற்கு அழைத்து சென்றார்.


நேயம் உள்ளவர்கள் இன்னும் மண்ணில் வாழ்த்தான் செய்கிறார்கள். மனிதம் இந்த உலகில் வேரூன்றித் தழைத்து விட்டால் இனி வரும் தலைமுறைகளும் இன்பமாக வாழும் என்பது எனது விருப்பம், எண்ணம்.

மொழி பெயர்ப்பு

தமிழில்: க.நா.சுப்ரமணியம்(க.நா.சு)

ஆங்கிலத்தில்: அனாமிகா ரிஷி


# அனுபவம்



மழை பெய்யும்போது அதில் நனைந்தால்
சளி பிடிக்கும் என்று நனைய மறுத்துவிட்டேன்
காற்று அடிக்கும்போது தொண்டையில்
புழுதி படியும் இருமல் வந்து தூங்க
விடாது துன்புறுத்தும் என்று
ஜன்னல்களைச் சாத்திவிட்டேன்
யாரோ எழுதிய நூல்கள் கிடைக்கும்போது
படித்துப் படித்துப் பார்வை
குறுகிப்போகிறதே தவிர ஞானம்
பிறக்கவில்லை என்று படிப்பதை
நிறுத்திவிட்டேன். புஸ்தகங்களைத்
தலைமாட்டில் வைத்துக்கொண்டு
படிக்காமல் இருக்கப் பழகிவிட்டேன்
காதலிகள் தேடிவந்தபோது ஆசை
அடித்துக்கொண்டாலும்
ஊரார் ஏதாவது சொல்வார்கள்
ராஜி ஆக்ஷேபிப்பாள் என்று பயந்து ஒதுங்கிப்
போய்விட்டேன். காதலி
வேறு யாரையோ நாடிப்
போய்விட்டாள். அவள்
போவதை சாத்திய கதவு
வழியாகப் பார்த்துப் பெரு
மூச்சு விட்டு நின்றேன்.
சாவு என்கிற அனுபவம் ஏற்படும்போது
மறுபடி அதை விவரிக்க ஒரு
சந்தர்ப்பம் ஏற்படும் என்று
இரண்டாவது சாவுக்கும்
காத்து நிற்கிறேன்.

★

*While it rained*
*apprehensive about being afflicted with cold*
*I refused to get drenched.*
*While the wind blew*
*apprehensive about dust getting accumulated in the throat*
*and cough preventing me from sleep and so harassing*
*I closed the windows.*
*While getting books written by some*
*that reading non-stop results in your vision shrinking*
*with no access to wisdom at all*
*_ I stopped reading.*
*Have learnt to place the books*
*beside my head without reading.*
*When darlings came seeking me*
*though filled with desire*
*apprehensive about people saying something,*
*and Raji objecting*
*I moved away in fear.*
*The darling went after someone else.*
*Eyeing her through the closed door*
*I stood there sighing.*
*That, when faced with the experience*
*called Death*
*I would have another opportunity to describe it*
*I keep waiting for the second Death too.*



# அவர்கள்

திருமலை சுந்தா

அவர்கள் தனித்து உரையாடிய காலங்கள் எப்பவோ கரைந்தோடி விட்டது. இப்போது அவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில்........ வாழுகின்றார்களா...???.

அலுவலகத்தில் அவர்களின் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. முதல் நாள் அவள் அலுவலகத்திற்கு வந்த போது அவன் தான் அவளை முதன் முதலாக வரவேற்றான்.

தன்னை தானாகவே அறிமுகப்படுத் திக் கொண்டான். அவள் அவனோடு புன் னகையினால் தான் பேசினாள். அலுவலகத்தில் அவளின் எல்லாத் தேவைகளுக் கும் அவனே முதல் ஆளாய் வந்தான்.

கண்களால் பேசியவர்கள் வாய்களினால் பேசத் தொடங்கினர். பிறகென்ன அவர்களின்நெருக்கம் கூடத்தொடங்கியது. இந்த நெருக்கம் அலுவலகத்தில் பேசும் பொருள் ஆனது. முடியாதென்ற நிலை உருவான போது அவன் அவளிடம் ஏதும் சொல்லாமல் வேறு இடத்திற்கு இடமாற்றம் பெற்று சென்று விட்டான்.

அவளுக்கு அவனின் செயல் அதிர்ச்சியாக இருந்தது. அலுவலக வேலைகளு ம் சரியாக செய்ய முடியாமல் தவித்தாள்.

அவன் அப்போது வேலை பார்த்த இடம் அவளுக்கு தெரிந்திருந்தாலும் அவனை அவள் சந்தித்து பேச விரும்பவில்லை.

காலங்களும் விரைவாக ஓடியது. வீட்டில் அவளுக்கு திருமண பேச்செழுந்தது.

அவள் எந்த மறுப்பும் கூறாமல் மௌனம்

சாதித்தாள். அன்று அவளை பெண் பார் க்க மாப்பிள்ளை வீட்டார் வரப் போவதாக அவள் அறிந்துகொண்டாள். ஆனால்.....

அவளின் மனதில் நெருடல்..???. அவன் அடிக்கடி நினைவில் வந்து போனான்.

நடப்பது நடக்கட்டும் என அவள் தன்னை பக்குவப் படுத்திக் கொண்டாள். அன்று மாலை மாப்பிள்ளை வீட்டார் அவளின் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

அவளின் தாய் அவளை மாப்பிள்ளை வீட்டாருக்கு காட்டுவதற்காக அழைத்து வந்தாள். அவளும் குனிந்த தலையோடு வந்தாள்.

அந்த நேரமும் வந்தது.....

அவள் தலை நிமிர்ந்து.....

அவளின் கண்கள் அதிர்ச்சியில் வந்திரு

ந்த மாப்பிள்ளையை....

அவன்தான் அவளுக்கு மாப்பிள்ளையா க வந்திருந்தான். அவள் தன்னையே நம்பமுடியாமல்.....

அவன் அவளை பார்த்து......

அவனின் அந்த புன்னகை....

அவள் அந்தரத்தில் இன்ப நினைவுகளுடன் நீந்தவா தொடங்கினாள்....???